தர்மசக்கரம்



ரக்தாக்ஷ ஸ்ரீ ஐப்பசி மீ   சக்கரம் 33 ஆரம் 10

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115   திருச்சி ஜில்லா

ஸ்ரீ தாயுமானவர் இயற்றிய பாடல்கள்

உபநிஷதங்கள் கூறுகின்ற பரதத்துவங்கள் யாவற்றையும் தாயுமானவர் பாடல்களில் காணலாம். இவருடைய பாடல்கள் யாவும் மறைந்துபட்டுப்போகாது தமிழ் மக்கள் கைவசம் இருப்பது தமிழ்நாட்டின் தவச்செல்வமாகும். ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு இவருடைய நூல்கள் ஒப்பற்ற அருள்விருந்தாக அமைந்துள்ளன. தற்போது 'மலைவளர் காதலி' என்னும் பாடல்களுக்கு ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் விரிவான விளக்கம் தந்துள்ளார்கள். இதுவரை சுமார் 9 தலைப்புகள் கொண்ட பாடல்களுக்கு விரிவான விளக்கம் தந்துள்ளார்கள். ஒவ்வொன்றும் தனித்தனி நூலாக யாவரும் படித்துப் பயன்படும் வகையில் வெளிவந்துள்ளது. அவைகளாவன ;—

1.	பரசிவ வணக்கம்	கிரௌன் சைஸ்	பக்கம் 44	விலை	ரூ. 1-00
2.	பரிபூரணானந்தம்	,,	,, 160		ரூ. 3-00
3.	சின்மயானந்த குரு	,,	,, 166		ரூ. 3-00
4.	மௌனகுரு வணக்கம்	,,	,, 154		ரூ. 3-00
5.	ஆனந்தமானபரம்	,,	,, 148		ரூ. 3-00
6.	சுகவாரி	,,	,, 148		ரூ. 3-00
7.	கருணாகரக் கடவுள்	,,	,, 154		ரூ. 3-50
8.	எங்கும் நிறைகின்ற பொருள்	,,	,, 108		ரூ. 2-50
9.	மலைவளர் காதலி	,,	,, 48		ரூ. 1-50

மேற்கண்ட ஒன்பது நூல்களையும் ஒரே சமயத்தில் தபால்மூலம் தருவித்துக் கொண்டால் தபால் கட்டணத்திற்காக ரூ. 4-00 மட்டும் சேர்த்து அனுப்பித் தந்தால் போதுமானது.

ஸ்ரீ தாயுமான சுவாமி பாடல்கள் மூலம் மட்டும் தனிப் புத்தகமாக அச்சிடப்பட்டுள்ளது. இதில் பாடல்கள் பதம் பதமாகப் பிரிக்கப்பட்டிருப்பதுடன் அரும் பதவுரைகளும் பாடல்களுக்கு அடியிலேயே தரப்பட்டிருக்கின்றன. இது வாசிப்பவர்கட்கு மிக எளிதாக இருக்கும்.

அழகிய கெட்டி அட்டை பைண்டில் பிரசார விலை ரூ. 6-00

தபாற் கட்டணம் ரூ. 3-50.

'THUS SPEAKS TAYUMANA ŚWAMIGAL'

(New Release — in English)

Crown Size 84 pages — Price Rs. 3/50.

Postage to get by ordinary post 30 paise.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115

திருச்சி ஜில்லா

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 33	ரக்தாக்ஷி ஞு ஐப்பசி மீ	ஆரம் 10

பொருளடக்கம்

			பக்கம்
1.	பிரார்த்தனை		361
2.	அருள் விருந்து		362
3.	பரமஹம்சர் புகட்டிய பெருநெறி விளக்கம்		363
4.	எந்நாள் கண்ணி		366
5.	விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து — 9		368
6.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்		369
7.	ஞான வெட்டியான் — 10		371
8.	ஸத் ஸம்பாஷணை		373
9.	ஸ்ரீமத் பாகவதம்	சுவாமி ஸதானந்தர்	375
10.	சிரத்தை	யதீஸ்வரி கிருஷ்ணப்ரியா	377
11.	இந்தியாவுக்கு வேண்டிய கல்வி		379
12.	சுவாமி பிரேமானந்தர் வாழ்வும் வாக்கும்	பிரம்மச்சாரி சேகர்	381
13.	சனாதன தர்மத்தின் சிறப்புகள்	திரு. V. S. நரசிம்மன்	385
14.	என் யாத்திரை அனுபவங்கள்	சுவாமி துருவானந்தர்	389
15.	குறிப்புகள்		393
16.	செய்திகள்		400

வருட சந்தா: உள்நாடு	**ரூ. 15-00**	**வெளிநாடு**	**ரூ. 45-00**
தனி இதழ் ,,	**ரூ. 1-50**	**,,**	**ரூ. 4-00**

அந்தர்யோக விவரங்கள்

திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீவைகுண்டத்தில் 21—10—84 ஞாயிறு

இடம்: அருள்மிகு ஸ்ரீ கள்ளபிரான் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 28—10—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

சேலத்தில் 4—11—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனைக் கொட்டகை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

சென்னை—கோபாலபுரம் லாயிட்ஸ் சாலையில் 4—11—84 ஞாயிறு

இடம்: **D. A. V.** *ஹையர் செகண்டரி பள்ளி (ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தயானந்த வேதிக் ஸ்கூல்)*

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—தூத்துக்குடியில் 4—11—84 ஞாயிறு

இடம்: ஸச்சிதானந்த சபையில்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

பெரியார் ஜில்லா—ஈரோட்டில் 11—11—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் சங்கம், பார்க்ரோடு

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—உமரிக்காட்டில் 11—11—84 ஞாயிறு

இடம்: அருள்மிகு ஸ்ரீ முத்தாரம்மன் திருக்கோவில்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

கரூரில் 11—11—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதீஸ்வரன் கோவில்

நேரம்: இரவு 6-00 மணிமுதல் இரவு8 -30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

தென்ஆற்காடு ஜில்லா—அவலூர்ப்பேட்டையில் 18—11—84 ஞாயிறு

இடம்: அகத்திஸ்வரர் ஆலயம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

தென்ஆற்காடு ஜில்லா—ஆவணிப்பூரில் 19—11—84 திங்கட்கிழமை

இடம்: அரசினர் உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர்யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33	ரக்தாக்ஷி ௵ ஐப்பசி ௴	ஆரம் 10

பிரார்த்தனை

माता च पार्वतीदेवी पितादेवो महेश्वरः ।
बान्धवाः शिवभक्ताश्च स्वदेशो भुवनत्रयम् ॥

— शंकराचार्यः

மாதா ச பார்வதீ தேவீ பிதா தேவோ மஹேச்வர: ।
பாந்தவா: சிவபக்தாஸ்ச ஸ்வதேசோ புவனத்ரயம் ॥

— சங்கராச்சாரியர்

பார்வதி தேவி என் அன்னை. மகேச்வரன் என் தந்தை. சிவ பக்தர்கள் என்னுடைய பந்துக்கள். மூன்று உலகங்களும் எனது தாயகமாகும்.

அத்தனாகி அன்னைஆகி ஆளும் எம்பிரானுமாய்
ஒத்துஒவ்வாத பல் பிறப்புஒழித்து நம்மை ஆட்கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார்
எத்தினால் இடர்க்கடல் கிடத்தி? ஏழை நெஞ்சமே!

— திருச்சந்த விருத்தம்

அருள் விருந்து

வெற்றிக்கு வித்தாவது நிறை மனது.

அழகனைத்துக்கும் இருப்பிடம் ஆத்மா.

நல்லொழுக்கமும், ஆணவமும் சேர்ந்திருக்க மாட்டா.

ஞானத்தை அடைதற்குப் பேச்சிலும் மிக்கது மௌனம்.

வெறும் பௌதிக முன்னேற்றம் மனிதனை மேலோனுக்க மாட்டாது.

தூய எண்ணத்தினுல் வருகிற நலனை சூழ்ச்சியினுல் சாதிக்க முடியாது.

ஒற்றுமையை வளர்ப்பது அன்பு, வேற்றுமையை வளர்ப்பது அகங்காரம்.

ஒருமை மனதுடன் பண்ணுகிற பிரார்த்தனைக்கு இறைவன் செவி சாய்க்கிருர்.

ஆர்வத்துடன் பிரார்த்தனை பண்ணுவது மனத் தெளிவை உண்டுபண்ணுகிறது.

நலத்தை ஆர்வத்துடன் செய்க. அதனுல் மனத்தினின்று தீமை அகற்றப்படுகிறது.

பாடுபட்டுச் சம்பாதித்து உண்பதில் அடைகிற இன்பம் வெறும் பணத்தால் வராது.

நல்லொழுக்கத்தால் அடைகிற பாதுகாப்பை ஒருவனுக்கு எந்த ஸ்தாபனமும் தரமாட்டாது.

உள்ளன்போடு செய்கிற தியாகத்தின் வல்லமையை எத்தகைய ஆடம்பரமும் அசைக்கமாட்டாது.

ஒரே ஆயுதத்தை ரண வைத்தியனும், கொலைபாதகனும் கையாளுகிருர்கள்; ஆனுல் விளைவு ஒன்ருக மாட்டா.

சுயநலத்துக்காக நேசிப்பது தூய அன்பு ஆகாது. நிலையற்ற நிலவுலக வாழ்வில் மிகைபட்ட பற்று வைக்கலாகாது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பக்தர்களோடு பரமஹம்சதேவர் தொடர்ந்து உரையாடிக்கொண்டிருக்கிறார்:

"காமம், காசு ஆசை என்னும் வெறியினல் யாண்டும் பீடிக்கப்பட்டவர்களாக உலகத்தவர் இருக்கின்றனர். கடவுள் சம்பந்தமான கருத்து எதையும் ஏற்றுக்கொள்ளும் பண்பாடு அவர்களிடத்து இல்லை. ஆகையினல்தான் அவர்களை நான் பெரிதும் பொருள்படுத்துவதில்லை. என் கவனம் முழுதையும் சிறுவர்களிடத்தே நான் செலுத்தி வருகிறேன். உலக ஆசை ஏதும் அவர்களுடைய உள்ளத்தினுள் இன்னும் இடம்பெறவில்லை. தூயமனம் படைத்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். இறைவனுடைய அரும்பணிக்குத் தகுதியுடையவர்களாகச் சிறுவர்கள் மாறியமைவது சாத்தியம். ஏற்கெனவே உலக பந்த பாசங்களில் அகப்பட்டுக்கொண்டு திணறுகின்ற முதியோர்களிடமிருந்து தெய்விகச் செயல் எதையும் எதிர்பார்க்க முடியாது. அன்னவர்களைத் திருத்தியமைக்க எடுத்துக்கொள்ளுகின்ற முயற்சிகள் யாவும் விழலுக்கிறைத்த நீர் போன்று வீணுகப் போகின்றன. தானியம் போன்று பதர் தென்படுகிறது. ஆனல் உணவு சமைப்பதற்கு அது பயன்படாது. அத்தகைய பதர் போன்றவர்கள் அவர்கள்.

புயல் காற்று அடித்து வீழ்ந்துபோன மாங்காய்க்கு நிகரானவர்கள் உலகத்தவர்கள். அது பழுக்கமாட்டாது. உலக ஆசையில் ஊறிக் கிடப்பவர்களைத் திருத்தியமைப்பதற்குப் பகீரதப்பிரயத்தனம் எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படியிருந்தும் அவர்களால் இறை வழிபாட்டுக்குரிய அரிய பெரிய செயல் எதையும் சாதிக்க இயலாது. அருள்துறையில் ஏதோ சிறிதளவு குற்றேவல் புரிவதற்குத்தான் அவர்கள் பயன்படுவார்கள். உலகத்தவர்களுக்குப் பணிவிடை பண்ண முயலுகிற ஒருவன் நல்ல கர்மயோகியாக இருக்கவேண்டும். நாய் வாலை நேர்ப்படுத்துவது போன்று உலகத்தவரைத் திருத்தியமைக்க முயலுவது ஆகாத காரியம். ஆனல் அதைக்குறித்துக் கர்மயோகி கவலைப்படுவதில்லை. நர சேவையை அவன் நாராயண சேவையாகக் கருதித் தன் கடமையைச் செய்கிறுன். ஆகையினல் அவன் எதைக் குறித்தும் ஏமாற்றம் அடைவதில்லை."

(Theosophy) தியாசபி என்று அழைக்கப்படுகின்ற பிரம்மஞான சபையின் அங்கத்தினர் ஒருவர் பரமஹம்சரைக் காண வந்து சேர்ந்தார். அதன் பிறகு முகர்ஜி சகோதரர்கள் இருவரும் பரமஹம்சரின் அறைக்குள் வந்தார்கள். வந்தவர்கள் பரமஹம்ஸரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர்கள். சங்கீர்த்தனங்கள் பாடுவதற்குத் தக்ஷிணேசுவர ஆலயத்தின் முற்றத்திலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்ததும் பரமஹம்சதேவர் எழுந்திருந்து ஆங்குச் சென்றார். அவரைத் தொடர்ந்து அவ்வறையில் கூடியிருந்த பக்தர்களும் ஆங்குச் சென்றனர்.

நண்பகல் அமுதுபண்ணியான பிறகு பரமஹம்சதேவர் தம் அறையில் சிறிதுநேரம் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். அப்பொழுது பண்டிதர் ஒருவர் தரையின்மீது ஒரு பாயில் அமர்ந்திருந்தார். தனது ஒரே புதல்வியை அண்மையில் இழந்திருந்த மாது ஒருத்தி ஆருத்துயரத்தில் அழுந்தியவளாக அவ்வறையின் வடபுறம் வாயிலின் அருகே நின்றுகொண்டிருந்தாள். கிஷோரியும் அப்பொழுது அவ்வறையில் அமர்ந்திருந்தார். மகேந்திரர் அப்பொழுது அறைக்குள் வந்து சேர்ந்தார். அப்படி வந்தவர் பரமஹம்சதேவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். மகேந்திரரோடு துவிஜன் என்பாரும் இன்னும் சில பக்தர்களும் வந்திருந்தார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திருமேனி அப்பொழுது ஆரோக்கியமான நிலையில் இல்லை. அவருடைய தொண்டை சிறிது பாதிக்கப்பட்டிருந்தது. அது கோடைகாலம். மகேந்திரருடைய உடல் நிலையும் திருப்திகரமாக இருக்கவில்லை. ஏதோ சிறிது நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆதலால் பரமஹம்சதேவரைத் தரிசித்தல் பொருட்டுத் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு

அடிக்கடி வரமுடியவில்லை.

பரமஹம்சதேவர் மகேந்திரரைப் பார்த்துக் கூறியதாவது: "உனது உடல் நிலை இப்போது எப்படியிருக்கிறது? நீ அனுப்பி வைத்திருந்த வில்வப்பழம் மிக நன்றாக இருந்தது."

மகேந்திரர்: "ஐயனே! நான் இப்போது ஒருவாறு குணமடைந்துள்ளேன்."

பரமஹம்சதேவர்: "கோடை வெப்பம் மிகக் கொடியது. கூடுமானால் இடையிடையே சிறிது உறைபனிக்கட்டி (ஐஸ்) அருந்தி வருவாயாக. கோடையில் வெப்பம் என்னையும் ஒருவாறு உபத்திரவப்படுத்தி வருகிறது. ஆதலால் அளவுக்கு மிஞ்சியே நான் ஐஸ்கிரீம் என்று பகரப்படுகின்ற தணுப்புப் பண்டத்தை அருந்தலானேன். ஒருவேளை அதை முன்னிட்டே என்தொண்டை பாதிக்கப்பட்டிருக்கலாம்."

"இதைக் குறித்து அன்னையிடம் நான் பிரார்த்தனை செய்தேன். 'தாயே! என்னைக் குணப்படுத்து. ஐஸ்கிரீம் என்னும் இந்தப் பண்டத்தை நான் இனி அருந்தமாட்டேன். ஐஸ் என்று பகரப்பெறுகிற உறை பனிக் கட்டியையும் நான் இனி அருந்தமாட்டேன்' என்று அன்னையிடம் தெரிவித்திருந்தேன். அப்படி நான் சங்கல்பம் பண்ணியிருப்பதால் இனி நான் அந்தப் பண்டத்தைத் தொட மாட்டேன். ஆனால் சில வேளைகளில் நான் மறதிக்கு உட்படுகின்றேன். மொந்தன் வாழைப்பழம் சாப்பிடமாட்டேன் என்று சங்கல்பித்திருந்தேன். ஆனால் யாது காரணத்தாலோ அந்தச் சங்கல்பத்தை மறந்துவிட்டுத் தற்செயலாய் எனக்குத் தரப்பெற்ற மொந்தன் வாழைப் பழத்தின் துண்டு ஒன்றை நான் அருந்தினேன். அதை அருந்திய பின்பே எனக்கு நான் செய்து கொண்டிருந்த சங்கல்பம் ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் சாதாரணமாய் உள்ள ஞாபகநிலையில் அத்தகைய செயலை நான் செய்வது கிடையாது. மற்றொரு நாள் தோட்டத்தினுள் மல ஜலம் கழிக்க நான் சென்றேன். அப்பொழுது எனக்காகவென்று கமண்டலம் ஒன்றில் ஜலம் கொண்டு வரும்படி அன்பன் ஒருவனை நான் பணித்திருந்தேன். ஆனால் ஓர் அவசரகாரியமாக அந்த அன்பன் சிறிது நேரம் வெளியேபோகும் படி ஏற்பட்டது. ஆதலால் அவனுக்கு இட்டிருந்த பணியை மற்றொருவனிடம் ஒப்படைத்திருந்தான். அவன் செய்த செயலில் குற்றம் ஏதுமில்லை. ஆயினும் என் கதி என்னவாயிற்று என்பது தெரியுமா? மற்றொருவன் கொண்டு வந்திருந்த ஜலத்தைத் தொட என்னால் இயலவில்லை. திகைத்துப்போய் நான் நின்று கொண்டிருந்தேன். வெளியே சென்றிருந்த பக்தன் திரும்பி வந்தான பிறகு வேறு ஒரு பாண்டத்தில் எனக்கு ஜலம் கொண்டு வரும்படி அவனிடம் தெரிவித்தேன். இத்தகைய விபரீதமான செயலுக்குக் காரணம் யாது என்று எனக்கே விளங்குவதில்லை."

"அன்னையின் திருவடியில் நான் பெற்றிருந்த பேறு அனைத்தையும் தியாகம் பண்ணினேன். தாயே! நலன், கேடு இரண்டையும் உன்னிடம் ஒப்படைக்கின்றேன். கிருபைகூர்ந்து அவைகளை ஏற்றுக்கொள். தாயே! உன்னிடம் நான் இதுகாறும் புரிந்து வந்துள்ள தர்மம் அதர்மம் இரண்டையும் சமர்ப்பிக்கிறேன். தாயே, நான் செய்திருந்த பாபம், புண்ணியம் இரண்டையும் உன்னிடம் சமர்ப்பிக்கிறேன். தாயே! நான் செய்துள்ள நல்வினை தீவினை இரண்டையும் உன்னிடம் ஒப்படைக்கிறேன். தூய பக்தியை நீ எனக்குத்தா என்று பிரார்த்தித்தேன். ஆனால் ஒன்றை ஒப்படைக்க என்னால் இயலவில்லை. சத்தியம் அசத்தியம் ஆகிய இரண்டையும் இணைத்து அம்பிகையிடம் சமர்ப்பிக்க எனக்கு இயலவில்லை. சத்தியத்தை மட்டும் விட்டுப் பிரியாத நிலையில் நான் இருந்து வருகிறேன்.

"பக்தன் ஒருவன் கோடைகால வெப்பத்தை முன்னிட்டு உறைபனிக்கட்டியால் செய்த பண்டத்தில் சிறிதளவு கொண்டுவந்திருந்தான். நான் அதை அருந்த வேண்டுமென்று அவன் வற்புறுத்தினான். நானோ தயங்கினேன். இதை நான் அருந்துவது பொருந்துமா என்று மகேந்திரரைக் கேட்டேன்."

மகேந்திரர் பணிவுடன் தெரிவித்ததாவது: "தயைகூர்ந்து முதலில் அதை அன்னைக்குச் சமர்ப்பியுங்கள். பிறகு அன்னையின் பிரசாதமாக அவள் அனுமதித்தால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள்."

பரமஹம்சர்: அப்படியும் அதை அருந்த எனக்கு இயலவில்லை. "அருந்துகிற உணவிலே பொருந்தியது எது, பொருந்ாதது எது என்னும் ஆகார விசாரத்தைப் பக்தன் ஒருவன்

கடைப்பிடிக்கிறுன். ஆனல் ஞானி ஒருவன் அங்ஙனம் செய்வதில்லை. ஞானிக்கோ உணவனைத்தும் பரப்பிரம்ம சொரூபம். விஜயருடைய மாமியார் என்னிடம் இயம்பியதாவது: "எல்லாரிடமிருந்தும் உணவு ஏற்றுக்கொள்ளும் ஆத்ம பரிபாகம் எனக்கு இன்னும் வந்து அமையவில்லை.'' அதற்கு நான் கொடுத்த விடையாவது: "வந்து வாய்க்கிற உணவனைத்தையும் அருந்துவது ஞானத்திற்கு அறிகுறியாகுமா? அகப்படுகிற உணவனைத்தையும் நாய் அருந்துகிறது. அதை முன்னிட்டு அந்த ஜந்துவை ஞானி என்று நாம் பகரலாமா?"

(மகேந்திரரைப் பார்த்து). "விதவிதமான பட்சணங்களை நான் ஏன் அருந்தவேண்டும்? விதவிதமான பட்சணங்களை அருந்துதல் மூலம் மானுடன் ஒருவன் உணவைச் சுவைக்கும் பாங்கைக் காத்து வருகிறுன். அந்த நிலை எனக்கு வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளுங்கால் பக்தர்கள் பலர் ஏமாற்றமடைவார்கள். ஆகையினல் அவர்கள் கொண்டுவரும் தின்பண்டங்கள் பலவற்றை ரசித்து அருந்துவதன் வாயிலாக அவர்களைத் திருப்திப்படுத்துகிறேன்.

"கேசவ சந்திரசேனர் தம்முடைய இயக்கத்தைப் பாதுகாப்பதிலும் அதற்கு வலிவு ஊட்டுவதிலும் கண்ணும் கருத்துமாயிருக்கிறுர். அவர் விருப்பப்படியே நடக்கட்டும் என்று நானும் அவர் முயற்சிக்கு ஆதரவு தருவது போன்று நடந்துகொள்கிறேன். மற்று மானுட ஜன்மத்தின் முக்கியமான குறிக்கோள் இயக்கம் ஒன்றை நிறுவுவது அன்று. பரஞானத்தை அடையப் பெறுதலே மானுட ஜன்மத்தின் குறிக்கோளாம். அத்தகைய மனநிலை வாய்க்கப் பெற்றுள்ள ஒருவன் இயக்கம் ஒன்றை நடாத்துதலிலேயே தன்னுடைய வாழ்நாள் முழுதையும் கழிக்கமாட்டான். ஞானேதயம் வாய்க்குங்கால் இப்பிரபஞ்ச வாழ்வு முழுதும் கனவு போன்று பொருளற்றதாகத் தென்படுகிறது. அந்நிலையை அடையப்பெற்றவன் பிறகு இப்பிரபஞ்சத்தில் இயக்கங்களை நிறுவுவதில் கருத்தைச் செலுத்தமாட்டான்.

''மானுடன் ஒருவன் பறவை கட்டியிருக்கும் கூட்டை அழிப்பானுகில் அப்பறவை அக்கணமே அதைவிட்டுப் பறந்து மேலே போகிறது. வெட்ட வெளியில் அது வாசம் செய்கிறது. அதே பாங்கில் ஆத்ம சாதகன் ஒருவன் தன் உடலும் இவ்வுலகும் அநித்தியமானவைகள் என அறிவானுகில் அவன் பிரம்ம ஞானத்துக்குத் தகுதியுடையவன் ஆகிறுன்.

"சில ஆண்டுகளுக்கு முன்பு நான் படைத்திருந்தது ஞானியின் மனப்பான்மையாம். அந்நிலையிலிருந்தபொழுது மக்களுடன் ஒட்டி உறவாடும் பான்மை என்னிடம் சிறிதேனும் இருக்கவில்லை. அந்நிலையில் இருந்தபொழுது பக்தன் ஒருவனே ஞானி ஒருவனே ஏதேனும் ஓர் இடத்தில் வசித்திருந்ததாக எனக்குச் செய்தி எட்டும். ஆயினும் அதைப்பற்றி நான் அந்நாட்களில் உதாசீனனுக இருந்தேன். சில நாட்களுக்குப் பிறகு அன்னவன் சரீரத்தை உகுத்துவிட்டுப் பரகதியடைந்தான் என்னும் செய்தியும் எனக்கு எட்டும். இப்பிரபஞ்சத்திலிருக்கிற யாவும் நிலையற்றவை என்பது தெற்றென எனக்கு விளங்கிற்று. ஆதலால் மக்களோடு இணங்கியிருப்பதைப் பற்றிய கருத்தை நான் ஒதுக்கி வைத்திருந்தேன். பிறகு அன்னை பராசக்தி என் மனப்பான்மையை மாற்றி அமைத்திருக்கிறுள். இப்போது நான் படைத்திருக்கிற மனப்பான்மையின் பிரகாரம் பகவானையும் பக்தர்களையும் நான் உள்ளன்போடு நேசிக்கிறேன்.''

பரமஹம்சரின் பாங்கு

தூய்மையே வடிவெடுத்தவர்கள் பரமஹம்சர்கள். உலகத்தவர் பின்பற்றும் பழக்க வழக்கங்களை அவர்கள் மனதில் வாங்கிக்கொள்வதில்லை. யாண்டும் நிறைநிலையில் நிற்பதால் அவர்களுக்கு உடலைப்பற்றிய கவனமும் ஒழிந்துபோகிறது. பரநாட்டம் என்பது முதிர முதிர உணவு முதலிய கட்டுப்பாடுகளும் அவர்களைவிட்டு நீங்கிவிடுகின்றன.

தக்ஷிணேசுவரத்தில் அர்ச்சகராக இருந்த ஆரம்ப நாட்களில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாமே உணவைச் சமைத்து உண்டார். தேவியின் தரிசனம் பெற்றபின் அவர் கோயில் பிரசாதத்தையும், தூய பக்தர்கள் கொணர்ந்தவற்றையும் ஏற்றுக்கொண்டார்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

12-1. அத்துவா எல்லாம் அடங்கச்சோ தித்தபடி
சித்துருவாய் நின்ருர் தெளிவறிவதெந்நாளோ.

அத்துவா-தகைமைகள்.

நாணயத்தை மாற்றுகிற ஒருவன் பொருந்தியவை எவை, பொருந்தாதவை எவை என்று ஒவ்வொன்ருக ஆராய்ச்சி செய்த பிறகே அந்த நாணயத்தை ஏற்றுக்கொள்கிருன். அதே பாங்கில் பரநாட்டம் பூண்டுள்ள ஆத்ம சாதகனின் தகைமைகளைக் குருநாதன் ஒவ்வொன்ருக ஆராய்ந்து பார்க்கின்ருர். தகுதிவாய்ந்தவர்களையே பிறகு சிஷ்யர்களாக ஏற்றுக்கொள்கின்ருர்.

தன்னைச் சரியாக ஆயத்தப்படுத்திக்கொள்ளாதவன் பல்கலைக்கழகத் தேர்விலோ, சமூக வாழ்க்கை என்ற பரீட்சையிலோ தேர்ச்சி பெறமுடியாது. இதுபோலவே ஆன்மீகத்திலும் ஒருவன் தன்னுடைய தகைமைகளை வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும். சாதகனின் மனநிலை, உடல் நிலை, அறிவுத்தெளிவு, ஆன்மீகத்தில் காட்டும் ஆர்வத்தின் அளவு ஆகிய அனைத்தையும் ஆசாரியர் ஆராய்ந்து பார்ப்பார்.

இப்படி ஆராய்ச்சி செய்கிற முறைகளில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சதேவர் தமக்கே உரிய அலாதிமுறைகளைக் கையாண்டார். சாதகன் ஒருவன் உறங்கிக்கொண்டிருக்கின்ற பொழுது அவனுடைய முகத்தை உற்றுப் பார்ப்பார். அகத்தில் அவன் அடைந்திருக்கும் பண்புகள் யாவும் கண்ணடிப் பெட்டியில் வைத்திருக்கும் பண்டங்கள் போன்று தெளிவுற அவருக்கு விளங்கும். சாதகன் ஒருவனேடு உரையாடிக் கொண்டிருக்கும்பொழுது அவனுடைய கையைத் தம் கரத்தில் எடுத்து வைத்துக்கொண்டு எடை போடுவது போன்று மேலும் கீழும் அசைத்துப் பார்ப்பார். அவனுடைய கண்ணை உற்றுப்பார்ப்பார். அவனுடைய முகத்திலிருக்கும் கன்னம், உதடு, காது முதலியவைகளைக் கவனித்துப் பார்ப்பார். இப்படிச் செய்வதன் வாயிலாக ஒவ்வொரு சாதகனுடைய அமைப்பு முழுவதையும் உள்ளபடி அறிந்துகொள்வார். பிறகு அந்த சாதகனுக்கு ஏற்றபடி அவனவனைப் பண்படுத்தும் முறைகளைக் கையாளுவார். அவர் கருத்துப்படி அவருக்கு அமைந்திருந்த சிஷ்யர்களுள் நரேந்திரன் ஒருவன் மட்டும் குறையில்லா நிறைநிலையெய்தியிருந்தான். இங்ஙனம் ஆச்சாரிய புருஷர்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் அறிந்திருந்த முறைகளைக் கையாண்டு சிஷ்யர்களைத் தேடி எடுத்திருக்கின்றனர்.

ஆத்மசாதனத்தில் மேலே போகப் போகப் பண்பட்டுள்ளார் பாங்குகள் முழுதும் ஆச்சாரியர் ஒருவருக்கு விளங்குகிறது.

ஒவ்வொரு துறையிலும் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அந்தந்தத் துறைக்கு ஏற்ற அனுபவமும் அறிவும் தாமே வந்து அமைகின்றன. நூல் அறிவால் இப்பண்பு வந்து அமையாது.

நல்லார் அடைந்துள்ள ஞானபரிபாகத்தை அறிந்துகொள்ளும் திறமை தமக்கும் வந்து அமையவேண்டும் என்று இக்கண்ணியின் வாயிலாகத் தாயுமானவர் பிரார்த்திக்கின்ருர்.

12-2. மூச்சு அற்றுச் சிந்தை முயற்சி அற்று
முதறிவாய்ப்
பேச்சு அற்ருேர் பெற்ற ஒன்றைப் பெற்றிடுநாள்
எந்நாளோ.

உயிர் வாழ்பவைகளிடத்து மூச்சு விடுதல், வாங்குதல் ஆகிய செயல்கள் தாமாக நிகழ்ந்து வருகின்றன. சுவாசித்தல் என இச்செயல் பெயர் பெறுகிறது. சுவாசித்தல் மூலமாகப் பிராணன் அல்லது உயிர்த் தத்துவம் காப்பாற்றி வைக்கப்படுகிறது. சுவாசிப்பதை முறையாகக் கையாளுமிடத்து அந்தச் சாதனத்திற்குப் பிராணயாமம் என்னும் பெயர் ஏற்படுகிறது. இது முற்றிலும் ஹடயோகத்துக்குரியதாம். ஹடயோகமோ உடலைப் பேணுவதில் மட்டும் கவனம் கொள்கிறது. ஆதலால் ஆத்ம சாதகர்கள் ஹடயோகத்தில் கருத்தைச் செலுத்துவதில்லை. ஆயினும் பிராணயாமம் என்னும் மூச்சு விடுவது வாங்குவது ஆகிய கலையை ஓரளவு அங்கீகரித்திருக்கின்றனர். ஆத்ம சாதனம் மனதைப் பண்படுத்துவதில் துவங்குகின்றது. பின்பு, மனத்தின் பாங்குக்கும் சுவாசிப்பதற்கும் இடையில் நெருங்கிய

பொருத்தம் இருக்கிறது. மனது அமைதி யுற்றிருக்கிற பொழுது நாசித்துவாரங்கள் வாயிலாகப் பிராணனுடைய போக்கும் வரவும் ஒழுங்காக நடைபெறும். மற்று மனதின்கண் சினம், விசனம், அச்சம், காமம், பொறாமை முதலிய பொருந்தாத இயல்புகள் வடிவெடுக்கு மிடத்து அந்தந்த இயல்புக் கேற்றவாறு சுவாசத்தின் போக்குவரத்து தடுமாற்றம் அடைகின்றது. ஒவ்வொரு ஆத்ம சாதகனும் இக் கோட்பாட்டைத் தனக்குத்தானே ஆராய்ச்சியின் வாயிலாகக் கண்டு கொள்ளக்கூடும். அதன் முடிவாவது :

மனநிலைக்கும் பிராணனுடைய போக்குவரவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பிராணயாமத்தை முறையாகக் கையாண்டால் மனம் தானாக அடங்குகிறது. மனம் அடங்கியிருக்கு மிடத்துப் பிராணயாமம் தானாகவே நிகழுகிறது. மனம் முரட்டுத் தனமாகத் தன் போக்கில் போய்க் கொண்டிருக்கிறபொழுது பிராணயாமம் பண்ணினால் பெருங்கேடு விளையும். நரம்புத் தளர்ச்சி, மண்டையிடி முதலிய நோய்களை அது உண்டுபண்ணிவிடும். ஆதலால் மனதை ஒழுங்குப்படுத்துவதற்கான உபாயங்களாயுள்ள விவேகம், வைராக்கியம் ஆகிய இரண்டு சீரிய மனநிலைகளில் உறுதி பெற்றிருப்பவர்களே பிராணயாமம் என்னும் சாதனத்திற்குத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். ஆத்ம சாதகன் கவனிக்க வேண்டிய முக்கியமான எச்சரிக்கையாகும் இது.

'எங்கே மனம் உண்டோ, வாயு அங்கே உண்டு' என்பது யோகசாதன சம்பந்தமான முக்கியமான கோட்பாடாகும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு இடையிடையே நிர்விகல்ப சமாதி கூடும். அப்படிக் கூடுமிடத்து அவருடைய மனதும் அடியோடு அடங்கிவிடும். பொதுவாக மனம்போன இடத்தில் முதலில் வாயு நிற்கும். வாயு போனால் மூச்சு தானே நின்றுவிடும். அதைத் தொடர்ந்து ஹ்ருதயம் அடிப்பதும் நின்றுவிடும். ஹ்ருதயம் அடிப்பது நின்றால் அது மரணத்துக்கு நிகர் ஆகும். மரணம் வந்து அமையுமிடத்து உடல் பிரேதமாக மாறுகிறது. முகத்தில் உள்ள எழில் தானே மங்கிப் போகிறது. மனிதன் செத்துப்போனதற்கு இவை யாவும் அறிகுறிகளாகின்றன. ஆனால் பரமஹம்சர் போக்கு அத்தகையதன்று. டாக்டர்கள் பல தடவை அவருடைய சமாதி நிலையை ஆராய்ச்சிபண்ணி இருக்கிறார்கள். ஹ்ருதயம் அடிப்பது நின்று விட்டால் மரணம். இதுவே நவீன மருத்துவ சாஸ்திரக் கொள்கை. ஆனால் ஹ்ருதயம் அடிப்பது நின்றுவிட்ட நேரத்திலும் பரமஹம்சர் முகத்தில் அருள் ஒளி வீசிக்கொண்டிருக்கும். அவர் ஆனந்தத்தில் திளைத்திருந்தார் என்பதை அவருடைய முக விலாசம் காட்டும். பரமஹம்சர் படைத்திருந்த இந்த நிலையை மருத்துவர்களாலே விளக்க முடியவில்லை.

சமாதியில் பரமஹம்சதேவரின் மூச்சு நின்று போனது வெளிப்படை. அதற்குக் காரணம், பேச்சுக்கு முகாமையாயிருக்கின்ற மனதைத் தாண்டி அப்பாலுள்ள ஆத்ம சொரூபத்தில் அவர் லயமாகி இருந்தார். அவர் இருந்த அந்த நிலையே மூதறிவு எனப்படும். பரத்தின்கண் உள்ள ஆத்மப் பிரகாசம் மூதறிவு எனப்படுகிறது. அதுதான் மனிதனுடைய நிஜநிலை. உலக விவகாரத்தில் உழல்கின்ற நாம் படைத்துள்ள அறிவை மூதறிவு என்றோ ஆத்மப் பிரகாசம் என்றோ கூறலாகாது. ஜீவாத்மனைச் சிதாபாசன் என்கிறோம். பிரதி பிம்பம் ஆகியுள்ள அறிவு என்பது அதன் பொருள். முகம் பார்க்கும் கண்ணாடியில் சூரியனைக் காணலாம். பிறகு கையை வைத்து அந்தச் சூரியப்பிரகாசத்தை மறைத்துவிடலாம். ஆனால் மூலத்திலுள்ள சூரியப்பிரகாசத்தை மறைக்கமுடியாது. ஜீவாத்மன் மனதை ஒதுக்கித் தள்ளிவிட்டு மூதறிவில் நிலைத்திருப்பானாகில் அது நிர்விகல்ப சமாதி எனப்படுகின்றது. அந்த நிலையைத்தான் பரமஹம்சர் இடையிடையே பெற்றுவந்தார்.

யோகசாதனத்தில் பூர்த்தியடைந்தவர்கள் பெறுவது நிர்விகல்ப சமாதி. அதன் அநுபூதியைப் பரமஹம்சர் இடையிடையே பெற்று வந்தார். அக்கருத்து இக்கண்ணியில் தெளிவுற அடங்கியிருக்கிறது. தாயுமானவர் அடைந்த நிலை இதுவேயாம். ஆனால் சாதனத்தின் ஆரம்ப தசையிலிருக்கும் பொழுது அது வந்து வாய்க்கும் பெருநாள் எந்நாளோ என்ற எண்ணம் எழுவதாக இக்கண்ணியில் கூறப்பட்டுள்ளது.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-9

(யோகோஹாமாவிலிருந்து சென்னை அன்பர்களுக்கு 10-7-1893 அன்று எழுதியது)

பொருள் ஏதும் படையாதிருப்பது துறவியின் தர்மமாகும். பறவையும் துறவியும் நாளைக்கென்று எதையும் சேர்த்து வைப்பதில்லை. வேதாந்த பரிபாஷையில் இது அபரிக்கிரஹம் எனப் பகரப்பெறுகிறது. இதற்குப் பொருள் இரண்டு உண்டு. பிரபஞ்ச சம்பந்தமான பொருள் ஏதும் படையாதிருப்பது ஒரு பொருள். மற்றவர்களிடமிருந்து தானமாக எதையும் ஏற்றுக்கொள்ளாதிருப்பது மற்றொரு பொருள். பொருள் ஏதும் படையாதிருப்பதற்கு இடையில் உலக ஆசையில் மூழ்கியவர்களைப் பார்க்கிறோம். பிச்சைக்காரன் ஒருவன் தெருவில் பிச்சை எடுத்தான். அதே தெருவில் புத்தர் பெம்மானும் பிச்சை எடுத்தார். வெளித் தோற்றத்தில் இரண்டு பேரும் யாசகம் எடுப்பது போலத் தோன்றினும் அடைந்துள்ள பரிபாகத்தைப் பார்த்தால் பிச்சைக்காரன் உடைமை இல்லாதிருப்பதற்கு இடையில் உள்ளத்தில் ஆசையிருந்தது. ஆனால் புத்தருக்கு அகத்திலும் ஆசையில்லை, புறத்திலும் உடைமை ஏதுமில்லை. மற்றொருவரிடமிருந்து தானமாக எதையும் வாங்கக் கூடாது என ஏன் சொல்லுகிறார்கள் எனில் வாங்கிப்பழகியவன் பிறகு தானே கைநீட்டிக் கேட்க ஆரம்பித்து விடுவான். ஏற்பது இகழ்ச்சி என்னும் கோட்பாடு இதை முன் விட்டு வந்ததேயாம். விவேகானந்த சுவாமிகள் பரிவ்ராஜகராக இந்தியாவில் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரிவரையில் சுற்றுப்பயணம் சென்றிருந்தார். அதில் அவருக்கு சிரமம் ஏதுமில்லை. ஏனென்றால் மூட்டை முடிச்சு எதையும் அவர் தம்முடையதாக வைத்துக் கொள்ளவில்லை. அபரிக்கிரஹமே வடிவெடுத்தவராக இலங்கினர். பணத்தைத் தொடுவதில்லை என்னும் விரதத்தை அப்பொழுது அவர் பூண்டிருந்தார். நாளைக்கு என்று உணவு எதையும் அவர் சேமித்து வைத்துக்கொள்ள மாட்டார். தெய்வாதீனமாகத் தமக்கு அப்போதைக்கப்போது கிடைத்தஉணவை உண்டு கடவுள் சிந்தனையில் மூழ்கியிருந்தார். சில நாட்கள் உணவு கிடைக்காது போய்விடும். ஆனால் அவருடைய மனப்பான்மையில் உணவு உண்பதும் பட்டினி கிடப்பதும் ஒன்றேயாம். துறவறத்தின் தீவிரமான பாங்குகளில் அதுவும் ஒன்றாம். துறவி வேந்தனாகிய விவேகானந்த சுவாமிகள் இத்தகைய பாங்குடன் இந்தியாவில் வாழ்ந்து வந்தார்.

ஹிந்து தர்மப் பிரசாரத்தின் பொருட்டு அவர் அமெரிக்கா செல்லும்படியான சூழ்நிலையும், நிர்ப்பந்தமும் அவருக்கு வந்து அமைந்தன. அவரும் அதற்கு உடந்தையானார். ஒரே ஒரு மாற்று உடையுடன் இந்தியாவில் வசித்து வந்தவருக்கு இப்பொழுது ஏராளமாகத் துணிமணிகள் ஆயத்தமாயின. சங்கடத்துடன் அதற்குச் சம்மதம் கொடுத்தார். பம்பாயில் கப்பல் ஏறும்பொழுது அவர் பகர்ந்ததாவது: "பணத்தைக் கையால் தொடாது தாய்நாட்டில் நான் நிம்மதியாக உலாவித் திரிந்தேன். அத்தகைய சூழ்நிலை வெளிநாடுகளில் இல்லை. ஆகையினால் அரை மனதோடு இந்தப் பணத்தை வாங்குகிறேன். இதை வாங்குவதின் வாயிலாக என்னுடைய யதேச்சையைப் பாதி பறிகொடுக்கிறேன். இப்படிச் செய்வதின் வாயிலாக என் சுதந்திரத்தை நான் இழக்கிறேன். ஆயினும் இச்செயல் உலக நன்மையின் பொருட்டு அமைந்திருப்பதால் நான் இதற்குச் சம்மதம் கொடுக்கிறேன்" என்றார். பிறகு கப்பல் பயணம் பண்ணியபொழுதும், மேல் நாடுகளில் சில ஆண்டுகள் வசித்திருந்த பொழுதும் மூட்டை முடிச்சுகள் பல இவரிடம் இருந்தன. அது அவருக்குத் தொல்லையாக இருந்தது. ஆயினும் அத்தொல்லைக்கு அவர் ஆளாகாதிருந்திருந்தால் வெளிநாடுகளில் ஹிந்து தர்மப் பிரசாரம் நிகழ்ந்திருக்காது.

ஒவ்வொரு செயலிலும் நலம், கேடு உள்ளன. எச்செயலில் ஈடுபடுவதின் வாயிலாக நலன்கள் அதிகம் உண்டாகின்றனவோ அதை நல்ல செயல் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். தமக்கு ஒவ்வாத செயலை விவேகானந்த சுவாமிகள் கையாண்டது அவர் படைத்திருந்த துறவுக்கு அறிகுறியாம். உலக நன்மைக்காகவே அவர் பணத்தைக் கையாளவேண்டி வந்தது.

89. प्रजाभवः ப்ரஜாபவ: — பிரஜைகளின் தோற்றத்துக்குக் காரணமாயிருப்பவர்.

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் இந்தத் தத்துவம் நன்கு விளங்குகிறது. ஆண்பால் பெண்பால் ஆகியவர்களின் சேர்க்கையால் உயிர் தோற்றதுக்கு வருகிறது. இப்பிரபஞ்ச மெங்கும் பெண்பாலாக இலங்குவது சக்தியின் சொரூபம். உயிர்த்தத்துவமாக இலங்குவது சிவசொரூபம். அனந்தங்கோடி உயிர்வகைகள் அண்டமெங்கும் தோன்றி வந்து கொண்டிருக்கின்றன. அங்ஙனம் விதவிதமான உயிர்வகைகள் தோற்றத்துக்கு வருவதற்குக் காரணமாயிருப்பவை யோனி பேதங்களாம். நடப்பன, பறப்பன, ஊர்வன இங்ஙனம் உயிர் வகைகள் தோன்றியிருப்பதற்குக் காரணம் பிரகிருதி பேதம். அத்தனை விதமான உயிர் வகைகளை ஆராய்ந்தால் அவை அனைத்திடத்தும் இலங்குவது ஒரே உயிர்த் தத்துவமாம். சூரியன் ஒன்று. அதன் பிம்பங்கள் கடலின் கண் உள்ள ஆயிரக்கணக்கான அலைகளில் வெவ்வேறு விதங்களாக இலங்குகின்றன. அங்ஙனம் ஒரு பரமாத்மா எண்ணிறந்த பாங்குகளை உடைய எண்ணிறந்த ஜீவாத்மாக்களாக இலங்குதற்குக் காரணம் பிரகிருதி பேதமேயாம். இத்தனை விதமான உயிர்களாக இலங்கிக்கொண்டிருக்கும் ஜீவ தத்துவங்களில் வீற்றிருப்பது ஒரே பரமாத்மாவாம்.

90. अहः அஹ: — பகல் போன்று ஒளிர்பவர்.

அயர்ந்து உறங்குகின்றவன் அக்ஞான இருளில் மூழ்கியிருக்கின்றான். ஆனால் அவன் விழித்து எழுந்திருக்கின்றபொழுது அக்ஞான இருள் அகலுகிறது. பொருள்களெல்லாம் உள்ளபடி விளங்குகின்றன. சூரியோதயத்திற்கு நிகர் இங்ஙனம் ஞானத்தைப் பெறுவது. சூரியன் மறைந்திருக்கின்றபொழுது எல்லாம் காரிருள். ஆனால் அவன் தோற்றத்துக்கு வரும் பொழுது அவன் தன்னையும் விளக்குகின்றான். ஏனைய பொருள்களையும் விளக்குகின்றான்; அதே பாங்கில் ஆத்ம ஞானம் அடையப்பெறுகின்றவன் தன்னையும் தன்னைச் சூழ்ந்துள்ள பொருள்களையும் உள்ளபடி உணருகின்றான். அனைத்துமாய் இலங்குவது ஒரு பொருள் என்னும் உண்மை அவனுக்கு வெளியாகிறது.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்
மெய்ப்பொருள் காண்ப தறிவு [பொருள் என்பது மறைமொழி.

91. संवत्सरः ஸம்வத்ஸர:--காலமாக இலங்குபவன்.

சம்வத்சரம் என்பது ஆண்டு அல்லது வருஷம் என்று பொருள்படுகிறது. ஆண்டு என்னும் சொல் காலத்துக்கு ஆகுபெயராக அமைந்திருக்கிறது. இரண்டு நிகழ்ச்சிகளுக்கிடையில் உள்ள இடை நேரம் காலம் என விளங்குகிறது. சூரியோதயம் என்பது ஒரு நிகழ்ச்சி. சூரிய அஸ்தமனம் என்பது மற்றோர் நிகழ்ச்சி. இரண்டுக்குமிடையில் உள்ள இடை நேரம் ஒரு பகல் எனப்படுகிறது. முந்நூற்றறுபத்தைந்தே கால் பகலும் இரவும் சேர்ந்தது ஒரு வருஷம். அங்ஙனம் கால சொரூபமாக இலங்குபவர் கடவுள். காலத்தை நன்கு பயன்படுத்துவது நல்ல கவுடள் வழிபாடாம். மானுடன் ஒருவன் செய்யத் தவறிப்போன செயல்களுக்கு ஈடு செய்து கொள்ளலாம். ஆனால் வீணே கழிந்துபோன நேரத்துக்குமட்டும் எவ்விதத்திலும் ஈடு செய்ய முடியாது. சிவனுக்கு அமைந்துள்ள பெயர்களில் ஒன்று காலகாலன். இறைவன் கால சொரூபமாய் இருக்கிறான். நோய்வாய்ப்பட்டு மெலிந்த தேகம் படைத்தவன் சத்துள்ள உணவு சாப்பிட்டு இழந்த சக்தியைப் பெற முடியும். வியாபாரத்தில் இழந்த செல்வத்தை மீண்டும் முயன்றால் உழைத்துப் பெறமுடியும். ஆனால் கைவிட்டுப் போன காலம் ஒரு நாளும் திரும்பி வராது. ஒவ்வொரு சிறு கற்கள் சேர்ந்து கட்டடம் ஆவது போன்று ஒவ்வொரு மணித்துளியும் சேர்ந்தே ஒவ்வொரு நாளாக உருவெடுக்கிறது. நாட்கள் வாரமாகி, வாரம் மாதமாகி, மாதம் ஆண்டாகி, ஆண்டுகள் சேர்ந்ததுதான் ஒருவனுடைய ஆயுளாக நீளுகிறது. ஒவ்வொரு க்ஷணப்பொழுதும் நம் கைவசம் இருக்கிறது. நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்கிறவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் அவர்கள் நிச்சயம் விரும்பிய இலட்சியத்தை அடைய

முடியும். ஆதலால் காலத்தை நன்கு பயன் படுத்துவது கடவுள் வழிபாட்டுக்கு நிகர் ஆகிறது.

92. व्यालः வ்யாலः — ஸர்ப்பம் போன்றவர். பாம்பு என்றால் படையும் அஞ்சும் என்பது பழமொழி. ஸர்ப்பம் இருக்குமிடத்தில் மனிதன் எச்சரிக்கையாக நடந்துகொள்கிறான். அது அச்சத்துக்கு உரியது, மரியாதைக்குரியது, வணக்கத்துக்குரியது. முறைதவறிக் கையாண்டால் மனிதன் ஆபத்துக்கு உள்ளாவான். அத்தகைய ஆபத்து ஏதும் தெய்வத்துடன் கொள்கிற இணக்கத்தில் உண்டாவதில்லை. ஆயினும் அத்தகைய சீரிய மனப்பான்மையுடன் கடவுளோடு இணக்கம்கொள்கிறவனுக்கு நலன் அனைத்தும் உண்டாகிறது.

93. प्रत्ययः பிரத்யயः — வாலறிவாக வடிவெடுத்திருப்பது என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிரக்ஞை, பிரக்ஞானம், வாலறிவு, பேரறிவு, சைதன்யம், சேதனம் இப்படியெல்லாம் மெய்ப்பொருள் விளக்கப்படுகிறது.

94. सर्वदर्शनः ஸர்வதர்சனः — அனைத்தையும் பார்த்துக்கொண்டிருப்பவர்.

பரம்பொருளே பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமாய் இலங்கிக் கொண்டிருக்கிறார். ஆதலால் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவருடைய காட்சிக்குப் புறம்பானது ஏதும் இல்லை.

95. अजः அஜः — பிறவாதவன். எது பிறப்பெடுக்கிறதோ அதற்குத் துவக்கம் இருக்கிறது. ஆனால் பரம்பொருள் ஆதியந்தம் இல்லாதவர். யாண்டும் உள்ள அப்பொருள் பிறப்பு எடுப்பதில்லை என்பது கோட்பாடு.

96, सर्वेश्वरः ஸர்வேச்வரः — அனைத்துக்கும் ஈசனாயிருப்பவர்.

97, सिद्धः ஸித்தः — யாண்டும் இருப்பவர்.

பூமாதேவியைத் தரிசிக்க வேண்டுமென்று ஒருவன் யாத்திரை போகின்றான். அப்படிச் செல்கின்றவன் எங்குச் சென்றாலும் பூமாதேவியின் சன்னிதியிலேயே இருக்கின்றான். இவ்வுண்மையை அறியாது அத்தேவியைக் காண வேண்டுமென்று அவன் சர்வகாலமும் தேடியலைகின்றான். அதற்கு நிகர் இறைவனைத் தேடியலைதல். நிறைபொருளாக எங்குமே அவர் இலங்குகின்றார். See God, Don't Seek God என்பது கோட்பாடு. கடவுளைக் காண்; அவரைத் தேடி அலையாதே என்பது இதன் பொருள். சித்தனாக, நிறைபொருளாக அவர் யாண்டும் இருக்கின்றார்.

98. सिद्धिः சித்திः — வீடுபேறு.

வீடு பெற நில் என்பது கோட்பாடு. ஜீவாத்மன், எண்ணிறந்த பிறப்பு, இறப்பு வாயிலாகப் பயணம் போய்க் கொண்டிருக்கிறான். சொர்க்கங்கள் பலவற்றில் அவன் வசித்திருக்கலாம். ஆனால் வினைப்பயன் முடிந்தவுடன் அவன் அந்த ஸ்தானங்களைக் காலி பண்ணியாக வேண்டும். ஆனால் சொந்த வீட்டை யாரும் காலிபண்ணுவதில்லை. தன்னுடைய நிஜசொரூபமே தனக்குச் சொந்த இருப்பிடமாகிறது. அதை அடையப் பெறுவது சித்தி.

99. सर्वादिः ஸர்வாதிः — அனைத்திற்கும் ஆதிமூலம்.

சான்று ஒன்றின் மூலம் இத்தத்துவத்தை விளக்குவது அவசியமாகிறது. வெப்பமில்லாவிட்டால் உயிர்களனைத்தும் மடிந்துபோகும். வெப்பம் பிரபஞ்சமெங்கும் சூரிய வெப்பமாக வடிவெடுத்து இலங்குகிறது. உணவு சமைப்பதற்கு விறகுக்கட்டையை எரித்து நாம் வெப்பத்தை உண்டுபண்ணுகிறோம். இங்ஙனம் விறகுக்கட்டையில் அமைந்திருக்கும் வெப்பம் முன்பொருகாலத்தில் சூரியனிடத்திருந்து வந்ததாம். வைஸ்வானர வெப்பமாக மானுட சரீரம் வடிவெடுத்திருக்கிறது. அந்த வெப்பம் தணிந்தால் சரீரம் மடிந்துபோம். அங்ஙனம் உயிர் வாழ்க்கைக்கும் இன்றியமையாதிருக்கும் வைஸ்வானர வெப்பமும் சூரியனிடத்திருந்து வந்ததாம். ஆகவே வெப்பங்களனைத்துக்கும் ஆதிகாரணமாயிருப்பதுசூரியவெப்பம். உயிர்களனைத்தும் உயிர்வாழ்ந்திருப்பதற்கும் அந்த சூரிய வெப்பமே காரணமாகிறது. இதே பாங்கில் பிரபஞ்சத்திலுள்ள அனைத்துக்கும் மூலகாரணமாயிருப்பவர் பரவஸ்துவாம். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது கோட்பாடு. இறைவனை ஆதாரமாகக் கொண்டுதான் அண்டமே இயங்கிவருகிறது. இறைவனிடமிருந்துதான் யாவும் தோற்றத்துக்கு வந்துள்ளன. இறுதியில் யாவும் இறைவனிடமே ஒடுங்குகின்றன.

ஞான வெட்டியான்-10

தரையில் எறிவதைத் தவிர்த்திடுக

பரமஹம்சதேவர் தம்முடைய சன்னியாச சிஷ்யர்கள் பத்துப் பதினைந்துபேர்க்கு அருமை யான ஆன்மீகப் பயிற்சி கொடுத்திருந்தார். ஆயினும் அவர் கொடுத்திருந்த பயிற்சிகளுள் சமூகவாழ்க்கை சம்பந்தமானவற்றில் ஒரு சில குறைகள் உண்டு. அத்தகைய குறைகளுக்கு சான்று ஒன்றினைக் காணலாம்.

சசிபூஷன் சக்ரவர்த்தி என்னும் பிள்ளைத் திருநாமம் படைத்திருந்த சிஷ்யர் பிற்காலத் தில் ஸ்ரீராமகிருஷ்ணனந்தர் என விளங்கினர். அவர் கல்வியிலும், கேள்வியிலும், பயிற்சியி லும், தவத்திலும் சிறந்திருந்தார். அன்னவர் சுவாமி விவேகானந்தரால் சென்னையில் ஸ்ரீராம கிருஷ்ணமடம் ஒன்று நிறுவுதல் பொருட்டு ஆங்கு அனுப்பப்பட்டார். அவர் சென்னைக்கு வந்த காரியத்தை நன்கு நிறைவேற்றினர்.

ஒருமுறை ஒரு காரியத்தின் நிமித்தம் அவர் சென்னையிலிருந்து கல்கத்தாவிற்குச் செல்ல வேண்டியிருந்தது. அதன் பொருட்டுச் சென்னை மத்திய ரயில்வே ஸ்டேஷனில் வண்டி ஏறி அதில் உட்கார்ந்திருந்தார். சிறிதுநேரத்துக் குள் அவரை வழியனுப்புவதற்குச் சகோதரி தேவமாதா என்று பெயர் சூட்டப்பெற்றிருந்த அமெரிக்கக் கன்னிகை ஒருத்தி அவ்வண்டியி னுள் நுழைந்தாள். அவள் கண்ட காட்சி அவளைத் திடுக்கிடச் செய்தது. சுவாமி ராம கிருஷ்ணனந்தர் தம்மை வழியனுப்பவந்த மற்ற அன்பர்களோடு பேசிக்கொண்டிருக்கையில் கிச்சிலிப்பழம் அருந்திக்கொண்டிருந்தார். அப் பழத்தின் தோலை உரித்துத் தங்கு தடையின்றி வண்டிக்குள்ளேயே அவர் போட்டுக்கொண்டி ருந்தார். அந்தக் காட்சி தான் சகோதரி தேவ மாதாவைத் திடுக்கிடச் செய்தது. அவள் பணிவுடன் தெரிவித்துக்கொண்ட ஆட்சேப மாவது: "சுவாமிஜி! ஐரோப்பா, அமெரிக்கா போன்ற மேல்நாடுகளில் சிறு குழந்தைகள் கூடச் செய்யாத தவறுதல் ஒன்றைத் தாங்கள் புரிகின்றீர்கள். கிச்சிலிப் பழத்தின் தோலை உரித்துப் பொறுப்பற்ற பாங்கில் தோன்றுகிற இடத்திலெல்லாம் போடுவது நல்ல பயிற்சி ஆகாது." இவ்வாறு இயம்பிய வண்ணம் அவள் தானே அத்தோலையெல்லாம் பொறுக்கி எடுத்துத் தன் கைக்குட்டை ஒன்றில் மூட்டை யாகக் கட்டித் தன் கைப்பையில் போட்டு வைத்துக்கொண்டாள். சுவாமியை வழியனுப் பியான பிறகு ஸ்டேஷனிலிருந்த குப்பைத் தொட்டியில் கொண்டுவந்து போட்டாள்.

நம்மவர்களுக்கு இது ஒரு பொருளற்ற சாமானியமான செயலாகத் தென்படலாம். ஆனல் இவ்வுலக வாழ்வு சம்பந்தமான பயிற்சி பெற்றிருப்பவர்கள் அறிந்துகொள்ளவேண் டிய , நல்லதொரு பாடம் இந்நிகழ்ச்சியில் அடங்கியிருக்கிறது.

இதே போன்று மற்றோர் நிகழ்ச்சி. மகாத்மா காந்தி வார்தா ஆஸ்ரமத்தில் வாழ்ந்திருந்த பொழுது மாலை நேரங்களில் வெளியே உலா வப் போவார். அப்போது அவரைக் காண வந்த அன்பர்களில் சிலர் அவரோடு செல்லு வார்கள். அரிய பெரிய விஷயங்களை ஆராய்ச்சி பண்ணுவதற்கு அது பொருத்தமான நேரம். ஒருதடவை ஓர் அன்பருடன் நடந்துபோய்க் கொண்டிருந்தபொழுது மற்றோர் அன்பரிட மிருந்து வந்திருந்த முக்கியமான கடிதம் ஒன்றை இருவரும் விமர்சனம் பண்ணினர்கள். அது முடிந்ததும் மகாத்மாவுடன் நடந்துபோய்க் கொண்டிருந்த அன்பர் அக்கடிதத்தைக் கிழித்து நடைபாதையில் கீழே போட்டார். அத்துண்டுகள் காற்றில் சிதறடைந்து நாலா பக்கமும் பரவின. 'இங்ஙனம் காகிதத்தைக் கிழித்து நடைபாதையில் போடுவது சரியன்று' என்று சொல்லிக்கொண்டு காந்தியடிகள் அக் கடிதத் துண்டுகளையெல்லாம் சிரமப்பட்டுச் சேகரித்துத் தம் மடியில் வைத்துக்கொண் டார். ஆஸ்ரமத்திற்குத் திரும்பி வந்த பிறகு அவர் தாமே அத்துண்டுகளைக் குப்பைத் தொட்டியில் கொண்டுபோய்ப் போட்டார்.

ஒரு கூட்டத்தாருக்குக் கண்ணில் படாத சிறிய குற்றம் ஒன்று மற்றொரு கூட்டத் தாருக்கு மனவேதனை உண்டுபண்ணக்கூடிய பொருந்தாத செயலாகத் தென்படுகின்றது. இன்றைக்கு உலகம் முழுதும் பண்பாட்டுத் துறையில் ஒன்றுபட்டு வருகிறது. வெவ்வேறு நாடுகளிலிருக்கும் அறிஞர்கள் சமுதாயப் பண்

பாடு சம்பந்தமாக ஒன்று கூடி ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அப்படிச் செய்வது பாராட்டத்தக்கது. அதற்கிடையில் அவர்கள் கடைப்பிடித்து வருகின்ற தேசாச்சாரங்களும் அவர்கள் பார்வைக்கு வருகின்றன. சீலத்திலும், சமயத்துறையிலும் நம் நாடு மற்ற நாடுகளுக்குப் பாடம் புகட்டுகின்ற பெரிய நிலையில் இருக்கிறதென்பதைக் கிட்டத்தட்ட உலகம் முழுதும் அறிந்திருக்கிறது. அதே வேளையில் வேறு சில துறைகளில் இந்தியா கீழ் நிலையில் இருப்பதும் வெளிப்படை. அவைகளுள் ஒன்று வேண்டப்படாத பொருள்களைக் கவலையற்று எங்கு வேண்டுமென்றாலும் தரையில் போடுவதாம். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்' என்னும் கோட்பாட்டின்படி சிறுவயது முதல் கடைசி வரை நம் நாட்டு மக்கள் இந்த அடாத செயலைப் பெருவாரியாகக் கையாண்டு வருகிறார்கள். கற்றவர்கள் இதில் கருத்தைச் செலுத்தி இப்பழக்கத்தை மாற்றுதல் பொருட்டுத் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இதைக் குறித்துப் பிரச்சாரம் ஏராளமாகச் செய்யவேண்டும். 'Keep England Clean–இங்கிலாந்து நாட்டைச் சுத்தமாக வைத்திரு' என்பது அந்த நாட்டின் தேசீய பிரச்சாரம் ஆகும். அதே விதத்தில் பயன்படாத பொருளைத் தரையில் போடாதே என்று நம்மவர்க்கு நாம் பிரச்சாரம் பண்ண வேண்டும். ரயில் வண்டி, அதைச் சேர்ந்திருக்கும் கக்கூஸ் ஆகியவைகளை உபயோகப்படுத்தியான பிறகு அடுத்து வருகிறவர்களுடைய வசதியை முன்னிட்டு அவைகளைச் சுத்தப்படுத்தி வைத்துவிட்டுப் போகவேண்டும். பொதுநன்மைக்காக அமைந்துள்ள சத்திரம், சாவடி, கல்யாண மண்டபங்கள், பேருந்துநிலையங்கள் ஆகியவைகளை உபயோகப்படுத்தியான பிறகு அழுக்குப்படிந்த பாங்கில் அவைகளை விட்டுப் போகலாகாது. முன்பிருந்ததைவிட நல்ல பாங்கில் அவைகளைத் துப்புரவுபடுத்திவிட்டுப் போவது நன்று. மனிதர்கள் அன்றாடம் புழங்கும் கடைத்தெரு, அங்காடி போன்ற பகுதிகளிலும் குப்பை செத்தை முதலியவற்றை ஒரு நாளில் மூன்று வேளைகளாவது ஒதுக்கிச் சுத்தப்படுத்துதல் அவசியமாகும். புகையிலையை எந்த வடிவத்திலும் உபயோகிக்காதிருத்தல், குடிநீரின் தூய்மையைப் பாதுகாத்தல் போன்ற செயல்கள் ஒரே நேரத்தில் தனக்கும், சமூகத்துக்கும், தன் குடும்பத்துக்கும், தான் வழிபடும் கடவுளுக்கும் செய்கின்ற சேவைகளாகும். வீட்டிலுள்ள குப்பைகளையெல்லாம் வீதியில் கண்ட இடங்களில் கொண்டு வந்து போடுவது பொருந்தாது. வாயில் வெற்றிலை போட்டுத் தோன்றிய இடங்களிலெல்லாம் துப்புவதும் அநாகரீகமான பழக்கமாகும். சாப்பிட்ட எச்சில் இலையை அசட்டுத்தனமாக எங்குமே வீசிப்போடலாகாது. அதற்கேற்ற இடத்தை அவரவரே ஒதுக்கி வைத்துப் பழகவேண்டும்.

இச்சீர்திருத்த சம்பந்தமான மனப்பான்மை முக்கியமானது. பல நாடுகளோடு இணக்கம் பூணுகிற நம் நாடு சீலத்தில் போன்று உலக நடைமுறையிலும் முன்னணியில் இருக்கவேண்டும். மற்ற நாடுகளில் காணும் இச்சீரிய பழக்கத்தை நாமும் அதிவிரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தெய்வப்பற்று

தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் என்பவர் திருவாரூரில் இருந்து வந்தார். சோழ ராஜா திருவாரூர் கோவிலில் தரிசனம் பண்ணிவிட்டு வந்தபொழுது ஒரு பெரியவர் நிஷ்டையில் இருந்தார். அவருக்கு அப்பொழுது நிஷ்டை கலைந்துகொண்டிருந்தது. சோழ அரசன் சொன்னதாவது: "யாரோ பெரியவர் போலிருக்கிறது. அவருக்கு மூன்று கிராமங்கள் மான்யமாக எழுதிவையுங்கள்." நிஷ்டை கலைந்து உலக ஞாபகத்துக்கு வந்தவருக்குச் சோழனின் உத்தரவு காதில்பட்டது. "அண்ட பகிரண்டமும் எனக்குச் சொந்தமாயிருக்க அதை ஒதுக்கிவிட்டு மூன்று கிராமத்தில் எனக்கு எல்லை போடுபவன் யார்?" என்று சுவாமிகள் கேட்டார். உலகத்தைவிட இறைவனே மிகப்பெரிய சொத்து என்று தெளிந்தவனே உண்மையான தெய்வப்பற்று உடையவன் ஆவான்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி : (428) பக்தர்களுக்கு ஏன் துக்கம் வருகின்றது?

துக்கத்தில் இரண்டு பாங்குகள் உள்ளன. ஒன்று இவ்வுலக சம்பந்தமானது. மற்றது கடவுள் சம்பந்தமானது. மக்களுள் உலகப் பற்று வைத்திருக்கிறவர்கள் லௌகிகர் எனக் கருதப்படுகின்றனர். கடவுள் பற்று வைத் திருக்கிறவர்கள் பக்தர்கள் எனக் கருதப்படு கின்றனர். இவ்வுலகிலே உடல் தாங்கியிருக் கிற அனைவருக்கும் துக்கம் உண்டு. ஜீவாத் மனுக்கு அமைந்திருக்கிற இலட்சணங்களில் ஒன்று துக்கப்படுதல். எந்திரக்கல் இரண்டுக் கிடையில் அகப்பட்டுக் கொள்ளுகிற தானியம் உடைபடுகிறது. அதே விதத்தில் மண்ணுலகம், விண்ணுலகம் ஆகிய இரண்டுக்குமிடையில் உடல் தாங்கியிருக்கும் ஜீவர்களனைவரும் ஏதே னும் ஒரு விதத்தில் துக்கப்பட்டேயாகவேண் டும். இவ்வுலக சம்பந்தமான பொருள், போகம், பதவி, சுகஜீவனம் முதலியன வாய்க்கவில்லை யென்று விசனப்படுவது உலகத்தவர் படுகிற துயரம். மற்றுத் தனக்கு தெய்வத்தின் அருள் இன்னும் வந்து வாய்க்கவில்லையே, தனக்கு அருள்தாகம் உண்டாகவில்லையே, அருள் தாகம் போதவில்லையே, வாழ்நாள் வீணாகக் கழிந்து போகிறதே-என்றெல்லாம் ஏற்படுகிற துயரம் பக்தர்களுக்கு உரியதாம். இத்தகைய துயரம் இருந்தால்தான் பக்தன் ஒருவன் முன் னேற்றமடைய முடியும். உலகத்தவன் ஒரு வனை உலக சம்பந்தமான துக்கம் உலக வாழ் வில் முன்னேற்றமடையும்படி தூண்டுகிறது. தான் அடைந்திருக்கவேண்டிய பாரமார்த்தி கப் பெருநிலையை அடையவில்லையே என்கிற துக்கம் பக்தன் ஒருவனை ஆத்ம சாதனத்தில் தூண்டுகிறது. ஆகவே உடல் எடுத்திருக் கிற உயிர்கள் அனைத்தும் துக்கத்தைத் தவிர்க்க முடியாது. உலக சம்பந்தமான துய ரம் மனதைப் பலஹீனப்படுத்துகிறது. மேலும் அத்துயரம் மனதில் குழப்பத்தையும், தெளி வின்மையையும் உண்டாக்குகின்றது. பரம் பொருளைநாடித்துயரப்படுகின்ற மனது துயரத் துக்குப்பின் தெளிவடைகின்றது. பரநாட்டத் தில் உண்டாகிற துயரம் மனதிலுள்ள மாசைப் போக்குகிறது. எனவே இவ்விரண்டு வித மான துக்கங்களுள் பரம்பொருளை நாடி அடை கிற துக்கம் பாராட்டுதற்கு உரியது. பிறவிகள் பல எடுத்து இவ்வுலக சம்பந்தமான நிலையற்ற சம்பத்துக்களைப் பெறுதலில் கதறிப் பதறி அழுது சலித்துப்போன பிறகே கடவுளை அடைதற்குரிய அருள்தாகம் வருகிறது. கட வுளை நாடி அழுகின்றவர்கள் அல்லது துக்கப் படுகின்றவர்கள் பாக்கியவான்கள். 'வல்வினை யேன் அழுதால் உன்னைப்பெறலாமே' என் கிறார் மாணிக்கவாசகர். இத்தகைய தெய்வீக துக்கத்தை அடையப் பெறுதவர்கள் சாதனத் தில் முன்னேற்றம் அடைவதில்லை.

கேள்வி : (429) ஜாதியை முற்றிலும் ஒழிக்க இயலுமா?

ஜாதியை ஒருபொழுதும் முற்றிலும் அழிக்க முடியாது. உயிர்வகைகள் ஜனிக்குமிடத்தை முன்னிட்டு ஜாதி என்பது வந்துள்ளது. உயிர் வகைகள் ஏதேனும் ஓர் இடத்தில் பிறந்தே யாகவேண்டும். பிறப்புக்கு மூலகாரணமாயிருக் கின்ற பெற்றோர், சூழ்நிலை முதலியவைகளை முன்னிட்டு ஜாதி பாகுபடுத்தப்படுகிறது. பிறப்பு எடுப்பவைகளுள் மேலான குடியில் பிறப்பவர்கள் இருக்கிறார்கள். பண்பிலே கீழ்த் தரமான குடியில் பிறப்பவர்கள் இருக்கிறார் கள். பண்பிலே மேலோராயிருப்பவர்களையும், கீழோராயிருப்பவர்களையும் ஒரே பாங்கில் பொருள் படுத்தலாகாது. ஸ்தாவரங்களுள் வாழை, தென்னை ஆகியவைகளிடத்து ஜாதி வேற்றுமை உண்டு. நாய், குதிரை ஆகிய மனிதனுக்குப் பயன்படுகிற விலங்குகளுள் ஜாதி வேற்றுமை உண்டு.

அத்தகைய வேற்றுமையை அறிந்து நடந்து கொள்ளாவிட்டால் அது மனிதனுக்கு நஷ்ட மாகும். மக்களுள் தேவகணம், நரகணம், அசுரகணம் ஆகிய மூன்று இனத்தாரை உல கில் பார்க்கிறோம். இந்த மூன்று கணங்களை யும் ஒரே இனமாக்க முயலுவது பொருந்தாது. முயன்றால் அது மனிதனுக்குப் பெரிய நஷ்ட மாக முடியும். ஆக இனவேற்றுமை படைத் திருப்பதே இயற்கையின் பாங்கு ஆகிறது. பரிபாகத்தில் மக்களுக்கிடையில் உள்ள வேற்

றுமையை முன்னிட்டுக் கீழோராயிருப்பவர்களை நாம் அலட்சியப்படுத்தலாகாது. 'கீழோராயினும் தாழவுரை' என்பது கோட்பாடு. உலகம் இருக்கும்வரையில் சிருஷ்டி உண்டு. வேற்றுமையை வளர்ப்பதே சிருஷ்டியின் திட்டம். ஆனால் அவ் வேற்றுமையை முன்னிட்டு மனிதனை மனிதன் சிறுமைப்படுத்தலாகாது. மனிதனை மனிதன் கண்ணியப்படுத்துதற்கேற்ப கண்ணியப் படுத்துகிறவன், கண்ணியப்படுத்தப்படுகிறவன் ஆகிய இரு சாராரும் மேல் நிலையுறுகின்றனர். 'பெருமையும் சிறுமையும் தான் தர வருமே' என்பது கோட்பாடு. மனிதனை மட்டுமன்று, ஈஸ்வர சிருஷ்டியில் உள்ள உயிர்களனைத்தையும் கண்ணியமாக நடாத்துதல் சான்றோர் போக்காகிறது.

ஆகவே ஜாதியை ஒழிக்க முயலுவது ஆகாத செயலாம். சான்றோர் கூட்டத்தைப் பெரிய தாக்குவதே நன்று. முயற்சிக்கேற்றவாறு அதில் முன்னேற்றமடைவது திண்ணம்.

கேள்வி: (430) கடவுள் உள்ளத்தில் இருக்கிறார் என்றால் உள்ளத்தினுள் நினைத்தால் போதுமா? புறத்தே வழிபாடு செய்ய வேண்டாமா?

நாம் எங்குச் சென்றாலும் அங்கு எல்லாம் காற்று நிறைந்திருக்கிறது. ஆகையினால் சுவாசிப்பதற்கு நாம் காற்றை எங்கும் எடுத்துச் செல்வதில்லை. வீட்டுக்குள் வசிக்கும்பொழுது காற்றை அங்கே சுவாசிக்கிறோம். வெளியில் வந்தால் அவ்விடத்திலும் காற்றைச் சுவாசிக்கிறோம். அதே விதத்தில் கடவுள் எங்கும் நிறைபொருள். அவரை அகத்திலும் வழிபடலாம். புறத்திலும் வழிபடலாம். ஆனால் அகத்தில் வைத்து அவரை வழிபடுவதற்கு ஏற்ற நல்ல பயிற்சி வேண்டும். ஆயிரக்கணக்கான பேர் ஆலயங்களுக்குச் சென்று அங்கே தங்களுக்குத் தெரிந்துள்ளபடி கடவுள் வழிபாடு பண்ணுகிறார்கள். அங்ஙனம் கடவுளைப் புறத்தே வைத்து வழிபடுவது சுலபம். ஆலயத்துக்குச் செல்லுகின்ற பலபேர்களுள் யாரோ சிலர்தாம் இறைவனுடைய சாந்நித்தியத்தை ஆலயத்தினுள் உணருகின்றனர். வழிபடுபவர்களுள் பெரும்பான்மையோர் செய்வது ஏதோ சமுதாயப் பழக்க வழக்கத்தை முன்னிட்டேயாம். இறைவனுடைய சாந்நித்தியத்தை ஆலயத்தினுள் உணர்ந்து பழகவேண்டும். பிறகு அப்பழக்கத்தை அனுசரித்து ஆலயத்தினுள் அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து அவனுடைய சாந்நித்தியத்தை உள்ளத்தினுள்ளே வைத்துத் தியானித்துப் பழகவேண்டும். அப்படிப்பழகுகின்றவர்களுக்கு உள்ளத்தினுள்ளே மனச்சாட்சியாக அவர் வீற்றிருப்பது விளங்குகிறது. அது சிறந்த பயிற்சியின் விளைவாம். பிறகு கருவிகரணங்களை ஒடுக்கிவைத்துவிட்டு அகத்திலே தியானவஸ்தையில் கடவுள் சாந்நித்தியத்தை உணர்ந்து பழகுவது நல்ல பயிற்சியாகும். அதே பயிற்சியைப் பிறகு கோயில் வழிபாட்டிலும் பெற்றுவருவது உசிதம். சாதனையின் ஆரம்பதசையில் உள்ளவர்களுக்குப் புறத்தே வடிவத்தை வைத்து வழிபாடு செய்வது சுலபமாக இருக்கும். புற வழிபாட்டை முறையாக ஆழ்ந்து செய்துவந்தால் அவ்வழிபாடு அகத்தில் ஆழ்ந்து பதிகிறது. புறத்தில் பார்த்த தெய்வ வடிவத்தைப் பிறகு அகத்தில் வைத்துப் பார்ப்பதும் வழிபடுவதும் சுலபமாக இருக்கும். எந்த மூர்த்தியின் வடிவத்தைத் தியானிக்கின்றோமோ, அந்த மூர்த்தியின் பெருமைகளெல்லாம் மனதுக்குத் தெளிவாக விளங்கும். மூர்த்தியின் பெருமைகளில் மனம் ஈடுபட்டுவிடுமாகில் அகவழிபாடு சிறப்பாக அமையும். சாதகர்கள் அவரவர்கள் மனபரிபாகத்துக்கு ஏற்ப புறவழிபாட்டையோ அகவழிபாட்டையோசெய்து வரலாம். எனவே அகம் புறம் என்னுதபடி கடவுள் வழிபாட்டை யாண்டும் செய்துவருவது நல்ல பயிற்சியாகும். கடவுள் உள்ளத்தில் இருக்கிறார் என்பது உண்மையாயினும், அவருடைய சாந்நித்தியத்தை உள்ளத்தில் உணர்வது எல்லார்க்கும் சாத்தியமில்லை. வெறுமனே வாயால் கடவுள் உள்ளத்தில் இருக்கிறார் என்று சொல்லுபவர்கள் அவரை உள்ளத்தால் நினைத்தவர்களல்லர். புறவழிபாட்டின் மூலம் அவருடைய சாந்நித்தியத்தை உள்ளத்தில் உணர முயலவேண்டும். அகம், புறம் ஆகிய இரண்டு வழிபாடுகளை ஆழ்ந்து செய்து மனதைப் பண்படுத்தினால் அவர் உள்ளத்திலிருப்பதை நன்கு உணரலாம். அதன் பிறகு அவரை உள்ளத்தினுள் நினைப்பது சாத்தியமாகும்.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

சர்வமும் வாசுதேவமயம். இப்பிரபஞ்சம் முழுவதும் அவரிடத்திலிருந்து வந்துள்ளது என்பதை உணர்ந்த யோகிக்கு வேறு ஆசை ஏது? அவனது விஷய வாசனைகள் (உலக ஆசைகள்) முழுவதும் ஒழிந்து போகின்றன. அந்த யோகி தன் குதிகாலால் மலத் துவாரத்தை மூடிய வண்ணம் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு பிராணயாமம் செய்கிருன். அவன் அங்ஙனம் உள்ளே மெதுவாக வாங்கும் பிராணவாயுவானது நாபி முதலான ஆறு ஆதாரங்கள் (சக்கரங்கள்) வழியாக மேலே ஏறுகிறது. நாபியில் இருக்கும் மணிபூரத்தி லிருந்து ஹிருதயத்தில் இருக்கும் அனகதத் துக்கும் பிறகு அங்கிருந்து கழுத்தின் கீழ்ப் பகுதியிலிருக்கும் விசுத்தி சக்கரத்துக்கும் அங் கிருந்து புருவமத்தியில் இருக்கின்ற ஆக்ஞைக் கும் பிராணனை மேலே செலுத்துகிருன். இதன் மூலம் அவனது இந்திரியங்கள் வசப் படுத்தப்படுகின்றன. அவன் ஏழு துவாரங் களையும் (நாசித்துவாரம் இரண்டு, காதுத் துளை இரண்டு, வாய் ஒன்று, கண்கள் இரண்டு) அடைத்துப் பிராணனை மேலும் மேலும் மேல் நோக்கியே செலுத்துகிருன். உலக ஆசை முற்றும் அற்றுப் போய், கடவுள் தரிசனம் ஒன்றில் மட்டும் தீவிரமான பேர் உணர்வு இருக்குமாகில் அத்தகைய யோகிக்கு இவைகள் எல்லாம் எளிதில் கை கூடுகின் றன. இந்த நிலையில் யோகிக்குத் தெய்வ தரி சனம், சுவானுபூதி, சாக்ஷாத்காரம் வந்தமை கிறது. புருவ மத்தியில் பிராணன் அரை க்ஷணம் தான் நிலைத்திருக்கிறது. பிறகு பிரம்ம ரந்திரம் அல்லது கபாலத்திற்குச் செல்கிறது. உயர்ந்த ஆத்மானுபவம் வாய்க்கிறபோது ஜீவாத்மா மேலும் சரீரத்தில் இருக்க முடிவ தில்லை. யானை ஒன்று குடிசைக்குள் வாழமுடி யாது. குடிசை சிதறிப் போகும். அதேபோல பிரம்மரந்திரத்தை எட்டிய பிராணன் அதைத் தகர்த்துக்கொண்டு வெளியேறுகிறது. இந்திரி யங்களையும், உலகப்பொருள்களையும், உதறித் தள்ளிவிட்டு உயர்ந்த லக்ஷியத்தில், கடவுளில் ஒன்று பட்டு விட்ட மனதுக்கு ஜீவனுக்கு இவ் வுடல் விழுவதே தெரியாது. நம் தலையிலி ருந்து ஒரு முடி உதிர்வதை நாம் அறியாது இருப்பது போன்றது அது. ஆனல் அன்பான அரசனே, நீ உயர்ந்த பிரம்ம பதத்தை அடைய விரும்பினல், அதாவது எங்கு அஷ்ட சித்தி களும், உலகை ஆளும் பிரபுத்வமும் வாய்க் குமோ, எங்குச் சீலத்திலும் அறநெறியிலும் நிறைநிலை அடைந்த உத்தமர்கள் திருக்கூட் டம் வாழுமோ அத்தகைய பதத்தை அடைய விரும்பினல் பிராணன் பிரம்மரந்திரத்தைப் பிளந்துகொண்டு மேலே செல்லும்போது அத னுடன் இந்திரியங்களும் மனதும் அதைப் பின் பற்றிச் செல்ல வேண்டும். அதாவது ஒரு சிறிதளவு ஜீவபோதம், ஆசை, அகங்காரம் மிஞ்சியிருந்தால் அந்த எஞ்சியுள்ள விருப்பம் நிறைவேறுவதற்கு ஏற்ற வாழ்வு அமைகிறது. யார் பக்தி சாதனத்தில் மிக உயர்ந்த நிலை அடைந்துள்ளார்களோ, யார் அஷ்டாங்க யோக அனுஷ்டானம் உள்ளவர்களோ, யார் சமாதிநிலை அடைந்தவர்களோ அவர்களுக்கு மிக சூக்ஷ்மமான சரீரம் ஒன்று உண்டாகிறது. அவர்கள் அந்த நிமிஷம் எங்கும் தடையின்றி சஞ்சரிக்கலாம். கர்மத்தில் உழல்பவர்களுக்கு அவர்களுடைய வினைப்பயன் எஞ்சியிருந்தால் இந்த உயர்நிலை வந்து வாய்க்காது. யார் சுய நலத்தை விட்டவனே, தான் தனது என்பதை மறந்தவனே மற்ற உயிர்களுக்குப் பிரதிபலன் எதிர்பாராது அன்புடன் பணிவிடை பண்ணு கிருனே அவனே நல்ல கர்மயோகி ஆகிருன். அவன் வாழ்வின் தூய்மையால் மரணமடைந்த பிறகு அவன் அக்னி தேவதையிடம் அழைத் துச் செல்லப்படுகிருன். ஆங்கு அவனது வினைப்பயன்கள் எல்லாம் கருகிப் போய்விடு கின்றன. அதன் பிறகு அவன் படிப்படியாக ஸ்ரீ வாசுதேவரை அடைகிருன். இப்படிப் பர மனுக்கு அந்நியமாக எவ்வளவு உயர்நிலை யில் வாழ்ந்தாலும் அது ஜீவபோதமே ஆகும். ஒரு கல்ப காலம் இப்படி வாழ்ந்தாலும் அத னல் பிரயோஜனம் என்ன? ஞான முயற்சி, அருள்தாகம், பரமனைக் குறித்து ஏங்குதல் ஏதும் இல்லாததால் அது ஒரு சுகஜீவனத்

துக்கு நிகர். முன்னேற்றம் ஏதும் விரைவில் அமையாது. இந்த உலகங்களுக்கு சிசுமாரா, ஆதித்ய, துருப, மகாலோக, விஷ்ணு சக்கர என்றெல்லாம் புராணம் பெயரிட்டிருக்கிறது. ஒன்றைவிட ஒன்று மேலானதாகக் கருதப்படு கிறது.

கல்ப முடிவில் விராட் புருஷனின் வாயிலி ருந்து வெளிப்பட்ட ஊழித் தீயானது யாவற் றையும் தகித்துவிடுகிறது. உலகங்கள் ஊழித் தீயில் வெந்து சாம்பலானாலும் அதில் வாழும் உயர்ந்த ஜீவர்கள் மேலும் உயர்ந்த உலகங்களுக்குச் செல்கின்றனர். ஆங்கு அவர் கள் மறுபடியும் நீண்டகாலம் நோய், மூப்பு, தளர்ச்சி, துன்பம் துயரம் இல்லாமல், பயம் இல்லாமல் வாழ்கிறார்கள். பூலோகத்தில் நிறைந்த செல்வத்தில் சௌபாக்கியமாக வாழ் வதற்கு நிகர் அது. அதில் ஆத்ம முன்னேற் றம் ஏதும் இல்லை. ஜடம்போன்ற நிலை என்று பாகுபடுத்தா விட்டாலும் ஆத்மார்த்தமான முன்னேற்றமில்லாத வெறும் வாழ்க்கை அது. கடவுளை அடையவேண்டும் என்கிற உயர்ந்த லக்ஷியமும் அதற்கான தீவிர முயற்சியும் அற்ற வாழ்க்கை எவ்வளவு சுகமானதானாலும் அது வெறும் பாழான வாழ்வே ஆகும். மறு படியும் பிறப்பு இறப்பு என்கிற சக்கரத்தில் உழன்றே ஆகவேண்டும். இந்த சுகவாழ்வு எதற்கு ஆகும்? கடவுளை நினைத்து ஏங்காத, துடிக்காத, உருகாத வாழ்வு வீணே ஆகும். ஆ! என்பிரபுவை அடைந்தால் அன்றித் துன்ப துயரம், பிறப்பு இறப்பு ஆகியன நிரந்தர மாகத் தீரமாட்டா. என் ஆண்டவன் ஒரு வனே எனக்கு வேண்டும்.

என் பிரபு, என் ஆண்டவன் கருணை மிக்க வன். ஜீவர்களின் முன்னேற்றமற்ற தேங்கிய நிலையையும் அறியாமையில் உழலும் நிலைமை யையும் கண்டு அவன் மிகவும் இரங்குகிறான். அவன் ஜீவர்களுடன் பிரிக்கமுடியாதபடி தோன்றாத்துணையாய் உள்ளான். தோளில் ஆட்டைப் போட்டுக்கொண்டு ஆட்டைத்தேடிக் கொண்டிருக்கிறான் என்று யாரோ ஒருவனின் செயலைப்பார்த்துப் பரிகாசம் செய்கிறோம். ஆனால் அந்தோ! எல்லா ஜீவர்களின் நிலைமை யும் அங்ஙனமே உள்ளது. என் ஆண்டவனோ மிகமிகக் கெட்டிக்காரன். அவன் நமக்கும் பக்கத்திலேயே இருக்கிறான். ஆனால் நம்மால் அவனைக் கண்டுபிடிக்க முடியாது. அவனை விட்டு நம்மால் வாழவே முடியாது. அவனே இப்பிரபஞ்ச பூதங்களாகவும், அவைகளை அனு பவிக்கும் இந்திரியங்களாகவும், அந்தக்கரண மாகவும் ஆகியிருக்கிறான். இப்பிரகிருதி யும் தத்துவமும் எல்லாம் என் ஆண்டவனே. அவன் அலகிலா விளையாட்டுடையான். தன் னில் தானே இன்புற்றிருப்பவன். இங்ஙனம் லீலைகள் புரிந்து தானே தனது ஆனந்தத்தை அனுபவிக்கிறான். அவன் ஆனந்தக் கூத்தன்; தீராத விளையாட்டுப் பிள்ளை. ஆனால் ஜீவர் களுக்கோ உலகில் ஓயாத தொல்லை. ஆனால் அவைகள் எல்லாம் இன்பத் தொல்லைகள். உலகின் இன்பதுன்பங்கள் யாவும் முடிவில் நலனையே செய்பவைகளாக உள்ளன. இது அவன் அருள். அவனது அருளிலிருந்து இவ் வுலகம் வந்துள்ளது; அவன் அருளால் நிலை பெற்றிருக்கிறது; அவன் அருளிலேயே ஒடுங்கி விடுகிறது. மறைப்பவனும் அவனே, அருளு பவனும் அவனே.

அன்புள்ள அரசனே! இவ்வுலகில் என்றும் நிலைத்துள்ள முக்திமார்க்கங்கள் இரண்டு உள் ளன. ஆத்ம சாதகன், அவன் அருளால் அவன் தாளைப்பற்றிக்கொண்டுஏதோ ஒருசாதனத்தை உறுதியாகக் கடைப்பிடித்து அவனது ஆழ்ந்த தன்மையாலும் பேர் உணர்ச்சியாலும் ஆண்ட வனை அடைதல் ஒரு வழி. எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்துப் பரிணாம வளர்ச்சியில் படிப் படியாகத் தானே கிரம முக்தி அடைதல் இரண்டாவது வழி. ஸ்ரீ ஹரியானவர் பிரம்ம தேவனின் தபஸில் மகிழ்ந்தவராக இவைகளை எல்லாம் அவருக்கு உபதேசித்தார். இவ்வுலக மாந்தருக்கு இதைவிட நலன் தரும் விஷயம் வேறு யாது உளது? கடவுளிடத்தில் தன் மனதை, வாழ்வை ஒப்படைப்பதைத் தவிர இவ்வுலகில் பெரிய வேலை வேறு என்ன இருக்கிறது? வேத பாராயணம், சுவாத் யாயம், பக்திப்பாடல்கள் ஓதுதல் ஆகியவற் றின் பயன் இதுவே. என் பிரபு எல்லா ஜீவர் களின் உள்ளத்திலும் திருஷ்டாவாக (காண் போனாக) மனச்சாட்சியாக யாண்டும் உள் ளான். யான்அறியாது என்உள்ளத்தே புகுந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றான்.

சிரத்தை

(சகோதரி நிவேதிதையின் ஆங்கிலக் கட்டுரையை யதீஸ்வரி கிருஷ்ணப்ரியா மொழிபெயர்த்தது.)

நல்வாழ்க்கையின் அடிப்படையான நற்குணங்களை நாம் மறந்துவிட்டோம். நம் வாழ்விலும், நம் குழந்தைகளுக்கு நாம் தரும் பயிற்சியிலும் இந்த அடிப்படை நற்குணங்களை மீண்டும் கொண்டுவரவேண்டும். வாழ்க்கையில் எல்லாரும் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்று யாரும் கட்டாயமாகக் கூற முடியாது. ஆனல் எல்லாரிடமும் உண்மை, எளிமை, தூய்மை, வீரம் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கலாம். இவை எல்லாம் ஒரு அடிப்படை நலனின் பல முகங்கள் என்று சொல்லவேண்டும். சிரத்தை, வாழ்வின் நலன்களை எல்லாம் தன்பால் ஈர்க்கின்ற ஒருவகை சக்தி. எடுத்த லட்சியத்தில் தளர்வுரு ஈடுபாடு—இதுதான் அந்த அடிப்படைச் சிறப்பு. இந்தச் சிரத்தையினல்தான் தன் மனதிற்குத் தெளிவாகத்தெரியும் ஓர் உண்மையை மனிதன் பொறுமையோடு வாழ்நாள் முழுவதும் கடைப் பிடிக்கிருன்.

பொறுமை, விடாமுயற்சி, சிரத்தை—இது தான் தர்மம் ஆகிறது; சேதன அசேதனப் பொருட்கள் யாவற்றின் இயல்பும் ஆகிறது. தீயின் தர்மம் எரிப்பது. நெருப்பு தன் தர்மத்திலிருந்து எந்தக் காலத்தும், எந்த இடத்தும் பிசகுவதில்லை. அக்ஞானத்தில் உழலும் போதும் ஞானத் தெளிவு பெற்றுள்ள போதும் உயிர்கள் யாவும் தம் சொந்த வீடாகிய இறைவனை நோக்கி இடைவிடாது பயணம் போய்க் கொண்டிருக்கின்றன. இதுதான் உலகில் பிறப்பெடுத்த உயிர்களின் தர்மம். சிறப்பாக, மனிதன் சிரத்தை மயமானவன். சிரத்தை எதுவோ அதுவே அவனுமாம். நம் தர்மம் இதுதான், வாழ்வின் லட்சியம் இதுதான் என்று தெரிந்து நாம் முயற்சி செய்யும்போது, இந்தத் தர்மமானது உலகையே மாற்றவல்ல பெருஞ்சக்திகளின் கருவிகளாக நம்மை ஆக்குகிறது. இதைத் தவிர வேறு ஒரு பேற்றை நாம் விரும்புவோமா? சிரத்தையோடு செயல் புரியும்போது, சருகுகளையும் செத்தைகளையும் சூருவளி அடித்துச்செல்வதுபோல, மனச்சாட்சியின் வல்லமைவாய்ந்த ஆணைகள் நம் வாழ்வைத் தம் போக்கில் நடத்திச் செல்லும். இதைவிட உயர்ந்தநிலை நமக்குக் கிடைக்குமா? வேறு எதுவும் நமக்கு மகிழ்ச்சி அளிக்குமா? சிரத்தையே வடிவெடுத்தவன் எதையும் சுய நலத்திற்காகப் பயன்படுத்துவதில்லை. அவனைப் பெரிய லட்சியங்கள் தம் கருவிகளாகப் பயன்படுத்துகின்றன. இதுதானே நமக்கு வேண்டும். ஒரு மனிதன் லட்சியத்திற்குத் தன்னை முற்றும் கொடுத்துவிடும்போது அவன் அழைத்துச்செல்லப்படும் பாதை முள் நிறைந்ததாக இருக்கலாம். இருக்கட்டுமே! அது குறித்து அவன் அஞ்சுவதில்லை. ஓய்வையோ இளைப்பாறுதலையோ அவன் தேடுவதில்லை. துன்பத்திலிருந்து விடுபடத் துடிப்பதில்லை. துயரத்தின் நடுவில் பேரின்பத்தைக் காண்பதில் அவன் வெற்றிபெறுகிருன்.

நம்மிடம் இப்போது இல்லாதது, நாம் வேண்டுவது சிரத்தைதான். அரிய அனுபூதிகள் அனைத்திற்கும் அடிப்படையாயும் திறவுகோலாகவும் இருப்பது சிரத்தை. தெய்வ சம்பத்துக்கள் எல்லாவற்றுள்ளும் எளியது சிரத்தை; பிற குணங்களால் செய்ய முடியாதவற்றையும் செய்துவிடுவது சிரத்தை. லட்சியம் கண்ணுக்குத் தெரியாத போதும் கருத்து முழுவதையும் அதில் உறுதியாக வைத்திருப்பது, அதன் பொருட்டு உண்மையாக உழைப்பது—இதுதான் வெற்றியின் முழு ரகசியம் ஆகும். சிரத்தையுடைய ஒருவனிடத்து உண்மை, தூய்மை, வீரம் இவற்றிற்கு எதிரிடையான தீய குணங்கள் தலையெடுக்குமா? முறையாக விடாமுயற்சி செய்பவனுடைய அறிவிலே ஏற்படும் தெளிவின் பல வடிவங்கள் தாமே உண்மையும், தூய்மையும், வீரமும்! தான் ஆத்மார்த்தமாக நாடும் குறி இன்னது என்று தெளிந்து, அதைத் தவிர வேறு ஒன்றையும் எண்ணமல், தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் அந்தக் குறியை நோக்கியே செலுத்துபவனை, பொய்மையும், கோழைத்தனமும், சுக போகத்தில் நாட்டமும் ஆசை காட்டி மயக்கிவிட முடியுமா? அத்தகைய ஆபத்துக்களால் தாக்குருதவண்ணம் சிரத்தை அவனுக்கு உறுதி

யான கவசமாய் இருக்கும்போது, இந்த எதிர் மறைச் சக்திகளால் அவனை என்ன செய்து விட முடியும்?

பகட்டும், ஆணவமும், தன்னிடம் இல்லாத மேன்மையை இருப்பதாகக் காட்டுகின்ற அல்லது இருக்கின்ற சிறிது நலனை மிகைப்படுத்துகின்ற பொய்யொழுக்கமும் சிரத்தையின் எதிரிகள். விளம்பரத்தில் விருப்பம் கொள்வதும், செயலை விடுத்துப் பேச்சில் பெரிதாக இருப்பதும், கடைப்பிடிக்கவேண்டிய முறையில் கருத்தைச் செலுத்தாமல் பலனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதும் ஒரு மனிதனின் சிரத்தையைப் பாழ்படுத்திவிடும். இவை ஒரு நாளும் வெற்றியைத் தரமாட்டா. இத்தகைய அசுர குணங்களை உடையவன் தோல்விக்காகவே ஆக்கப்பட்டிருக்கிறான். இந்தப் பொய்யொழுக்கத்தைத்தான் நம் உள்ளத்திலிருந்து களைய வேண்டும்—அத்தகைய உணர்ச்சியின் சிறு சம்ஸ்காரம் கூட மனதில் தங்கிவிடாதபடி அதன் வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் பிடுங்கி எறிந்துவிட வேண்டும். இந்த அகங்காரத்தை வெல்வதற்குத் தான் நம் குழந்தைகளுக்கு நாம் பயிற்சி கொடுக்கவேண்டும். தான் சொன்னதையே நிலைநாட்ட விரும்பும் தன்முனைப்பு, அற்பப் புகழை விரும்பும் ஆசை, எளிதாகக் கிடைத்துவிடும். கெட்ட பெயரைக்கூட விரும்புகின்ற மட்டமான மனப்பான்மை—இவை பெருங்குரலெடுத்து நம்முள் கூப்பாடு போடும்போது அவற்றுக்குச் செவி சாய்க்காமல், உறுதியாக அவற்றை மறுக்க வேண்டும். சொல்லை விடச் செயலைப் பெரிதாக்கிச் சுருக்கமான பேச்சாலும் அடக்கத்தாலும் அவற்றை வெல்ல வேண்டும்.

ஆனல் தற்காலத்தின் போக்கோ வீராப்புப் பேசுவதை வளர்ப்பதாகவே இருக்கிறது. நம் முன்னோர்களிடம் இருந்த எளிமை, அமைதியான கண்ணியம் ஆகியவற்றிலிருந்து நாம் வெகுதூரம் விலகி வந்து விட்டோம். தம்மிடம் இருந்த சிறப்புக்களைப்பற்றி நினைத்துப் பார்க்காமல் இருந்ததால்தான் நம் முன்னோர்களுக்குச் சிக்கல் ஏதும் இல்லாத எளிமை வாய்த்தது. நம்மிடத்து இன்று இல்லாதது இந்த எளிமை தான். தற்பெருமை பாராட்டாத இந்த எளிமையைப் பெறுவதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. நம் முன்னோர்கள் செய்தது போலவே, நாமும் நம்மை விடப் பெரிய லட்சியங்களை, உயர்ந்த கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை நம் குறிக்கோளாக்க வேண்டும். ஏதோ சிறிது காலம் அவற்றைக் கடைப்பிடித்துப் பின் விட்டு விடாமல் வாழ்வின் இறுதி வரையில் அந்த லட்சியங்களை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான், கண்ணடியில் தெரியும் பிம்பத்தைப் போன்று வெறும் தோற்றமாய் இருக்கின்ற ஆணவத்தை மறக்க முடியும்; பரம்பொருள் என்னும் வெள்ளத்தில் நாம் மூழ்கிக் கலந்து விடும்போது தான் அகங்காரத்தை நீக்கமுடியும்.

ஆனல் இறை எண்ணத்தில் தன் தனி வியக்தியை இழப்பது என்பது ஐதிகமாக வந்துள்ள வழிபாட்டு முறைகளைத்தான் குறிக்கும் என்று நினைத்துவிடக்கூடாது. கடவுளோடு நாம் சாதாரணமாகச் சம்பந்தப்படுத்தாத, நமக்கு நன்கு பரிச்சயமான சில நல்ல லட்சியங்கள்கூட நம்மை மறக்கச் செய்யும். ஏதேனும் ஓர் உயர்ந்த லட்சியத்தை எடுத்துக் கொண்டு அதைப்பற்றிய எண்ணத்தில் நம்மை மறந்துவிட முடியும் என்றால் நம் வாழ்க்கை பயனுடையதாகிறது. சிரத்தையின் மூலமாக அத்தகைய பெருநிலையை நாம் அடைவோமாக.

அருளாளர்கள் இயற்றிய அறநுல்களைப் படிக்கும் தோறும் நம்முடைய மனம் பண்பாடு அடைகிறது. இறைநாட்டத்தில் ஈடுபடும் ஆத்ம சாதகர்கள் நாள்தோறும் உயர்ந்தோரின் கூற்றுக்களைச் சிந்தனை செய்யவேண்டும். வேதங்களும், உபநிடதங்களும், புராணங்களும், இதிகாசங்களும் நமக்குக் கிடைத்துள்ள பொக்கிஷங்களாகும். இவற்றை எல்லார்க்கும் எடுத்தியம்புவது சாதகர்களின் முக்கியக் கடமைகளில் ஒன்றாகும். தேவாரம், திவ்யப் பிரபந்தம் போன்ற அமுத வாக்குகளைப் பரப்பும் அளவு அவர்கள் உள்ளத் தெளிவும், ஆன்மிக விழிப்பும் அடையப் பெற்றவர்களாகிறார்கள்.

இந்தியாவுக்கு வேண்டிய கல்வி

(ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் 1897 ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் தேதி டார்ஜிலிங்கிலிருந்து ஸ்ரீமதி சரளா கோசலாவுக்கு எழுதிய கடிதம்)

நாம் என்ன நன்மை செய்யவேண்டுமென்று விரும்புகின்றோமோ அதற்கேற்ற செயல் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். என்னுடைய சிநேகிதி குமாரி முல்லரிடமிருந்து உங்களுடைய உள்ளம் தாய்நாட்டுப் பற்றும், தயாள குணமும், தளரா விடாமுயற்சியும் உடையது என்பதைக் கேள்விப்பட்டுள்ளேன். என் வாழ்க்கையில் நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள முற்பட்டதை அறிந்து நான் உங்களிடம் என்னுடைய திட்டத்தை எடுத்துச் சொல்வதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். முதலில் உங்களுடைய ஆழ்ந்த சிந்தனைக்கு நான் கண்ட முடிவுகளை எடுத்துக் கூறுகின்றேன்.

நாம் யாண்டும் அடிமைகளாக இருந்து வருகின்றோம். இந்திய மக்களுக்கு ஞானம் பிறப்புரிமையாகும். அந்த ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்கு வாய்ப்புக்கொடுக்கப்படுவதில்லை. கடந்த சில நூற்றாண்டுகளாக மேனாட்டு மக்கள் சுதந்திரத்தை நோக்கி மிக விரைவாகச் சென்று கொண்டிருக்கின்றார்கள். இந்தியாவில் மன்னனுடைய ஆட்சி மக்களைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறது. மக்களுக்குச் சுதந்திரமாகத் தீர்மானம் செய்யும் உரிமை இல்லை. மேனாடுகளில் மக்கள் எதையும் தாங்களாகவே செய்துகொள்ளலாம்.

சமுதாய விஷயங்களில் அரசன் இப்பொழுது யாதும் கூறுவதில்லை. இந்திய மக்களுக்குத் தன்னம்பிக்கையைத்தான் வலியுறுத்த வேண்டும். வேதாந்தம் கூறும் தன்னம்பிக்கையை யாரும் செயல்முறைக்குக் கொண்டுவருவதில்லை. தாங்கள் மேற்கொண்ட காரியத்தைத் தீவிரமாகச் சிந்தித்துப் பிறகு விவாதித்துச் சக்திகள் அனைத்தையும் பயன்படுத்தி அதைச் செயலுக்குக்கொண்டுவருதல் ஆகிய மேனாட்டுத் திட்டம் நம் தேசத்தில் வழக்கத்தில் இல்லை. ஆகையால் அந்நிய ஆட்சியில் நாம் முன்னேற்றம் அடையாதவர்களாக இருக்கின்றோம். நம்முடைய நிலை இத்தகையது என்றால் பொது மக்களைக்கொண்டு பெரிய காரியம் செய்ய முற்படுவது வீண் பிரயத்தனமாக முடியும். தலை இல்லாதபொழுது தலைவலி என்ற நோய்க்கு இடமில்லை. ஏதாவது ஒரு விஷயத்தை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோமானால் அதிலேயே நம் சக்தி முழுவதும் செலவாகி விடுகிறது. நல்ல செயல் புரிவதற்குச் சக்தி எஞ்சி இருப்பது இல்லை. வங்காள மக்களிடையே பேச்சு அதிகம்; செயல் மிகக் குறைவு. செல்வம் படைத்தவர்களிடமிருந்து நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. இளைஞர்களைத்தான் நான் நம்புகின்றேன். பொறுமையாகவும், உறுதியாகவும் அவர்கள் செயல் புரிவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இனி, செயலைப்பற்றிப் பேசுவோம். கல்வியானது மேன்மக்களிடமிருந்து படிப்படியாகப் பாமரமக்களுக்கிடையிலும் பரவ ஆரம்பித்துள்ளது. தற்கால மேலைநாடுகளின் நாகரிகத்துக்கும், இந்தியா, எகிப்து, ரோம் முதலிய நாடுகளில் நிலவிய தொன்மையான நாகரிகத்துக்கும் உள்ள வேறுபாடுகள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. பொது மக்களிடையே கல்வியையும், நல்லறிவையும் பரப்புவதற்கேற்ப நாடு முன்னேற்றமடைவதை நான் காண்கின்றேன். செருக்கும், அரசியல் அதிகாரமும் கொண்ட சிலர் கல்வித்துறையில் ஆதிக்கம் செலுத்தி வருவதே இந்தியாவின் அழிவுக்குக் காரணமாகும். இந்தியா மீண்டும் உயர்வடைய வேண்டுமானால் பொதுமக்களிடையே கல்வியைப் பரப்புவதை முறையாகச் செய்தாக வேண்டும். சமூகச் சீர்திருத்தத்தைப் பற்றி ஆடம்பரமான கூச்சல் கடந்த ஐம்பது ஆண்டுகளாக எழுப்பப்பட்டு வருகிறது. இந்தியாவின் பலபாகங்களுக்கும் சென்ற பத்து ஆண்டுகளில் நான் சென்றிருக்கின்றேன். சமூகச்சீர்திருத்த சங்கங்கள் பல இடங்களில் அமைக்கப்பட்டிருப்பதைக் கவனித்தேன். ஆனால் ஒரு சங்கமாவது சமுதாயத்துக்கு நலன் செய்வதை நான் பார்க்கவில்லை. பொதுமக்களின் இரத்தத்தை உறிஞ்சி கனவான்கள் என்று

சொல்லிக்கொள்பவர்கள் பலர் தொடர்ந்து தங்களைத் தனவான்களாக ஆக்கிக்கொண்டிருக்கின்றனர். முகமதியர்கள் நம் நாட்டுக்கு வரும்பொழுது எத்தனை போர்வீரர்களைக் கொண்டுவந்தார்கள்? ஆங்கிலேயர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? பணத்துக்காகத் தங்கள் தகப்பன், சகோதரர்களுடைய கழுத்தை வெட்டுவதற்கு லக்ஷக்கணக்கான மக்கள் இந்தியாவைத் தவிர வேறு எங்கு இருக்கின்றார்கள்? எழுநூறு ஆண்டுகள் நிகழ்ந்த முகமதிய ஆட்சியில் அறுநூறுலக்ஷம் முகமதியர்களும், நூறு ஆண்டுகள் நிகழ்ந்த ஆங்கில ஆட்சியில் இருபதுலக்ஷம் கிறிஸ்துவர்களும் தோன்றக் காரணம் என்ன? இந்த நாட்டின் கலாச்சாரம் ஏன் மறைந்துகொண்டே வருகிறது? திறமை வாய்ந்த தொழிலாளிகள் ஐரோப்பிய போட்டியைத் தாங்கமுடியாமல் ஏன் மடிந்துகொண்டே இருக்கிறார்கள்? ஜெர்மானியர் உழைப்பால் பல நூற்றாண்டுகளாக நிமிர்ந்துநின்ற ஆங்கிலத் தொழிலாளியின் நிலை எந்தச் சக்தியால் அழிக்கப்பட்டது?

இதற்கெல்லாம் கல்விதான் காரணம். ஐரோப்பாவில் பல நகரங்களுக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள ஏழை மக்களின் கல்விநிலையையும், இன்பநிலையையும் நான் பார்த்த பொழுது இந்திய ஏழைமக்களின் நிலையைக் குறித்து என் கண்கள் நீர் பெருக்கின. அங்குள்ள நிலைக்கும் இங்குள்ள நிலைக்கும் வேற்றுமை இருப்பதற்குக் காரணம் கல்வியேயாகும். மேனாட்டுக்கும் நம் நாட்டுக்கும் இடையே இத்தகைய வேற்றுமை எதனால் ஏற்பட்டுள்ளது? இதற்குக் கல்விதான்காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது. கல்வியின் மூலமாகவும், தன்னம்பிக்கையின் மூலமாகவும் மேனாட்டவர்களிடத்திலுள்ளபேரான்மா விழித்தெழுந்துள்ளது. நம்மிடத்திலுள்ள ஆன்மீக உணர்ச்சி உறங்கும் நிலையில் இருக்கின்றது. அவ் ஆன்மீக உணர்ச்சியை விழித்தெழச் செய்யவேண்டும். நியூயார்க்கில் நான் ஒரு தடவை அயர்லாந்திலிருந்து இங்கு வந்து குடியேறிய மக்களைக் கவனித்துப் பார்த்தேன். அவர்கள் அந்நகருக்கு வந்தபோது கண் குழி விழுந்து, குடியிருக்க இடமின்றி, கையில் காசு இன்றி, காலடியில் நசுக்கப்படும் புழுப் போன்று சிந்தனைத்திறன் அற்றவர்களாக இருந்தார்கள். கையில் ஒரு குச்சியும், அக் குச்சியின் முனையில் தொங்கிக்கொண்டிருந்த கந்தைத்துணி மூட்டையும்தான் அவர்களுக்கு உடைமைப் பொருள்களாக இருந்தன. அவர்கள் நடையில் சோர்வும், கண்களில் அச்சமும் தென்பட்டன. ஆறு மாதங்களில் அவர்களிடம் பெரிய மாறுதல் ஏற்பட்டிருப்பதை நான் கண்டேன். அவர்கள் நிமிர்ந்து நேராக நடக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களுடைய உடையும் அடியோடு மாறிவிட்டது. அவர்களுடைய நடையிலும் பார்வையிலும் தென்பட்ட அச்சக்குறிகள் அடியோடு அகன்றுவிட்டன. அதற்குக் காரணம் என்ன? அதற்கு நமக்கு விடை வேதாந்தம் கூறுகிறது. அயர்லாந்து நாட்டில் அவர்கள் இகழ்ச்சிக்கு உரியவர்களாக வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் நாட்டில் அவர்களுக்கு இருந்த சூழ்நிலை "உனக்கு நற்கதிக்கு நம்பிக்கை இல்லை. நீ அடிமையாகப் பிறந்திருக்கின்றாய். அடிமையாகவே இருந்துவிட்டுப் போகவேண்டியவன் தான்" என்று புகட்டிய வண்ணமாக இருந்தது. பிறந்ததிலிருந்து அவர்கள் அதையே கேட்டுக் கொண்டிருந்தமையால் தங்களைக் கீழானவர்களாகவே எண்ணி வந்தார்கள். அவர்களிடத்திலிருந்த பேரான்ம ஒளியும் சுருங்கிவிட்டது. அமெரிக்காவுக்கு அவர்கள் வந்தவுடனேயே அவர்கள் காதில் நாலாப்பக்கமும் இருந்து ஒலித்ததாவது: "நீங்கள் எங்களைப்போன்ற மனிதர்கள். உங்களைப் போன்ற மனிதன்தான் இத்தனையும் செய்திருக்கின்றான். எனவே நீங்களும் நாங்களும் எதையும் செய்ய முடியும். தைரியமாகச் செயலில் ஈடுபடுங்கள்." இவ்வொலியைக் கேட்டதும் அவர்கள் தலைநிமிர்ந்து பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களிடத்திலிருந்த பேரான்மா விழிப்படைந்தது. இயற்கை எங்கும் எழுச்சியுற்றிருந்ததாக அவர்கள் பார்த்தார்கள். "எழுந்திருங்கள்; விழித்திருங்கள்; குறிக்கோளை அடையும்வரை உழையுங்கள்" என்ற கடோபநிஷத் உபதேசத்தை அமெரிக்கச் சூழ்நிலை அவர்கள் காதில் ஓயாது ஓதிக்கொண்டிருப்பதை உணர்ந்தார்கள்.

(தொடரும்)

சுவாமி பிரேமானந்தர் வாழ்வும் வாக்கும்

(பிரம்மச்சாரி சேகர்)

[352 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு நாள் காலை சுவாமி பிரேமானந்தரைத் தனியாகச் சந்திக்க நேர்ந்தபோது 'ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கிறது' என்று நான் அவரிடம் கூறினேன். 'நீ ஒரு புரட்சிக் காரனா?' என்று அவர் கேட்டார். வியப்புற்றவனாய், 'அது எப்படி ஐயா உங்களுக்குத் தெரிந்தது?' என்று நான் அவரிடம் கேட்டேன். சுவாமி கூறினார்: ''எல்லாம் எங்களுக்குத் தெரியும். நாட்டுக்குச் சேவை செய்யும் முறை இதுவன்று. உன் பாதை தவறானது. நீ செய்யும் காரியம் எனக்குத் திருப்தியாயில்லை. நாளை தீவிரவாதிகளாகிய உன் நண்பர்களையும் அழைத்துக்கொண்டு வா; மஹராஜிடம் உங்களை அழைத்துச் செல்கிறேன்!'' அதன்படி மறுநாள் நானும் என் நண்பர்கள் இருவரும் சுவாமி பிரம்மானந்தரும் (மஹராஜ்) சுவாமி பிரேமானந்தரும் அமர்ந்திருந்த அறைக்குச் சென்றோம். அவர்களை நமஸ்கரித்து விட்டு நாங்கள் அமர்ந்துகொண்டோம். சுவாமி பிரம்மானந்தரிடம் எங்களைப் பற்றிய விவரங்களையெல்லாம் கூறிவிட்டு எங்களுக்கு நல்ல அறிவுரை கூறும்படி சுவாமி பிரேமானந்தர் அவரிடம் கேட்டுக்கொண்டார். சுவாமி பிரம்மானந்தரும் "உங்களுடைய நற்பண்புகளை முதலில் வளர்த்துக் கொள்ளுங்கள். பின்பு தேச சேவையில் ஈடுபடலாம். வன்முறை உங்களுக்கு ஏற்ற வழியாகாது. விவேகானந்த சுவாமிகளை உதாரண புருஷராக எடுத்துக்கொண்டு அவர் வழியில் முன்னேறிச் செல்லுங்கள். வெடி மருந்து நனைந்து போனால் வெடிப்பதில்லை. அது நன்கு உலர்ந்திருந்தாலோ நெருப்புப் பட்டவுடன் வெடித்துவிடும். அதுபோல உங்களை இப்போது வழி நடத்திச் செல்பவர்கள் குறுகிய மனப்பான்மையுடையவர்கள். அதனால் உங்கள் செயல் எதுவும் பயனளிக்கவில்லை. உங்களிடம் நற்பண்பு இன்னும் உருவெடுக்கவில்லை என்பதைத் தான் அது காட்டுகிறது'' என்று அறிவுரை கூறினார்.

அதற்கு நான் மறுமொழியாக, "ஐயா, நீங்கள் விவேகானந்த சுவாமிகளை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என நினைக்கிறேன். தாய் நாட்டுக்காக இரத்தம் சிந்தவும் தயங்கவேண்டாம் என்று அவர் கூறியிருப்பதை நீங்கள் படிக்கவில்லையா? அதைத்தானே நாங்களும் செய்துகொண்டிருக்கிறோம்?'' என்று கூறினேன். என்னுடைய இந்த வார்த்தைகளே சுவாமி பிரேமானந்தரின் சினத்தைக் கிளறிவிடப் போதுமானவையாக இருந்தன. "நீ முட்டாள்; யாருடன் பேசிக்கொண்டிருக்கிறாய் என்று உனக்குத் தெரியவில்லையா? கடந்த இருபது வருடங்களாக சுவாமிஜியை நாங்கள் அறிவோம். நாங்கள் ஒன்றாக உணவு அருந்தினோம், ஒன்றாக விளையாடினோம், ஒன்றாகப் பேசி விவாதித்தோம், ஒன்றாகச் சேவை செய்தோம்—அவரை நாங்கள் புரிந்துகொள்ளவில்லை என்று நீ பிதற்றுகிறாய். அவருடைய புத்தகங்களில் சில பக்கங்களை மட்டும் படித்துவிட்டு அவரை முழுவதும் புரிந்து கொண்டுவிட்டதாக இப்போது உளறுகின்றாய்" என்று பொழிந்து தள்ளிய சுவாமி பிரேமானந்தர் சுவாமி பிரம்மானந்தரிடம் தொடர்ந்து சொன்னார்: ''மஹராஜ், நீங்கள் இவன் என்ன சொன்னான் என்று கேட்டீர்களா? நமக்கெல்லாம் சுவாமிஜியைப் பற்றித் தெரியாதாம்! இவனுக்கு ஒரு குதிரைக்குள்ள அறிவாவது இருக்கிறதா? என்னை இவன் தன் முதுகில் சுமந்து செல்லமுடியுமா என்று பார்க்கிறேன்.''

இவ்வாறு கூறியவர் என்னைப் பாதங்களாலும் கைகளாலும் தவழ்ந்து செல்லும்படி பணித்தார். என்மீது கால்களை இருபுறமும் தொங்கப் போட்டவாறு அமர்ந்துகொண்டு அந்த அறை முழுவதும் ஒரு குதிரையைப்போல் சுற்றி வரும்படி செய்தார். ஓரிரு நிமிடங்கள் கழித்து என் முதுகிலிருந்து கீழே இறங்கி 'எல்லாம் சரியாகிவிடும். போ' என்று கூறினார். அன்றுடன் தீவிரவாதிகளிடம் எனக்கிருந்த பற்றுதலும் தொடர்பும் ஒரு முடிவுக்கு வந்தன.

மற்றொரு நாள் சுவாமி பிரம்மானந்தரும் மற்றவர்களும் டாக்காவிலிருந்து சில மைல்

கள் தொலைவிலிருந்த நாராயன் குஞ்ச் என்னு மிடத்துக்குச் சென்றனர். நானும் இரு நண்பர்களும் அங்குச் சென்று இரவு சாப்பாட்டு நேரம் வரை சுவாமிகளுடன் பேசிக்கொண்டிருந்தோம். அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்காரருக்கு நாங்களும் சாப்பிட அமர்ந்து விடுவோமோ என்னும் பயம் வந்து விட்டது; அதைக் குறிப்பால் உணர்த்தவும் செய்தார். சுவாமி பிரேமானந்தருக்கு வந்து விட்டது கோபம்! "இவர்கள் குருநாதராகிய பரமஹம்ச தேவரின் பக்தர்கள். இவர்களுக்கு உங்களால் உணவு கொடுக்க முடியவில்லை என்றால் எனக்கும் உணவு தேவையில்லை" என்று உணர்ச்சி பொங்கக் கூறினர். அந்த வீட்டுக்காரர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு எங்களையும் சாப்பிட அழைத்தார்.

1916 ஆம் ஆண்டு கோடை விடுமுறையின் போது நான் சுவாமி பிரேமானந்தரின் அனுமதி பெற்றுக்கொண்டு பேலூர் மடத்திற்குச் சென்றிருந்தேன். மடத்தில் சேர விரும்புவதாகவும் அவரிடம் தெரிவித்தேன். பி. ஏ. தேர்வு எழுதிவிட்டு வரும்படியும் பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம் என்றும் கூறி ஆசி பெறுவதற்காக என்னை ஜெயராம்பாடியிலிருந்த புனித அன்னையாரிடம் அவர் அனுப்பி வைத்தார். 1916 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தீவிரவாதிகளுடன் நான் கொண்டிருந்த பழைய தொடர்பின் பொருட்டு எனக்கு இரண்டு வருடச் சிறைதண்டனை கிடைத்தது. விடுதலை பெற்ற பின் பேலூர் மடத்துக்குச் சென்றிருந்த போது சுவாமி பிரேமானந்தர் உடல் நலம் குன்றியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். குறுகிய காலத்திற்குப்பின் அவர் மஹாசமாதி எய்திவிட்டார். ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் எனக்கு அவருடன் ஏற்பட்ட தொடர்பு பிற்காலத்தில் ஏற்பட்ட கஷ்டதசைகளிலெல்லாம் ஊக்கத்தையும் உறுதிப்பாட்டையும் ஊட்டக்கூடிய பான்மையை என்னிடம் வளர்த்திருந்தது."

சுவாமி ஸத்பிரகாசானந்தர் கூறுகிறார்: "சுவாமி பிரேமானந்தரைப்போன்று நெருக்கமாகப் பழகக்கூடிய மஹான்கள் வெகு சிலரே. ஒரு முறை நான் கங்கைக் கரையிலிருந்து பழைய மடத்துக் கட்டடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தபொழுது எதிர்ப்பட்ட ஒரு சந்நியாசியைப் பார்த்து 'பாபுராம் மஹராஜ் எங்கே இருக்கிறார்?' என்று கேட்டேன். தம்மையே சுட்டிக்காட்டிக்கொண்டு அவர் கூறினர்: "இங்கே தான் இருக்கிறார். நீங்கள் ஏன் அவரைப் பார்க்க விரும்புகிறீர்கள்?" "தங்களைப் பார்க்கும்படி சுவாமி பிரம்மானந்தர் அனுப்பினர்" என்று நான் கூறினேன்.

அவர் ஆசிரமத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தபொழுது தம் அறையில் ஓய்வாக அமர்ந்திருப்பதைப் பார்க்கமுடியாது; வெளியே ஏதாவது காரியம் பார்த்துக்கொண்டுதான் இருப்பார். புதியவர்கள் யாராவது மடத்துக்கு வந்தால் நெடுநாள் பழகிய ஒருவரைப்போன்று அவர்களுடன் உரையாடியும் உபசரித்தும் மகிழ்வித்து வந்தார். ஒரு சாதுவினுடைய குறிப்பிடத்தக்க பண்பு எப்போதும் இறைவனைப் பற்றியே பேசிக்கொண்டும் சிந்தித்துக்கொண்டும் இருப்பதுதான் என்று பரமஹம்சர் கூறுவதுண்டு. அதற்குப் பிரத்தியட்சப் பிரமாணமாய் இருந்தவர் சுவாமி பிரேமானந்தர்.

சுவாமி பிரேமானந்தர் மிக எளிய வாழ்க்கை வாழ்ந்தார். முறையாக வழிபாடு செய்வதைப் போன்றே காய்கறி வெட்டுவது முதல் தோட்டத்தில் களை பறிப்பது வரை எல்லாக் கடமைகளையும் குறை சொல்வதற்கு இடமின்றி முறையாகச் செய்து வரவேண்டும் என்று அவர் கூறுவார். பேனாவிற்கு மை ஊற்றும் போது மை கீழே சிந்தக்கூடாது என்று கண்டிப்பார் சுவாமி பிரேமானந்தர். ஒரு முறை நான் ஒரு தனிரகத்தைச் சேர்ந்த ஒரு காய்கறியைச் சித்தப்படுத்திக்கொண்டிருந்தேன். அவர் என்னிடம், 'நீ தோலுடன் சதைப்பகுதியையும் அல்லவா நீக்கிக்கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டார். பொருள்களை வீணாக்குவது அவருக்கு அறவே பிடிக்காது. அதுமட்டுமன்று. காரியங்களை ஒழுங்குப்பாடின்றிச் செய்தாலும் அவர் கோபம் கொள்வார். யாரும் சிரத்தையுடன் கவனிக்காத சிறு சிறு செயல்களைச் செவ்வனே செய்வதில்தான் ஒருவனுடைய பண்பாடு வெளியாகின்றது என்று அவர் கூறுவது வழக்கம்.

வயதில் மூத்தவர்களும் கூட சுவாமி பிரேமா

னந்தரிடம் பயபக்தியுடனும் மரியாதை செலுத்தும் பாங்கிலும் நடந்துகொண்டதுதான் நான் முதன் முதலில் மடத்துக்குச் சென்று தங்கிய போது கண்ட அதிசயமாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணரே முன்பு 'பாபுராம் எலும்பு வரைக்கும் முழுக்க முழுக்கப் பரிசுத்தமானவன்' என்று கூறியிருக்கிறுர் அல்லவா? ஒரு மனிதன் தன்னைப் போன்ற இன்னொரு மனிதனுக்கு இவ்வளவு மரியாதை காண்பிக்கக்கூடும் என்று நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. ஆச்ரம வாழ்க்கையை மேற்கொண்டவர்களில் பலர் சுவாமி பிரேமானந்தருடன் ஏற்பட்ட தொடர்பால் மனப்பக்குவம் பெற்றவர்களே ஆவர். ஆயினும் அவர் தாமாக யாருக்கும் தீக்ஷை வழங்கிவிடுவதில்லை. தம்மை அணுகுபவர்களைப் புனித அன்னையிடமோ சுவாமி பிரம்மானந்தரிடமோ நேரே அனுப்பிவிடுவார். அவர்கள் இருக்கும்போது தாம் குரு ஸ்தானம் வகிக்கலாகாது என்பதில் அவர் அக்கறை மிகக்கொண்டிருந்தார்.

ஒரு முறை டாக்கா நகரில் வசித்துவந்த ஒரு பக்தர் சுவாமி பிரேமானந்தரை விருந்துக்கு அழைத்திருந்தார். அங்கு வந்திருந்த மியூஸியத்தின் நிர்வாகி ஒருவர் சுவாமி பிரேமானந்தரிடம், "ஞானம், பக்தி எல்லாம் கொடு என்று இறைவனிடம் கேட்டுப் பெறவேண்டும் என்று தாங்கள் கூறுகிறீர்கள். நமக்கு எது வேண்டும் என்று ஆண்டவனுக்குத் தெரியாதா?" என்று கேட்டார். சுவாமி, "ஆம், நீங்கள் உண்மையான விசுவாசத்துடன் அவ்வாறு நம்பினுல் கடவுளிடம் அவ்வாறு கேட்கவேண்டியதில்லை. ஆனுல் உலக இயல்புடைய மக்கள் பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டுத் தானே இறைவனிடம் பிரார்த்திக்கிறுர்கள்? இறைவனிடம் வேண்டிப் பிரார்த்திக்கிறீர்கள் என்றுல் அது ஏதாவது உயர்ந்த பொருளுக்காக இருக்கட்டும்" என்று பதில் கூறினர்.

பொது மேடைகளில் உரையாற்றும்போது சுவாமி பிரேமானந்தர் முன்பே தயார்செய்து கொண்டு பேசுவதில்லை. அவருடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து வரும் புத்தம் புதிய சொற்கள் கேட்பவர்களின் கருத்தை உடனடியாகக் கவர்ந்துவிடும். கிழக்கு வங்காளத்தில் ஒருமுறை துப்புரவுப் பணி ஒன்றில் தம்மைக் கடுமையாக ஈடுபடுத்திக்கொண்டார் சுவாமி பிரேமானந்தர். மற்றவர்கள் தம்மை உதாரணமாகப் பின்பற்றட்டும் என்று பெரு முயற்சி எடுத்துக்கொண்டதால் உடல் நலக்குறைவு ஏற்பட்டு அவர் மிகவும் வேதனைப்பட நேர்ந்தது. அதினின்று அவர் மீளவே முடியவில்லை.

C.C. சென் என்ற சுங்க அதிகாரி கூறுகிறுர்: சுவாமி பிரேமானந்தரையும் மற்ற மடத்துச் சாதுக்களையும் தரிசிக்கும் பேறு எனக்கு அபரிமிதமாகக் கிடைத்தது. சுவாமி பிரேமானந்தர் கூறியபடி பொதுமக்கள் சேவையில் நாங்கள் ஈடுபட்டுவந்தோம். ஒரு பள்ளிக்கூடம், ஓர் ஆஸ்பத்திரி, ஓர் உடற்பயிற்சிக் கூடம், மளிகைக் கடை ஒன்று ஆகிய எல்லாவற்றையும் அமைத்து நிர்வகித்தோம். மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் செயல் அக்கால ஆங்கில அதிகாரிகளுக்கு அறவே பிடிக்கவில்லை. அவர்கள் எங்களுக்குப் பெரும் தொல்லைகளைக் கொடுத்துவந்தனர். சுவாமி பிரேமானந்தர்கூறுவார்:"உங்களிடம் துப்பாக்கியும் வெடிகுண்டும் இல்லாதவரை நீங்கள் ஏன் கவலைப்படவேண்டும்? நீங்கள் சுவாமிஜியின் காரியங்களில் ஈடுபட்டிருக்கிறீர்கள்.உங்கள்நாட்டிற்காகஉழைப்பதினின்று சிறிதும் பின்வாங்காதீர்கள்."

ஒருநாள் மடத்தில் சாப்பிடும் இடத்தை நான் சுத்தம்செய்துகொண்டிருந்தபோது மதுரமான இசை காதில் வந்து பாய்ந்தது. பக்கவாத்தியங்களின் துணையுடன் ஓர் இளைஞன் அற்புதமாகப் பாடிக்கொண்டிருந்தான். என்னையறியாமல் நான் அந்த இடத்தை நோக்கிச் சென்று அவன் பாடிய பாடலில் சொக்கிப் போய் நின்றுகொண்டிருந்தேன். என் தோளை யாரோதொடவே திரும்பிப்பார்த்தேன். சுவாமி பிரேமானந்தர் அங்கே நின்றுகொண்டிருந்தார். "சுவாமிஜியின்பாடலை நீகேட்டதில்லையா? இன்னும் அற்புதமாக அவர் குரல் இருக்கும்; ஏன்? நம் குருநாதர் பாடும்போது அதைவிட மிகவும் இனிமையாய் இருக்கும். சரி,வா, செய்யவேண்டிய வேலை நிறைய இருக்கிறது" என்று என்னை அழைத்துக்கொண்டு போய்விட்டார்.

ஒருமுறை நல்ல வெயில் நேரத்தில் நாங்கள் எல்லாரும் சாப்பிட அமர்ந்திருந்தோம். பேலூர் மடத்தின் முற்றத்திற்குக் குறுக்கே இருந்த ஒரு மரத்தடியில் ஒரு போலீஸ் அதி

காரி நின்றுகொண்டிருந்தார். நாங்கள் இன்னும் சாப்பிடத் தொடங்கவில்லை. சுவாமி பிரேமானந்தர் என்னிடம் அந்த அதிகாரியை அழைத்து வரும்படி பணித்தார். அந்த அதிகாரியோ தான் கடமையில் ஈடுபட்டிருப்பதாகவும் தற்போது வருவது சாத்தியமில்லை என்றும் விடையிறுத்தார். மறுபடியும் சுவாமி என்னை அவரிடம் அனுப்பி அழைத்துவரச் செய்து அவருக்கும் உணவு பரிமாறச்செய்தார். அவர் சிறப்பு விருந்தாளியாகவே சுவாமியால் கருதப்பட்டார். பிற்காலத்தில்அந்தப் போலீஸ் அதிகாரி சுவாமி பிரேமானந்தரின் பரமபக்தர்களில் ஒருவரானார். அவரிடம் சுவாமி பிரேமானந்தர் கூறினார்: "எங்களுடன் சேர்ந்து கடவுள் பிரசாதம் அருந்திவிட்டு நாங்கள் பேசிக்கொண்டிருப்பதையும் சிறிது கேட்டீர்களானால் உங்கள் கடமையைப் பிறகு இன்னும் சிறப்பாகச் செய்வீர்கள்."

சுவாமி பிரேமானந்தர் அன்பின் திருஉருவமாகவே எங்களுக்குத் தோன்றினார். ஆயினும் அவர் சொல்வார்: "பரமஹம்சர் நம்மிடம் காட்டிய அன்பில் நூற்றில் ஒரு பங்குகூட என்னிடம் கிடையாது. கருணைவெள்ளமாக வன்றோ நம் குருநாதர் இருந்துவந்தார்!"

அல்மோராவில் இருந்த விவேகானந்த ஆய்வகத்தின் தலைவர் ஸ்ரீ போஷிசென் கூறுகிறார்:

"சுவாமி பிரேமானந்தர் டியோஹாரில் நோயுற்றிருந்த போது அவருக்குச் சேவை செய்து வந்த ஆனந்தானந்தர் சுவாமி அதிகம் சாப்பிட்டால் உடல் தேறும் என்று அவாவுற்றவராய் வழக்கத்துக்கும் அதிகமான பாலைக் காய்ச்சி வற்றச்செய்து சுவாமிக்குக் கொடுத்து வந்தார். அதை எவ்வாறோ கண்டுகொண்ட சுவாமி பிரேமானந்தர், 'எனக்கென்று எவ்வளவு பால் வாங்குகிறீர்கள்?' என்று அவரைக் கேட்டார். அவர் உண்மையைக் கூறத் தானே வேண்டும்! 'மூன்று சேர்' என்று பதில் சொன்னார். 'அது எப்படி இருக்க முடியும்? ஒன்று நீ அந்தப் பாலினின்று தின்பண்டங்கள் செய்திருக்கவேண்டும் அல்லது பாலை நீயே குடித்திருக்க வேண்டும்' என்று சுவாமி பிரேமானந்தர் கூறியதும் ஆனந்தானந்தர் மிகவும் வருந்தி அன்று இரவே மடத்தைவிட்டுச் செலத் தீர்மானித்து விட்டார். அவ்வாறே அன்றையக் கடமைகளையெல்லாம் முடித்துவிட்டு யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் மிக விரைவாக நடந்து வெளியே சென்றுவிட்டார். போகும் பொழுதே "இப்பொழுது யார் சுவாமியைக் கவனித்துக்கொள்வார்கள்? ஒருவேளை அவர் கட்டிலில் கட்டப்பட்டிருக்கும் கொசுவலை சிறிது நழுவிவிட்டால் சரிசெய்வதற்கு யார் இருக்கிறார்கள்?" என்று கவலைப்பட்டுக் கொண்டே சென்றார். மனம் திகைப்புற்றவராய் யாரோ தம்மைப் பிடித்துப் பின்னால் இழுப்பதுபோல் உணர்ந்த அவர் புறப்பட்ட வேகத்தில் மடத்தை நோக்கித் திரும்பிச் சென்று விடியற்காலை சுவாமி பிரேமானந்தரின் படுக்கையருகில் சென்று சேர்ந்தார். "ஆக! நீ மீண்டும் திரும்பி வந்துவிட்டாயா என் குழந்தாய்!" என்று சுவாமி அன்பொழுகக் கேட்டார். "நீ சென்ற பிறகு என்னால் இரவு முழுவதும் தூங்கவேமுடியவில்லை, தெரியுமா?" என்று பரிவுடன் அவர் கூறியபோது ஆனந்தானந்தருக்குத் தாம் அப்படியே காற்றில் பறந்து செல்வது போன்று குதூகலம் ஏற்பட்டது!"

சுவாமி பிரபவானந்தா கூறுகிறார்:

"நகைக்கடைக்காரன்தான் ஒரு நகையின் சரியான மதிப்பைக் கூறமுடியும்; அங்ஙனம் ஞானமடைந்த ஒருவர்தான் இன்னொரு ஞானியைப் பற்றிப் புரிந்துகொள்ளமுடியும். இதை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சீடர்களுக்கிடையே நிதரிசனமாகக் காணலாம். ஒரு முறை சுவாமி துரியானந்தரும் சுவாமி பிரேமானந்தரும் சில வருடங்கள் கழித்துச் சந்தித்துக்கொண்டபோது இருவரும் ஒருவரையொருவர் வீழ்ந்து வணங்கிக் கொண்டார்கள். முதலில் எழுந்த சுவாமி துரியானந்தர் கூறினார்: "சகோதரரே, பணிவில் யாரும் உங்களை வெல்ல முடியாது!"

ஒரு சமயம் சுவாமி பிரேமானந்தர் சுவாமி பிரம்மானந்தரிடம், "இந்தக் காவி உடையையும் நாங்கள் தியஜித்துவிட அனுமதிக்க வேண்டுகிறேன். இந்த உடையை அணிந்திருப்பது நாங்கள் சந்நியாசிகள் என்று விளம்பரப்படுத்துவதுபோல் உள்ளது" என்று முறையிட்டார். இது எத்தகைய துறவு மனப்பான்மை என்பதைப் பாருங்கள்! (தொடரும்)

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு. V. S. நரசிம்மன்)

கேள்வி : 26. என்னுடைய வாதம் இது தான். பரம்பொருளை மூன்று நிலைகளில் ஆராயலாம் என்றால் முடிவான அனுபவம் மாறுபட்டதாகத் தோன்றுகிறது அல்லவா?

பதில்: நாம் வீணே வாதம் செய்துகொண்டு, வேறுபட்ட கருத்துக்களைப் பேசுவதில் பயன் இல்லை. சொற்கள் பயன்படுத்தப்படுவது தெளிவு ஏற்படுத்துவதற்காகவேயன்றி வீணுக் குழப்பத்தை ஏற்படுத்த அல்ல. உங்களால் எங்கு உதவ முடியுமோ, அதைச் செய்யுங்கள். அது போதும்.

கேள்வி : 27. ஏதாவது ஒரு சமயம் நாம் மௌனமாக இருக்க வேண்டும்!

பதில் : ஆம்! நாம் துவக்கியது மௌனத்தில்; முடிப்பதும் அதில் இருக்கட்டுமே!

கேள்வி : 28. ஜீவ வியக்தி என்னும் தனித்தன்மை உள்ளது. உலகில் நாம் வாழ்கின்றோம். அந்த வாழ்வினூடே ஏதோ ஒன்றில் லயமடைகின்றோம்; உலகம் மறைகிறது. (இது எப்படிச் சாத்தியம்?)

பதில் : ஆழ்ந்த உறக்கத்தில் நாம் மறைந்து விடுகின்றோம், அல்லவா? தினந்தோறும் நமது தனித்தன்மை (ஜீவ வ்யக்தி) ஆழ மூழ்கி விடுகின்றதே! இது மறுக்க முடியாத உண்மை தானே? (கேள்வி கேட்டவர்: ஆம்). எனவே நமது தனித்தன்மையை மறந்து இருப்பதும் நமது வாழ்வின் ஒரு பகுதியாகும். ஆழ்ந்த உறக்கத்தில் தினமும் இந்த உண்மையை நாம் நிரூபிக்கின்றோம்.

கேள்வி: 29. தனித்தன்மை அழிந்து போனால், வாழ்க்கை தொடர்ந்து எப்படி இருக்கமுடியும்?

பதில்: தனித்தன்மையை ஆழ்ந்த உறக்கத்தில் இழப்பது நமது வாழ்வின் ஓர் அம்சம் என்றுதான் நான் குறிப்பிட்டேன். உடலில் நாம் கொண்டுள்ள அபிமானம் அழிகின்றதே ஒழிய, 'சத்' என்ற நிலை மறைவது கிடையாது.

'சத்தியம்' என்பதை நாம் ஆராயவேண்டும்; ஒரு காலத்தில் இருந்து, மற்றும் ஒரு காலத்தில் இல்லாது இருப்பது 'சத்தியப் பொருள்' ஆகாது. உடல் சொரூபம் என்ற நிலையில் நாம் சத்தியமல்ல; நாம் இன்று உள்ளோம்; பல ஆண்டுகளுக்குப் பின் இந்தச் சரீரத்துடன் இருக்கமாட்டோம். ஒரு குறிப்பிட்ட காரண காரியத்தால் தோன்றி, வேறு ஒன்றால் பாதிக்கப்பட்டு மறைவதும் 'சத்தியப் பொருள்' ஆகாது. 'விழிப்பு' அந்த நிலையில் மட்டுமே உண்மை; கனவிலும், உறக்கத்திலும் அது இல்லை. எனவே இந்த வரையறையைக் கொண்டு ஆராயும் போது 'விழிப்பு' சத்தியம் அன்று; அது தன்னளவில் மெய்ப்பொருள் அன்று; சார்பு நிலையில் (Relative) உள்ள சத்தியப்பொருள் எனலாம்.

கனவு, ஆழ்துயில் ஆகியனவும் அங்ஙனம் சார்பு நிலையில் சத்தியப் பொருள்கள் ஆகின்றன. இம்மூன்று நிலைகளுக்கும் ஆதாரமாக இருப்பது எதுவோ அதுவே சத்தியப் பொருள்! 'ஆத்மா' எத்தகைய மாற்றமும் அடைவது இல்லை. எனவே அது 'சத்' எனப்படும். இந்த ஆராய்ச்சியில் தனி நபர்கள் இடம் பெறுவது கிடையாது; இது முற்றிலும் விவேகத்தைப்பற்றிய விசாரம் ஆகின்றது. 'அவஸ்தா திரய' ஆராய்ச்சி உன்னிடம் மாறாது இருக்கும் அமைப்பை (Personality) சுட்டிக் காட்டுகின்றது. மரணம் அதை நெருங்காது; அது அழிவற்றது; அந்நிலையை அடைவது நமது இலட்சியம்.

கேள்வி : 30. தனிப்பட்ட இயல்புடைய நான் எப்படி அழிவற்ற பொருளாக முடியும்?

பதில் : நிலையற்றதாகக் காணப்படுபவை அனைத்துமே உண்மையில் அழிவற்றவை; தத்த்வம் அஸி என்பது வேதாந்தம். 'தத்' என்பது நிலைத்த பொருள்; உன்னுடைய உண்மையான தனித்தன்மை அதுவே. தோன்றி மறையும் தனித்துவம் கற்பனையால் விளைந்த ஒன்றாகும்.

கேள்வி: 31. நிலையற்றதாகக் காட்சி அளிப்பதற்கு ஆதாரம் யாது?

பதில் : சினிமாவில் 'திரை' ஆதாரம். அது போல் உலகத் தோற்றத்துக்கு ஆதாரம் சிதாகாசம், பூரண உணர்வு; சினிமாவில் திரை

வேறு; படம் வேறு; ஆயின் காணப்படும் உலகம், பூரண உணர்விற்கு வேறுனது அல்ல. எனவேதான் தோற்றமும், ஆதாரமும் இரண்டல்ல; ஒன்றேயான அத்வைதமாகும்.

புராணத்தின் மூலம் இதை விளக்கலாம். சிவமும், சக்தியும் பிரிக்க முடியாதவை; எனவே அர்த்தநாரி—ஈஸ்வரனுக வழிபடுகின்றேம். தோன்றி மறைவதாகச் சக்தி உள்ளது; மாருத ஆதாரமாக இலங்குவதே சிவதத்துவம்.

சமயங்களின் எதிர்காலம்:

ஹிந்து மதத்தில் 'சார்வகர்' என்று ஒரு பிரிவினர் இருந்தனர்; சிந்தனை சுதந்திரம் அவர்களுக்கு இருந்தது. 'பொருள் மெய்' (லோகாயதம்) என்பது அவர்கள் அடிப்படை வாதம். இப்படிப்பட்டோர் என்றும் காணப்படுவர். உலக வாழ்க்கை ஒன்று மட்டுமே அவர்களுக்கு அனைத்தும் ஆகின்றது. "உலகில் எப்படியோ நாம் பிறந்து விட்டோம். நமது உடல் பல மூலப் பொருள்களைக் கொண்டு அமைந்துள்ளது. இது எப்படி உண்டானது என்பதைப் பற்றியும், ஏன் அழிகிறது என்பதைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை. இருக்கும்வரை இன்பமாக வாழலாம். எப்படியெல்லாம் ஆனந்தமாக வாழ முடியுமோ அப்படியெல்லாம் வாழலாம். புலன் இன்பத்திலே திளைப்பதில் தவறு இல்லை. ஒழுக்க நெறியைப்பற்றியும், மரணத்திற்குப் பின் உள்ள வாழ்வைப் பற்றியும் பேசுதல் வெறும் பிதற்றல்கள். மரணத்திற்குப் பின் எதுவும் இல்லை அத்துடன் அனைத்தும் முடிந்து விடுகின்றது. இந்த வாழ்வில் துக்கம் இணைந்து உள்ளது என்பது உண்மையே; ஆனல் அதற்காகக் கவலைப்படுவதில் அர்த்தமில்லை. வேறு ஒரு வாழ்வு மரணத்திற்குப்பின் உள்ளது என்று எண்ணுதே. மதவாதிகள் உன்னை மயக்குவதற்கு என்று தோற்றுவித்த புரட்டுக் கற்பனையே அது. அதை ஒதுக்கித்தள்ளு. மனம் போனபோக்கில் வாழ்ந்து மகிழ்ச்சியாக இரு" —இது தான் அன்னவர்களின் கொள்கையும், குணமும் ஆகும். இத்தகைய வாழ்வினைக் குறிக்கோளாகக் கொள்பவர் என்றும் காணப்படுவர். ஆயின், அவர்கள் கோட்பாடு ஏற்புடைத்தது அன்று. உலகம் முழுவதும் அனுபவத்தை வைத்து ஆராய்ந்தால் இது புலனுகும். வரம்பிற்குமீறிப் புலன் இன்பத்தில்திளைப்பது நாசத்தையே விளைவிக்கும்; புலனடக்கம் என்றும் உயர்வைத் தரும். இதுவே நாம் அறிந்த உண்மையாகும்.

தற்காலம் விஞ்ஞான யுகம் ஆகின்றது. இயற்கையை விஞ்ஞானிகள் ஆழ்ந்து ஆராய்கின்றனர். இதில் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளனர். அவர்களுடைய கண்டுபிடிப்புகள் உண்மையை ஆதாரமாகக்கொண்டுள்ளன. உண்மையும் சத்தியமும் அனைவருக்கும் பொதுவானவை. சத்தியத்திற்கு எவரும் தனிப்பட்ட உரிமை கொண்டாட முடியாது. மனித குலத்தின் ஆதாரமற்ற பல்வேறு நம்பிக்கைகளை விஞ்ஞானம் அசைத்து, தகர்த்து விட்டது. பொருளற்ற மூடநம்பிக்கைகளை அழித்து விட்டது. மனிதனுக்குப் பகுத்தறிவைத் தந்து, வாழ்வைப் பிரகாசமாக ஆக்கியுள்ளது. விஞ்ஞானம் தந்துள்ள வியத்தகு முன்னேற்றத்தை மதம் மறக்க முடியாது; மறுக்கக் கூடாது. ஆனல் பல விஞ்ஞானிகள் மதம் என்பது மனிதனது முன்னேற்றத்திற்கு ஒரு தடைக்கல் என்று கருதுகின்றனர். இது முற்றிலும் தவருன கருத்து என்று மதவாதிகள் ஒதுக்க முடியாது. மதம் என்பது இணைக்கவும் செய்கின்றது; பிளக்கவும் செய்கின்றது. மதத்தின் பெயரால், இனம், மொழி, நாடு என்று பிரிவுபட்ட மக்கள் இணைவதைக் காண்கின்றேம்; அதே சமயம் மதநம்பிக்கைகள் வேறுபடுவதால் ஒரே குடும்பத்தில் பிறந்த சகோதரர்கள் பிரிந்துபோவதையும் காண்கின்றேம்! பல ஆண்டுகளாக உலகில் பல தேசங்களில் மதத்தின் பெயரால் நடைபெற்ற போர்களும், அழிவும் சரித்திரத்தில் அழியாத இடம் பெற்றுள்ளன.

லண்டன் நகரத்தில் மிருகக்காட்சி சாலையில் ஒரு விஞ்ஞானி பலவித குறும்புகளைச் செய்து கொண்டிருந்த குரங்குகளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். அருகே கிறிஸ்துவ பாதிரியார் ஒருவரும் இருந்தார். குரங்குகளையும், விஞ்ஞானியையும் கவனித்தார். குறும்புத்தனமான புன்னகையுடன் "உன்னுடைய மூதாதையினரின் விளையாட்டை ரசித்துக்கொண்டிருக்கின்றுய் போலும்" என்றூர். டார்வின் கொள்கையைப் பின்பற்றும் விஞ்ஞானியைக்

கேவலப்படுத்த இப்படிக் கூறினர்! ஆயின், விஞ்ஞானியோ அமைதியாகப் பதில் தந்தார். "உண்மைதான். எனது மூதாதையராக இவர் இருப்பது எனக்குப் பெருமையே. பகுத்தறிவுக்கு எதிரியாக உள்ள உம்மைக்காட்டிலும் இதுவே விஞ்ஞானியாகிய எனக்குப்பொருத்தமான மூதாதை." அவருடைய கூற்று மிகவும் பொருள் பொதிந்தது. உண்மையை எதிரியாகக் கருதுபவன் உண்மையான மதவாதி அல்லன்; மதமும், சத்தியமும் வேறானவை அல்ல. இரண்டும் ஒன்றே.

வேதாந்தத்தின் கருத்தும் இதுவே. இயற்கையில் சைதன்யம், ஜடம் இரண்டிற்கும் இடம் உண்டு. சைதன்யம் பல படித்தரங்களில் உள்ளது. கீழ்நிலையில் இருந்து உயிர்கள் பரிணாமம் அடைகின்றன. உடலைப் பொறுத்தவரை மனித சரீரம் இப் பரிணாமத்தின் உச்சகட்டமாகின்றது. அதற்குப் பின் பரிணாமம் மனத்தளவில் நிகழ்கின்றது. மனிதன் ஆன்மீகத்தில் மேலோங்கவேண்டும்.

ஆதாரமாக இலங்குவதை முழுமையாக உணர்வது தத்துவம்; இயற்கை நடைமுறையை உள்ளபடி அறிவது விஞ்ஞானம். இரண்டும் தொடர்பு உள்ளவை. தத்துவம் குறிப்பிட்ட துறைக்குப் பயன்படுத்தப்பட்டால் அது விஞ்ஞானம்; விஞ்ஞானத்தைப் பொதுவாகக் கணித்தால் அது தத்துவம். (Particularised philosophy is science; generalised science is philosophy). தத்துவத்தை வாழ்க்கைக்குப் பயன்படுத்தினால் அது சமயம். (Application of philosophy to man's life is Religion). இவை மூன்றும் தொடர்பு உள்ளவை. அவை ஆராயும் விஷயங்கள் என்றும் நிலைத்திருப்பவை. எனவே மனிதன் எக்காலத்தும் உண்மையைத் தேடிச் செல்லவேண்டும். உண்மையை அறிவதும், அதை வாழ்க்கைக்குப் பயன்படுத்துவதும் எதிரிடை நெறிகள் அல்ல. விஞ்ஞானத்தின் ஒரு துறை மற்றொன்றுடன் முரண்படுவது கிடையாது. அதுபோல் ஒரு மதம் பிற மதத்துடன் மோதவேண்டிய அவசியம் இல்லை. மனிதனுடைய மனதில் ஏற்படும் விகாரங்களே மதப் பூசல்களாக வெளிப்படுகின்றன. பிணக்குகள் நேரும்போது மனம் எங்கே கோணலாகி விட்டது என்பதைக் கண்டுபிடித்து அதைச் சரிசெய்யவேண்டும். இதுதான் சரியான வழி. மதத்தில் ஒரு குறையும் இல்லை.

அறிவு என்பது அளப்பருஞ் சக்தியாம். இயற்கையைப் பற்றிய அறிவு விஞ்ஞானம். ஐம்பொறிகள் மற்றும் புத்தியின்மூலம் இந்த அறிவு பெறப்படுகின்றது. தன்னுடைய ஆராய்ச்சியின் மூலம் மனிதன் விஞ்ஞான அறிவைப் பெருக்கிக்கொண்டே செல்கின்றான். உலக நடைமுறைக்குப் பயன்படும் இந்த அறிவை முறைப்படி செலுத்தினால் இதுவே ஆன்மீகத்திற்குப் பயன்படும். மனிதன் தன் மனதைத் தூய்மையாக்கி, அறிவைத் தீட்டி, புலன்களை அடக்கி ஆன்மீக அறிவாக இதை மாற்றலாம். இதனால் சிந்திக்கும் திறன் அதிகமாகின்றது; ஆத்ம சாதனையாக அவன் வாழ்வு அமையும். அப்போது ஞானக்கண் (Intuition) திறக்கின்றது. இவ்விதம் சாதாரண விஞ்ஞான அறிவு ஆன்மீக அறிவாக மலர்கின்றது.

ஆன்மீக வாழ்விற்கு அடிப்படையாக அமைபவை இரண்டு வேதக் கோட்பாடுகள் ஆகும். அவை 'சத்தியம் வத', 'தர்மம் சர' என்பவை. அவை இரண்டும் பலவித விளக்கங்களுடன் நடைமுறையில் பின்பற்றப்படும்போது அவை அநேக மதங்களாகக் காட்சி தருகின்றன. சத்தியம் என்பது யாது? ஒரு மனிதன் தன்னளவில் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைப்பது சத்தியம். எண்ணியபடியே பேச வேண்டும்; பேசியபடியே செய்யவேண்டும். இதனால் அவன் அகத் தூய்மை அடைகின்றான்.

புறவுலகில் இயற்கை நியதிக்கு ஏற்ப ஒழுக வேண்டும். வரம்பு கடந்த இன்பத்தில் ஈடுபடுபவன் தன் உடலையும் மனதையும் பாழாக்குகின்றான். இந்தக் கோட்பாடு இயற்கையோடு இயைந்தது. இதே கருத்தை 'அதிக போகத்தில் ஈடுபடுபவனைக் கடவுள் தண்டிப்பார்' என்று கூறும்போது, அது மத நம்பிக்கையாகின்றது. தர்மம் மனிதனைப் பண்படுத்துகின்றது. இக்கூற்று சத்தியத்தை ஆதாரமாகக்கொண்டது; ஆயின், தன்னை அடிபணியாதவனை, கட்டளையைநிறைவேற்றாதவனைக்கடவுள் கடுமையாகத் தண்டித்து நரகத்தில் ஆழ்த்துகின்றார் என்பது நம்பிக்கை. இது உண்மை

யாக இருக்கலாம்; அதற்கு மாறாகவும் இருக்க லாம். 'சத்தியம் வத, தர்மம் சர - உண்மையைப் பேசு, தர்ம நெறிப்படி வாழ்' என்பது தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஏதோ ஒரு குறிப்பிட்ட கடவுளின் மனம்போன படி விதிக்கப்பட்ட மீறமுடியாத கட்டளையோ, கற்பனைத் திட்டமோ அல்ல. இப்படித் தனிப் பட்ட கடவுளின் பெயரால், அவரது ஆணைப் படி நடக்கவேண்டும் என்ற மீறமுடியாத நியதியால் இயக்கப்படும் மதங்களுக்கு எதிர்காலம் கிடையாது.

"அஸதோ மா ஸத் கமய — பொய்யான நிலையில் இருந்து மெய் நிலைக்கு என்னை அழைத்துச் செல்க" என்பது வேதத்தில் சொல்லியுள்ள பிரார்த்தனை ஆகும். இது அனைவருக்கும் பொருத்தமானது. உயிரினங்கள் அனைத்தும் நிலையாமை என்ற படித்தரத்தில் இருந்து, என்றும் நிலையுடைமை என்ற படித்தரத்தை நாடுகின்றன. 'பொய்' என்பது யாது? இன்று இருந்து, நாளை இல்லாது இருப்பது 'பொய்', அஸத். நமது சரீரம் அஸத். அழிகின்ற பொருள் என்று சரீரத்தைக் குறிப்பிடுவோம். அதில் அழியாது மிளிர்கின்ற ஆத்ம தத்துவமே நிலைத்துள்ள பொருள். அழிவற்ற ஆன்ம அனுபவத்தை அறியவேண்டும் என்பதற்காக அழிகின்ற சரீரம் பயன்படுத்தப் படவேண்டும். நாம் பிறவிப்பயன் எனக் கருதுவதே இதுதான்.

சரீரம் தொடர்ந்து மாறுதலுக்கு உட்பட்டது என்பதைச் சிறிது ஆராய்ந்தாலே அறியலாம். பிறந்த குழந்தையின் சரீரத்தைப்போல, சிறுவனின் சரீரம் அமைவது இல்லையே! யௌவனம், வயோதிகம், மூப்பு என்று அது மாறிக் கொண்டே வருகின்றது. ஆனால் அந்தச் சரீரத்தில் உள்ள ஆத்மன் மாறுவதில்லை; அதற்குத் தோற்றம், வளர்ச்சி, மறைவு என்ற விகாரங்கள் கிடையாது. மனிதனின் ஆத்ம தத்துவத்தை ஜீவாத்மா என்கிறோம். மாற்றமேதும் இல்லாது நிலைத்து இருக்கும் இந்தத் தத்துவத்தை உணரவேண்டும்; யோகத்தின் மூலம் பரமாத்மாவுடன் ஐக்கியம் அடையவேண்டும். இந்த ஆன்மீக லட்சியம் யாவருக்கும், எக்காலத்தும் பொருந்தும். காலத்தால் இந்த வேட்கையை, ஆன்மீக நாட்டத்தை மனிதனிடம் இருந்து பிரிக்க இயலாது.

விழித்திருக்கும்போது மனிதன் பொருள்களாலும், இலட்சியத்தாலும் உருவான ஓர் உலகைக் காண்கிறான். கனவுநிலையில் இதைப் போன்ற வேறு ஓர் உலகத்தை அனுபவிக்கின்றான். இந்த இரண்டு அனுபவங்களுக்கும் இடையே சில ஒற்றுமைகள் உண்டு. விழிப்பு நிலையில் இந்த உலகம் தனக்கு அந்நியமானதாகவும், எல்லா உயிர்களுக்கும் பொதுவாகவும் உள்ளது. கனவில் வரும் உலகமோ தன்னைச் சுற்றியே இயங்கும் தனித்தன்மை வாய்ந்தது. கனவற்ற ஆழ்ந்த உறக்கத்தில் இவை இரண்டிலிருந்தும் வேறுபட்ட அனுபவம் உண்டாகிறது. அங்கே மனிதன் தனது தனித் தன்மையை இழந்துவிடுகிறான். எத்தகைய உலகமும் அப்பொழுது தோற்றத்துக்கு வருவதில்லை. காலம், இடம், காரணகாரியங்கள் போன்ற பாகுபாடுகளும் மறைந்துபோகின்றன. குறைகளே இல்லாத எல்லையே காண முடியாத ஓர் உணர்வு நிலை அது. வருவதும் போவதுமாக உள்ள எதுவும் நிலைத்த தன்மை உடையது அன்று. விழிப்பு, கனவு மற்றும் ஆழ்ந்த உறக்கம் ஆகிய நிலைகள் வருவதும் போவதுமாக இருக்கின்றன. இவற்றை அனுபவிக்கின்ற ஆத்மா நிலையான மெய்ப்பொருள். ஆனால் இந்த அனுபவங்களுக்கு ஆரம்பமும் உண்டு; முடிவும் உண்டு.

இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி நடந்து கொண்டிருந்தபொழுது மைசூர் மகாராஜா ஐரோப்பிய, அமெரிக்க தேசங்களுக்கு ஒரு முறை விஜயம் செய்தார். திரு. வி. சுப்ரமணிய அய்யர் என்னும் வேதாந்தியும் அவருடன் சென்றார். விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் அவர்களை இவர்கள் இருவரும் சந்தித்தார்கள். அப்பொழுது திரு. சுப்ரமணிய அய்யர் இந்தியாவிலிருந்து வரும் தத்துவ ஞானி என்று ஐன்ஸ்டீனுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். டாக்டர் ஐன்ஸ்டீன் உரைத்ததாவது: "அடிமைகளின் நாடான இந்தியாவில் தத்துவ ஞானி எப்படித் தோன்ற முடியும்? தத்துவ ஞானியாக ஒருவர் இருப்பதற்கு அடிப்படையே அவருடைய சுதந்தரம்தான். ஆழ்ந்த அறிவும், தேர்ந்த புலமையும் தத்துவ ஞானத்தின் பண்புகள்."

(தொடரும்)

என் யாத்திரை அனுபவங்கள்

(சுவாமி துருவானந்தர்)

'அனுபவத்திலிருந்தே ஒருவன் அறிவைப் பெறுகிறான்' என்றார் விவேகானந்தர். பல இடங்களுக்கு யாத்திரை சென்று வருதலும், பல்வேறு மொழி பேசும் மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதலும் நமக்குப் பயன்படும் வாழ்க்கைப் பயிற்சியாகும். ஆத்ம சாதனத்தில் க்ஷேத்ர யாத்திரை சென்று வழிபட்டு வருவதும் ஆங்காங்குள்ள சாது மகாத்மாக்களைத் தரிசிப்பதும் இன்றியமையாத சாதன முறையாகும். ஞானிகள், பக்தர்கள், அருளாளர்கள் ஆகியோர் விளம்பரம் இல்லாது ஞானத்தையும் சாந்தியையும் இன்றளவும் இப்புண்ணிய பூமியில் பரப்பி வருகின்றார்கள். பெரும் செல்வந்தர்களும் பற்றற்ற துறவிகளைப் பணிந்து வணங்கி ஆசிபெற்றுச் செல்வதைப் பாரத நாட்டில்தான் காணமுடியும்.

மக்களோடு நேரே பழகவும், அவர்களுடைய கலாச்சாரம், பழக்கவழக்கம் முதலியவற்றைத் தெரிந்து கொள்ளவும், பல மொழிகளை ஆங்காங்கு பேசக்கேட்டு நாமும் அவற்றில் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ளவும், தன்னம்பிக்கையை வளர்க்கவும், எப்பொழுதும் ஈசனையே சிந்தனை செய்யவும், அவனையே எங்கும் சார்ந்திருக்கவும் போன்ற பல பயிற்சிகளை நாம் குழுவாக இன்றித் தனித்தே பயணம் செய்கையில் பெறுகின்றோம். எனவே ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள புனித ஸ்தலங்களையும், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களையும் காணுதல், சான்றோர்களைத் தரிசித்தல் ஆகிய நோக்கங்களோடு யாத்திரை செல்ல விரும்பினேன். ஸ்ரீமத் சுவாமிஜியின் ஆசியோடு ஜூன் 1 ஆம் தேதி யாத்திரை ஆரம்பமானது. முதலில் சென்ற இடம் பெங்களூர் ஆகும். அங்குப் பஸ்ஸில் அமர்ந்து ஊரை வலம் வரும்போதே மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம் முதலிய மொழிகள் பலரால் பேசப்படுவதைக் கேட்கலாம். நாம் மொழியால் வேறுபட்டவராகத் தென்பட்டாலும் நாம் அனைவரும் இந்தியர் என்கிற உணர்வு நம் அனைவரையும் ஒன்றுபடுத்திவிடுகிறது.

பெங்களூர் கெஞ்சனஹள்ளியில் உள்ள கைலாச ஆஸ்ரமத்தில் தங்கி கர்நாடக மாநிலத்தில் பார்க்க வேண்டிய இடங்களைப் பார்க்க முடிவு செய்தேன். கைலாச ஆசிரமத்தில் அருட் சக்தி பொருந்திய அம்மன் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி திருக்கோயில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டு வருகிறது. ஆஸ்ரமத்துச் சூழ்நிலையில் பண்டைக் கால குருகுலம் தான் எனக்கு நினைவு வந்தது. அதிகாலையில் ஓதும் வேதகானம் நம்மைப் பிரம்மத்தில் லயப்படுத்துகின்றது. இவ்வளவு சுத்தமாக உச்சரிக்கும் வேத மாணுக்கர்களை விசாரித்த போது உண்மை ஒன்று தெரிய வந்தது. பிறந்த ஜாதி எதுவானாலும் அதைக் கருத்தில் வாங்காது வேதம், ஆகமம், உபநிஷத் போன்றவைகளைச் சம்ஸ்கிருதத்தில் புகட்டியும், சம்ஸ்கிருதத்தில் பேசவும், எழுதவும் பயிற்சிகள் கொடுத்தும் மாணவர்களைச் சிறந்த நிலைக்கு உயர்த்துகிறார்கள். இந்த ஸ்தாபனத்தைத் தோற்றுவித்து நடத்தி வருபவர் ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகள் ஆவார்கள்.

8—6—84 ஆம் தேதி மைசூரையும் அதன் சுற்றுப்புறப் பகுதியையும் பார்க்கப் புறப்பட்டேன். பெங்களூரிலிருந்து இந்த இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்குத் தினமும் பஸ் புறப்படுகிறது. மைசூரில் உள்ள சாமுண்டீஸ்வரி கோயில் அரச குடும்பத்தாரால் நிர்வகிக்கப்பட்டு வருவதாகும். மைசூர் அரசரின் அரண்மனை பார்க்க வேண்டிய ஒன்று. கலைச் சிறப்புக்கள் கொண்டது. அரண்மனை சுவர்களில் தேவியர்களின் சித்திரத்தைத் தீட்டியுள்ளார்கள். அடுத்தது மைசூர் பிருந்தாவனம். இது ஒரு பெரிய பூங்கா. செடிகளை அழகாக வெட்டி கவர்ச்சிகரமாக அமைத்து வண்ண விளக்குகளை ஆங்காங்கு அமைத்து இயற்கையும் செயற்கையும் சேர்ந்து காண்போரின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போகும் வண்ணம் அமைந்திருக்கிறது. இன்னும் சில சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களைப் பார்த்த பிறகு மறுநாள் மேற்குக் கடற்கரையிலுள்ள கோகர்ணம் பார்க்கப் புறப்பட்டேன்.

இலங்கை வேந்தன் இராவணன் கைலாயத்திலிருந்து ஆத்மலிங்கத்தை எடுத்துக்கொண்டு இலங்கைக்குப் போகும்பொழுது விநாயகரால் தந்திரமாக ஏமாற்றப்பட்டு அந்த லிங்கத்தைக் கீழே வைத்தவுடன் அது பூமியில் நிலைபெற்றுவிட்டது. அந்த லிங்கம்தான் இப்போது கோகர்ணத்தில் உள்ள லிங்கம் என்று புராணம் கூறுகிறது. நான் போன நேரம் மேற்குக் கடற்கரைப் பகுதியில் நல்ல மழை தொடர்ந்து பெய்துகொண்டிருந்தது. பல ஊர்க்கோவில்களிலும் வருந்தத்தக்க குறைகள் சில இருந்தன. பொருளாசை படைத்த பலர் பக்தர்களைச் சுற்றிக் கழுகைப்போல் வலம் வந்து பணம் வேட்டை ஆடுபவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இத்தகைய பிடுங்கல்களிலிருந்து தப்பித்துக் கடற்கரை சென்றேன். அரபிக் கடல் அழகு ததும்ப அலைமோதும் காட்சி மனதை உயர்நிலைக்கு எடுத்துச் சென்றது. அங்கே தியானம் செய்துவிட்டு மறுநாள் உடுப்பி கிருஷ்ணனைப் பார்க்கச் சென்றேன்.

ஸ்ரீ கிருஷ்ணன் கரிய வண்ணத்தில் காட்சி தருகிறான். அழகு ததும்பும் விக்ரஹம் அது. கோயில் முன்னே சிறு துவாரங்கள் இருக்கின்றன. அதன் மூலமே தரிசனம் ஆயிற்று. அருகாமையில் உள்ள ஆனந்தாஸ்ரமம் காஞ்சங்காடு ராமதாஸ் சுவாமிகள் தபஸ் செய்த இடமாகும். “ஸ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்” என்ற நாமம் தொடர்ந்து ஒலிக்கும் ஆஸ்ரமம் ஆனந்த ஆஸ்ரமம். அங்கே இரவு பஜனையில் கலந்துகொண்டு விட்டு கொல்லூர் சென்று அன்னை மூகாம்பிகையைத் தரிசனம் செய்தேன். ஆதிசங்கரர் பூஜை செய்து பிரதிஷ்டை செய்த மூர்த்தம் அது. தமிழ் நாட்டு மக்களால் அதிகம் வணங்கப்படுகிற அம்மன் மூகாம்பிகை. ஒரு நாள் கொல்லூரில் தங்கி மூகாம்பிகை தரிசனம், தியானம், ஜபம், பிரார்த்தனை எல்லாம் முடித்துவிட்டு மறுநாள் காலை அருகில் உள்ள குடசாத்ரி மலைக்குப் போனேன். வெள்ளிமலை மதுரானந்த சுவாமிகள் மடத்திலுள்ள பிரம்மச்சாரி, மற்றும் ஒரு சாது, நான் ஆக மூவரும் 13 கி. மீ. பஸ்ஸில் போய் அங்கிருந்து 9 கி.மீ. நடந்து செங்குத்தான மலையில் ஏற முயன்றோம். மழைக்காலம் ஆனதால் மலைப்பாதையில் அட்டைகள் ஏராளமாய் இருந்தன. கால்களில் புளியை நன்கு தேய்த்துப் பின் மண்ணெண்ணெயைப் பூசிக்கொண்டு கையளவு உப்பு எடுத்துத் துணியில் பொட்டலமாகக் குச்சி ஒன்றில்கட்டிக்கொண்டு கிளம்பினோம். அட்டை உடலில் ஏறி காலில் கடித்தால் ரத்தத்தை உறிஞ்சிவிடும். ரத்தம் கசிந்து வெளிவரும்போதுதான் தெரியும். அதை அகற்றவே இந்த உப்புப் பொட்டலம்; இதைத் தேய்த்தால் அது கீழே விழுந்துவிடும்.

காலை 8-30 மணிக்கு மலை ஏற ஆரம்பித்தோம். மதியம் 2 மணிக்கு மலை உச்சியை அடைந்தோம். பயங்கர விலங்குகள் நடமாடும் அந்த இடத்தில் துறவி ஒருவர் பர்ணசாலை அமைத்துத் தவம்புரிந்து வந்தார். அவர்தாம் எங்களை மூகாம்பிகை கோயிலிலிருந்து அழைத்துச் சென்றவர். மதிய உணவு தாமே தயார்செய்து எங்களுக்கு வழங்கினர். மழை விடாது பெய்துகொண்டிருந்தது. அந்தக் குடிசைக்குள்ளும் நெருப்பு விடாது எரிந்துகொண்டேயிருந்தது. அது தியானத்துக்கு மிகுந்த அளவில் பயன் தந்தது. அந்த மலையில் மாலை நாலு மணிக்கே இருட்ட ஆரம்பித்துவிட்டது. இரவு வெகுநேரம்வரை தியானம், ஜபம், பிரார்த்தனை செய்தோம். அதற்கு அருகில் ஆதிசங்கரர் தபஸ் பண்ணி மூகாம்பிகை தரிசனம் பெற்ற இடத்தில் மைசூர் அரசர் மண்டபம் கட்டியுள்ளதாகவும், மழை இல்லாதபோது கோடையில் பலர் இப்பகுதியில் வந்து போவதாகவும் சொன்னார்கள். இரவு இடி, மின்னலுடன் கூடிய பெரு மழை பெய்தது. மறுநாள் காலை 8-30 மணிக்குச் சிற்றுண்டி தயார் செய்து சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினோம். மழையும் காற்றும் சுழற்றி சுழற்றி அடித்து மலையின் நடுவில் மழையில் சிக்க வைத்தது. குடைகள் இரண்டும் காற்றில் கிழிய உடல் நனைந்து அட்டையின் கடிக்கு ஆளாகாமல் தப்பி நாமஜபம் பண்ணிக்கொண்டே வழித்துணைக்கு வந்த பிரம்மச்சாரியுடன் ஓட்டமும் நடையுமாக பகல் 12-30 மணிக்கு அடிவாரம் வந்து சேர்ந்தோம். அடிவாரத்திலிருந்து கொல்லூருக்குப் பஸ் கொஞ்ச நேரத்துக்கு முன் போய்விட்டதாகச் செய்தி கிடைத்தது. உடனே இதுவும் நன்மைக்கே என்று எண்ணிக்கொண்டு மீண்டும் 13 கி. மீ

நடக்க ஆரம்பித்து மாலை 4-00 மணிக்குக் கொல்லூர் சென்று சேர்ந்தோம். அங்கே உணவு அருந்தி ஓய்வு எடுத்தோம். நாங்கள் விழித்த போது பொழுதும் விடிந்திருந்தது. காலையில் சௌபர்ணிகா என்ற பெரிய நதியில் ஸ்நானம் செய்தோம். அலுப்புக் குறைந்தது. மூகாம்பிகை தரிசனம் ஜபம், தியானம் முடித்தபின் தர்மஸ் தலா என்ற ஊருக்குப் புறப்பட்டேன்.

தர்மஸ்தலாவில் மஞ்சுநாதர் ஆலயம் உள்ளது. இந்த ஊரில் ஹெக்டே குடும்பத் தினர் அன்னசத்திரம் நடத்துகிறார்கள். ஒரு நாளில் குறைந்தது ஐயாயிரம் பக்தர்கள் இலவசமாக உணவு அருந்துகிறார்கள். ஒவ்வொரு வருக்கும் மூன்று நாட்கள் உணவும், இருப்பிடமும் இலவசமாக வழங்குகிறார்கள். அவ்வூரில் வந்து தங்கும் யாத்ரிகர்களுக்காக பல வகைக் கட்டடங்களை எழுப்பியுள்ளார்கள். ஆங்கு நிர்வாகப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் யாத்ரிகர்களிடத்தில் மிகவும் அன்புடனும் பண்புடனும் நடந்து கொள்கிறார்கள். ஆங் காங்கு ஜைனர்களுடைய கோயில்களையும் தர்மஸ்தலாவில் காணலாம். ஆனால் மழை என்பது எங்கும் பெரும் தடையாக வந்துவிடு கிறது. எனவே இந்தத் திவ்ய தரிசனம் முடிந்த பின் பேலூர் பயணமானேன்.

பேலூரில் சென்ன கேசவப் பெருமாள் கோயில் மிகவும் அற்புதமான சிற்பக்கூட மாக விளங்குகிறது. கோயிலின் ஒவ்வொரு பகுதியிலும் நுணுக்கமான கலைத்திறனின் சிறப்பினைக் காணலாம். ஒரு தூணைப்பார்த்தே அங்குள்ள சிற்பக் கலைக் களஞ்சியத் திறனின் சிறப்பினை அறியலாம். கோயிலைச் சுற்றிப் பார்த்தபின் பெங்களூர் திரும்பினேன்.

கர்நாடக மாநிலததில் ஒவ்வொரு ஸ்தலத் துக்கும் போகிறபொழுது அருள் உணர்வு என் உள்ளத்தில் அதிகரிப்பதை உணர முடிந்தது. காஞ்சங்காடு ராமதாஸ் சுவாமிகள் ராமனையே சார்ந்திருந்து இந்தியா முழுவதை யும் தரிசித்துத் தம் அனுபவத்தைப் புத்தக மாக எழுதியுள்ளார். அந்த அனுபூதிமானின் அனுபவத்தை நானும் உணர விரும்பினேன். கொல்லூர் மூகாம்பிகை கோயிலில் அது நிதரிசனமாகப் புலப்பட்டது. அருள் தாகத் தோடு, சரணகதி மனப்பான்மையோடு விருப்பு வெறுப்பின்றி அன்னையையே முற்றிலும் சார்ந்திருக்கும்பொழுது அவள் நமக்குப் பல விதங்களிலும் அநுக்கிரகம் பண்ணுவதை உணரலாம். “மழை வருவதற்கு முன்பே பத்ரி நாத் கேதாரநாத் போய் தரிசனம் செய்து விட்டுப் பிறகு ஒவ்வொரு மாநிலமாகச் சுற்றிப் பாருங்கள்” எனப் பெரியவர்கள் கூறினார்கள். ஆகவே டில்லிக்கு டிக்கட் எடுத்துப் பயணமா னேன்.

டில்லிப் பயணத்தில் நான் சந்தித்த ஓர் இளைஞர் தமது உணர்ச்சிகரமான அநுபவம் ஒன்றை விவரித்தார். “தமிழ் நாட்டுடன் எனக்கு வியாபாரத் தொடர்பு உண்டு. ஒரு முறை பனிக்காலத்தில் நாக்பூர் அருகில் பயணம் செய்துகொண்டிருந்தபோது நான் சென்றுகொண்டிருந்த பேருந்து பழுதாகி நின்றுவிட்டது. வெகுநேரம் கழித்து அங்கே மற்றொரு வண்டி வந்தது. எல்லாரும் அடித் துப் பிடித்துக்கொண்டு அதில் ஏறினார்கள். மூட்டுக்கள் குளிரினால் மரத்துப்போகவே நான் நகரவும் முடியாமல் தவித்து நின்றேன். வண்டி யும் கிளம்பிச் சென்றுவிட்டது. நான் இறை வனின் பெயரைச் சொல்லிக் கதறினேன். திடீ ரென்று ஒரு பெரியவர் வந்தார். எனக்கு ஆறு தல் கூறி வலியால் துடித்துக்கொண்டிருந்த பகுதிகளைத் தொட்டார். வலிபோன இடமே தெரியவில்லை. என்னை வழிநடத்திச் சென்றார். என்ன ஆச்சரியம்! சிறிது நேரத்தில் அந்த வண்டியை நாங்கள் அடைந்துவிட்டோம். இறைவனின் கருணையை நான் இவ்வாறு உணர்ந்துகொண்டேன். அன்று முதல் என் பக்தியும் உறுதிப்பாடு அடைந்தது” என்று அந்த இளைஞர் உணர்ச்சி பொங்கப் பேசினார்.

பயணத்தில் உடன் வந்த அன்பர் ஒருவர் டில்லி போய்ச்சேர்ந்ததும் தமது இல்லத்துக்கு என்னை அழைத்துச்சென்று சிரம பரிகாரம் செய்வித்தார். அவருடைய அன்பான உபசரிப் பினால் பயணக் களைப்பையும் ஒருவாறு மறந் தேன்.

அம்பாள் அநுக்கிரகத்தை மேலும் உணர முடிந்தது. அவ்வன்பரே சந்நியாச ஆஸ்ரமத் தைக் காட்டினார்.

டில்லியில் சந்நியாச ஆச்ரமத்தில் தங்கி னேன். பல்வேறு சம்பிரதாயங்களைச் சேர்ந்த

வர்களையும் அங்கே காணலாம். அதன் தலைவர் மண்டலேசுவரர் எனப்படுபவர். அவர் தபோவனத்தைப்பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தார். ராஜஸ்தானில் அவர் இரண்டு குருகுலங்களை நடத்தி வருகிறார். டில்லியில் ரூ. 12-00 செலுத்தி அரசாங்கப் பேருந்தில் ஊரைச் சுற்றிப்பார்த்தேன்.

காலையில் 9-00 மணிக்கு டில்லியைச் சுற்றிக் காட்டும் பஸ் புறப்பட்டது. பஸ்ஸில் (Guide) வழிகாட்டியாக இருந்து ஒருவன் விளக்கம் கொடுத்தான். செங்கோட்டை, சாந்திவனம் ஆகிய இடங்களைக் காட்டினான். குதுப்மினார் குத்புதீன் என்ற அடிமை அரசனால் கட்டப் பட்டது என்று சொன்னார்கள். எங்குப் பார்த்தாலும் மசூதி, கோட்டை. காரணம் முன்பு முஸ்லீம் அரசர்கள் ஆங்கு ஆண்டு வந்ததால் கட்டியவைகள் இன்னும் அப்படியே உள்ளன. காந்தியைச் சுட்ட இடத்தைப் பார்க்கிற பொழுது ஒருகணம் பகீரென்கிறது. மறுகணம் என் மனம் அந்தச் சத்திய மூர்த்தியின் அந்தராத்மாவைத் தேடி அவருடன் சில நிமிடம் மௌனமாக இருக்கிறது. யார் வந்து அந்த இடத்தைக் கண்டாலும் நிச்சயம் மௌன அஞ்சலி செய்து விட்டுத்தான் போவார்கள். சத்திய சோதனை செய்த சர்வோதயத் தொண்டராகிய காந்தியை எரித்து அந்த அஸ்தியை வைத்துள்ள ராஜ்கோட் பார்த்து விட்டுப் பண்டித ஜவர்ஹர்லால் நேரு முன்பு தங்கியிருந்த ஆனந்த பவனம் பார்த்துவிட்டு லக்ஷ்மிநாராயணன் கோயிலைப் பார்த்தேன். பளிங்கு மலையையே குடைந்து எடுத்தது போன்று எங்குப்பார்த்தாலும் பளிங்குக் கற்கள் ஒளிவீசிக்கொண்டு உள்ளன. ஸ்ரீமத் பகவத்கீதை சுலோகங்கள், வேதத்தில் உள்ள மந்திரங்கள் ஆங்காங்கு பொறிக்கப்பட்டுள்ளன. இந்தக் கோயிலில் எழுந்தருளி இருக்கிறவர் லக்ஷ்மிநாராயணன். பிர்லா அவர்களின் பெயரால் இது அழைக்கப்படுவதை நினைத்தால்தான் மிகவும் சங்கடமாக இருக்கிறது. பணவசதி படைத்தவர்கள் கோயில்கள் கட்டலாம்; குளங்கள் வெட்டலாம். கும்பாபிஷேகம் பண்ணலாம். ஆனால் எப்போதும் தங்களைப் பின்னணியில் வைத்தே இவைகளைச் செய்யும்பொழுதுதான் அது ஒரு புனிதஸ்தலமாகிறது. நமது தமிழ்நாட்டில் சமயபுரம்மாரியம்மன், இருக்கன்குடி மாரியம்மன், பழனி முருகன், சபரிமலை ஐயப்பன் போன்ற கோயில்கள் பிரம்மாண்டமாக இல்லாவிட்டாலும் அருள் உணர்வு ஆங்கு இருப்பதால் பக்தர்கள் விரதம் இருந்து, மாவிளக்கு எடுத்து, பூக்குழி இறங்கி, காவடி எடுத்துத் தெய்வத்திடம் தம் வேண்டுதலைச் செலுத்தி இம்மை மறுமையைப் பெறுகிறார்கள். அடுத்தபடியாக ராஷ்டிரபதி பவனையும், அமைச்சர்கள் அலுவலகங்களையும் பஸ்ஸிலேயே பார்த்துக் கொண்டு போனோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாகிய அமைச்சர்கள் வீட்டுக்கு முன் போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டு இருந்தது. லோக்சபை பார்க்க அனுமதி தரவில்லை என்று வழிகாட்டி சொல்லவே பஸ்ஸில் பலர் முணுமுணுத்தனர். எப்படியோ எல்லாம் பார்த்து முடிக்க மாலை 5 மணி ஆகிவிட்டது. பின் ஆஸ்ரமம் வந்து சேர்ந்தேன். (தொடரும்)

வீண்பொழுது போக்காதே

மானுடப்பிறவி கிடைப்பதற்கு அரியது. அதை வீணில் விரயம் பண்ணலாகாது. வாழ்நாளில் ஒருநாள் வீண்போகுமாகில் அன்றைக்கு அதைப் பாழ்படுத்திய மனிதன் வாழ்ந்தவன் ஆகான்.

அவரவர் போக்கில் சமுதாய சேவை செய்ய இயலாதவர்கள் ஹிந்து சமுதாய சேவைக்கே யாண்டும் உழைத்துவரும் ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கத்தில் (R. S. S ல்) அங்கத்தினராவது உசிதம். அரிய முறையில் நாட்டின் நன்மைக்காக அல்லும் பகலும் உழைத்து வரும் இந்தச் சங்கத்தில் அங்கத்தினனாக ஆகிறபொழுது அன்று முதலே அவனுக்குப் புதிய வாழ்வு துவங்கியுள்ளதென்பதை அறிய வருவான்.

குறிப்புகள்

ஒழுக்கம் விருப்பம் தரும்

கோவை மாவட்டத்திலுள்ள கேத்தனூரில் ஆண்டுக்கொருமுறை அந்தர்யோகம் நிகழ்கிறது. அவ் அந்தர்யோகத்தில் சிறுவர் சிறுமியர் அதிகம் பங்குகொள்கின்றனர். அவர்களுக்குக் கூறியதாவது: இங்குள்ள அரசாங்கப் பள்ளியில் பயின்று வரும் நீங்கள் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அனைவரும் தேர்ச்சி பெற்றுவருவது பாராட்டுதலுக்குரியது. பாடப் பயிற்சியில் நீங்கள் நல்ல வளர்ச்சி அடைந்து வருகிறீர்கள் என்பதை இது காட்டுகிறது. இதே பாங்கில் வாழ்க்கைப் பயிற்சியிலும் நீங்கள் முன்னுக்கு வரவேண்டும். பள்ளியில் விஞ்ஞான பாடங்களைப் புரிந்து கொள்வதற்காகச் சில சோதனைகளைச் செய்து பார்த்துப் பொருள்களின் தன்மைகள் எத்தகையவை என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளுகிறீர்கள். அந்தர்யோகமும் இது போன்ற ஆய்வுக் கூடமே. இங்கு மனதிற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இனிப்பு எப்படி இருக்கும் என்று உங்களில் யாராவது கூறமுடியுமா? அதைச் சொல்லால் விளக்க முடியாது. நாவினால் அதை ருசித்தவனே அதன் சுவையை அறிவான். தித்திப்பான தின்பண்டத்தைத் தின்னுதல் என்னும் அனுபவத்தின் மூலமாக இனிப்பு என்ற உணர்வை நாம் பெறுகிறோம். அதற்குப் பதிலாக மிளகாயைக் கொடுத்தால், நாக்கு துடித்துப் போய்விடுகிறது. அதையே கொடுத்துப் பழக்கினால், நாளடைவில் நாவு தன் மிருதுத் தன்மையை இழந்துவிடும். மிகவும் தடித்துப் போய் தன் இயல்புக்கு மாறாகச் செயல்படும். அதே விதத்தில் நல்ல ஊதுவத்திமணம் கமழ்ந்தால் மூக்கு இன்பமாக அதை முகர்கிறது. துர்வாசனை வீசினாலோ அது சுழித்துக்கொள்கிறது. இங்ஙனம் நல்லது நடக்கும்போது உடல் உறுப்புகள் நல்ல முறையில் இயங்குகின்றன. கேடு சூழும்போது அவையும் கெட்டுப்போய் விடுகின்றன.

நமது உடம்புக்கு உள்ளே இருக்கும் மனம் என்ற கருவியும் அதைப் போன்றதே. அதற்கு நல்ல விஷயங்களையே ஆகாரமாகக் கொடுக்க வேண்டும். குப்பைகளைத் திணித்தால் அது நாளடைவில் அழுகிச் சீரழிந்து போகும். பெற்றோர்கள் தரும் போஷாக்கினால் நீங்கள் வளருகிறீர்கள். அதுபோன்று புலன்கள் தரும் விஷயாதிகளால் மனம் வளருகிறது. புலன்களைத் தீமைகள் சூழ்ந்து வருத்தினால் அது மனத்தையும் பாதிக்கும். மனம் கெட்டுப் போனால், நாளடைவில் அது குடியிருக்கும் இடமாகிய இந்த உடம்பும் சிதைந்து போகும். உடம்பு என்ற இந்தச் சுவர் இல்லாமல் வாழ்க்கை என்ற சித்திரத்தை எப்படி நம்மால் அழகாக வரைய இயலும்? எனவே நாம் வாழ்க்கையில் வெற்றிபெறவேண்டுமானால் ஐந்து புலன்களையும் நல்ல வழியில் உபயோகிக்க வேண்டும். நம் மனத்திலும் நல்ல உணர்ச்சிகளையே படியச் செய்யவேண்டும். நல்லதைச் சார்ந்திருக்கவும், கேட்டிலிருந்து விலகி இருக்கவும் நம் மனதிற்குப் பயிற்சி தேவை.

காந்திஜி மூன்று குரங்கு பொம்மைகள் வைத்திருந்தார். ஒழிச்சலில்லாமல் அலையும் மனதிற்குக் குரங்குதான் உதாரணம். கள்குடித்த குரங்கைத் தேள் கொட்டியது; சிறிது நேரத்தில் அதற்குப் பேயும் பிடித்தது. அப்பொழுது அது என்ன ஆட்டம் போடும்! அந்த நிலையில்தான் மனித மனம் இருக்கின்றது. காந்திஜியிடம் இருந்த மூன்று குரங்கு பொம்மைகளில் ஒன்று கண்களையும், மற்றொன்று காதுகளையும், மூன்றாவது குரங்கு வாயையும் பொத்திக்கொண்டிருக்கும். தீமைகளைப் பார்க்காமலும், கேட்காமலும், பேசாமலும் இருந்தால் மனம் அடங்கும், உடலும் அமைதியாக இருக்கும் என்பதே இதன் கருத்து. மிகவும் பலம் பொருந்திய யானைக்குத் தன் தும்பிக்கையை அடக்குகின்ற சக்தி இல்லை. அசைந்து கொண்டேயிருக்கும் தன் தும்பிக்கையினால் அது மண்ணை வாரித் தன் தலைமீது போட்டுக்கொள்ளும். அதற்கு வேலை கொடுப்பதற்காக ஒரு சங்கிலியை யானைப்பாகன் அதன் தும்பிக்கையில் வைப்பான். யானை ஓயாமல் அதை உருட்டிக் கொண்டே இருக்கும். இப்படி மனதுக்கும் நாம் ஏதாவது வேலை கொடுத்தால் அந்தச் சுவ

னத்தில் மனமானது தீய நினைவுகளிலிருந்து விடுபட்டுவிடும். மனதிற்கு எளியவேலை இறைவனுடைய திருநாமங்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லுவதுதான். 'ராம், ராம்' என்றும், 'சிவ, சிவ' என்றும் மனனம் செய்யும் பொழுது மனது சஞ்சலங்களிலிருந்து விடுபட்டுச் சாந்தமாக இருக்கும்.

விவேகானந்தர் படத்தை நீங்கள் பார்த்திருக்கின்றீர்கள். அதில் அவர் ராஜகம்பீரமாக வீரம் வெளிப்படும் விழிகளுடன் விளங்குகின்றார். ஆனால் சிறுவயதில் அவரிடம் குறும்புகள் அதிகம். வீட்டில் சேட்டைகள் செய்து சகோதரிகள் பிடிக்க வந்தால் சாக்கடையில் போய் நின்று கொள்வார். அவருடைய அன்னை புவனேசுவரி "சிவனே, நான் பிள்ளைவரம் கேட்டால் உன்னுடைய பூதகணத்தில் ஒன்றை இங்கே அனுப்பி வைத்திருக்கிறாயே" என்று சலித்துக்கொள்வார். அத்தகைய சிறுவனை அடக்குவதற்கும் அவர் ஓர் உபாயம் வைத்திருந்தார். காதருகில் சிவ நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரித்தால், அந்தச் சிறுவன் புலன்களெல்லாம் அடங்கி அமைதியாய் அமர்ந்து விடுவான்.

உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன். பெரிய பெரிய திட்டங்களைச் செயல்படுத்தவேண்டும் என்று ஒரு மனிதன் தீர்மானித்தான். மனிதர்களைக் கொண்டு இதைச் செய்து முடிக்க இயலாது; ஒரு பூதத்தின் துணை இருந்தால் எல்லாவற்றையும் விரைவாகச் செய்து முடிக்கலாம் என்று எண்ணினான். ஒரு தவ சிரேஷ்டரை அணுகி வரம் கேட்டான். அவர் "வரம் தருகிறேன். இல்லை என்று சொல்லுகிற பழக்கம் என்னிடத்தில் இல்லை. ஆனால் நீ மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நான் அனுப்பும் பூதத்திற்கு வேலைகொடுத்து உனக்குக் கட்டுபடி ஆகாது. அதற்குக் கூலி ஏதும் தேவை இல்லை. ஆனால் வேலை கொடுக்காவிட்டால் அது உன்னையே எடுத்து விழுங்கிவிடும்" என்று கூறினார். "என்னிடம் வேலைகள் குவிந்து கிடக்கின்றன. நீங்கள் பூதத்தை அனுப்புங்கள்" என்று வேண்டினான். தவசீலர் சொல்லிக் கொடுத்த மந்திரத்தைக் கால அளவின்றி அவன் உச்சரிக்கவும் பூதம் அவன் முன் தோன்றியது. அவனும் அதற்குத் தொடர்ச்சியாக வேலை கொடுக்கலானான். "ஊரில் தண்ணீர்ப் பஞ்சம் நீங்க பெரியதாக ஒரு குளம் வெட்டி அதில் நீர்நிரப்பு; புதியதாக ஒரு கோயில் கட்டிக்கொடு; போக்குவரத்துக்கு ஏற்றபடி புதிய பாதைகள் போட்டுக் கொடு" என்று அவன் சொல்லச் சொல்ல மூச்சு விடுவதற்கும் நேரமில்லாதபடி பூதமும் கண்ணிமைக்கும் நேரத்தில் காரியத்தை முடித்துவிட்டு வந்து "அடுத்த வேலையைக் கொடு" என்று கட்டளையிட்டது. சோர்ந்து போன மனிதன் முனிவரிடம் சென்று "சுவாமி, விவரம் தெரியாமல் வரம் கேட்டுவிட்டேன். என்னை மன்னித்து அந்தப் பூதத்திடமிருந்து காப்பாற்றுங்கள்'' என்று கதறினான். ஞானியும் "ஒரு நாய் வாலை வெட்டிக் கொண்டு வந்து கொடுத்து அதை நேராக நிமிர்த்தும்படி அந்தப் பூதத்திடம் சொல்" என்றார். பூதமும் எவ்வளவோ முயன்று பார்த்தும் நாயின் வாலை நிமிர்த்த முடியவில்லை. "என்னை மன்னித்து விடுவித்து விட்டால் நானும் உன்னை ஒன்றும் செய்வதில்லை'' என்று அந்த மனிதனிடம் சொல்லி விட்டுப் பூதம் உடனே ஓடி மறைந்தது.

"உலகத்தைத் திருத்தி விடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டு கிளம்பும் வீரர்களின் செயலும் இத்தகையதுதான். உலகத்தை ஒரு நாளும் திருத்த இயலாது. அதற்கு அதிகாரிகளும் நாம் அல்லர். நம்மை நாம் திருத்திக் கொண்டு சரியாக இருந்தால் நம்மைச் சுற்றியுள்ள உலகமும் சரிவர இயங்குவதை நாம் காணலாம். எனவே நம் மனமானது எப்பொழுதும் நல்ல வழியிலேயே செல்லும்படி நாம் பயிற்சி அளிக்க வேண்டும். அதற்கு மிகவும் சுலபமான முறை நாம ஜபம் செய்வது தான். காட்டில் கொள்ளை அடித்தும், கொலைகள் செய்தும் வாழ்க்கை நடாத்திய ஒரு வனவேடனை நாரதர் பார்த்தார். அவன் மனம் திருந்தும் வண்ணம் ராம நாமத்தை உபதேசம் செய்தார். அதைக் கூடச் சரியாகச் சொல்லத்தெரியாமல் அந்த வேடன் "மரா, மரா'' என்று திருப்பித் திருப்பிச் சொன்னான். அதுவே நாளடைவில் "ராம, ராம'' என்று மாறி செவியையும், சிந்தையையும் ஆட்கொண்

டது. அந்த வேடனை முனிவர்களுக்குள் தலை சிறந்தவராக மாற்றியது. அவரே வால்மீகி மகரிஷியாவார். அந்த வால்மீகி மகரிஷி சந்திர சூரியர் உள்ளளவும் அறிஞர்களால் போற்றப்படும் இராமாயணம் என்னும் புண்ணிய சரித்திரத்தை எழுதினர். இதுவே நாம ஜபத்தின் மகிமை ஆகும்.

பரமஹம்சர் ஒரு கதை சொல்லுவார். ராம பக்தியில் தோய்ந்த சேணியன் ஒருவன் இருந்தான். ராமனுடைய இச்சையின்படியே எல்லாம் நிகழ்வதாக அவன் வாயினல் சொல்வதோடு, மனத்தினுலும் அவ்விதமே எண்ணி வந்தான். ஒருநாள் பஜனை செய்துகொண்டிருக்கும் போது கள்வர்கள் கையில் சிக்கினன். கள்வர்கள் தாங்கள் களவாடிய பொருள்களை எல்லாம் அவனைச் சுமக்குமாறு செய்தனர். காவலர்கள் வழியில் வரவும் அவனை விட்டு ஓடி மறைந்தனர். காவலர்கள் அவனை நீதி மன்றத்தில் கொண்டு நிறுத்தினர். நீதிபதி "நீ என்ன குற்றம் செய்தாய்?" என்று கேட்டார். "ஐயா, ராமனுடைய இச்சையினல் கடந்த இரவு நாம பஜனை செய்துகொண்டிருந்தேன். அப்பொழுது ராமனுடைய இச்சையினல் கள்வர்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் என்னைத் தாங்கள் களவாடிய பொருள்களைத் தூக்குமாறு செய்தனர். ராமனுடைய இச்சையினல் அவர்கள் காவலர்களைப் பார்த்ததும் ஓடிப்போனர்கள். காவலர்கள் ராமனுடைய இச்சையினல் என்னை இங்கேகொண்டு வந்தார்கள்'' என்று கூறி முடித்தான். இவ்வளவு நேர்மையான ஒரு மனிதன் கள்வர்களின் தொழிலைச் செய்யமாட்டான் என்று உணர்ந்து நீதிபதியும் அவனை விடுதலை செய்தார். ராமனுடைய இச்சையினல் தான் விடுதலை அடைந்ததாக அவன் கூறினன். இங்ஙனம் நாமஜபம் செய்யச் செய்ய உழுத நிலம் போலவும், களை எடுத்த பயிர்போலவும் மனம் பண்பாடு அடைகிறது. மனம் பண்படும் அளவு இறைவனின் நெருக்கமும் அதிகமாகிறது. இறைவனைச் சரணடைந்த அடியார்களுக்கு என்றும் உள்ளமானது பேரானந்தத்தில் திளைத்திருக்கும்.

எனவே நீங்களும் மனதைப் பக்குவப் படுத்துவதற்குப் பழகவேண்டும். பாரதியார் சொல்லியபடி ''காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு" என்பதை நாள்தோறும் செய்துபழகவேண்டும். அவர் 'நல்ல பாட்டு' என்று எதைச் சொன்னர்? தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் போன்ற அருள் நூல்களையே அவர் குறிப்பிட்டார். ''ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்" என்பது கோட்பாடு. பல் விளக்குதல், குளித்தல் போல நல்ல தெய்வீகப் பாடல்களை இசைப்பதையும் அன்ருடப் பழக்கமாக நடைமுறையில் கொண்டுவரவேண்டும்.

பஞ்சமகா யக்ஞம் என்று நமக்கு உண்டான கடமைகளைப் பெரியோர்கள் வகுத்து வைத்திருக்கிருர்கள். பூதயக்ஞம் என்பது நம்மைச் சுற்றிலும் உள்ள சிற்றுயிர்களிடம் காட்டும் அன்பைக் குறிப்பதாகும். மாட்டுக்குப் புல் போடுதல், செடிக்குத் தண்ணீர் ஊற்றுதல், பறவைகளைக் கூண்டில் அடைக்காமல் இருத்தல்—இவைபோன்ற செயல்கள் நம் பரிபக்குவத்தைக் காட்டும் அடையாளங்களாகும். நமக்குப் பிறவியும், உருவமும் கொடுத்து, எல்லா வசதிகளையும் தந்து பாதுகாக்கும் பெற்ருேர்களை நாள்தோறும் பணிந்துவணங்கவேண்டும். இது பித்ரு யக்ஞமாகும். அருள் நூல்களை ஓதி நல்லொழுக்கத்தில் உறுதியாக நிற்றலே சான்ருேர்களுக்குச் செய்யும் ரிஷியக்ஞமாகும். தெய்வத்திடம் பக்தியுடன் நடந்துகொள்ளவேண்டும். பிரார்த்தனை, ஜபம், பூஜை முதலியன தேவ யக்ஞம் ஆகும். பசித்தோருக்கு அன்னம் புசிக்கத் தருவது, முதியோருக்கு உதவிகள் செய்வது, நலிந்தோர்க்கு ஆதரவு காட்டுவது போன்ற செயல்கள் நர யக்ஞமாகும். இந்தப்பஞ்ச மகா யக்ஞங்கள் செய்வது ஒருவன் வாழ்க்கையில் முன்னேறத் துணைபுரியும். இவற்றைச் செய்யாதவனை மனம் பண்பட்டவன் என்ருே, ஒழுக்க சீலன் என்ருே நாம் கூற முடியாது. அத்தகையவனுக்கு விழுப்பம் என்பது எந்நாளும் வந்து வாய்க்காது. இந்தப் பஞ்சமகா யக்ஞம் ஒழுக்கத்துக்குரிய செயல்கள் என்றும், இவற்றைத் தவருமல் கடைப்பிடிப்பவனே மேன்மை அடைவான் என்றும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

இவ்விதம் நமது தினசரி வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் சொர்க்கம் என்றும், தேவலோகம் என்றும் மனிதர்கள் சொல்லுகிற

வாழ்க்கையானது நமக்கு இந்தப் பிறவியி லேயே வந்து வாய்க்கும். "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்" என்பது தேவாரம். உடலிலும் உள்ளத்திலும் தூய்மை, சுறுசுறுப்பு, பக்தி, பணிவு, முகமலர்ச்சி, நல்ல விளையாட்டு, உடல் திட்பம், மனத்தெளிவு, அறிவுக்கூர்மை ஆகிய பண்புகள் இயல்பா கவே நமக்கு வந்து வாய்க்கும். மாந்தர்களுக் குள் தலைமை தாங்கும் தகுதியையும் நாம் பெற்றவர்கள் ஆவோம்.

நாள்தோறும் இவ்விதம் உள்ளத்தைத் திருத்தி அமைத்துச் சீரான வாழ்க்கை வாழ் பவர்களுக்கு மெய்ஞ்ஞானமும் சித்திக்கும். அது அதற்கு ஏற்ற சூழ்நிலைகளை அமைத்துத் தந்தால் செடிகொடிகள் எவ்வாறு வளருமோ, அவ்வாறு ஞானமும், ஆன்மீகமும் தோற்றத் துக்கு வரும். அனுபவ ஞானம் என்பதைக் குறித்து கேட்டு ஒரு ஞானியை ஓர் இளைஞன் சென்றடைந்தான். ஞானத்துக் கேற்ற சூழ்நிலையில் ஞானம் வரும் என்றார் குரு. குரு அவருக்குரிய நித்தியக் கடமை களை எடுத்துச் சொல்லி அவற்றைச் செய் தாலே போதும் என்றும், விதையிலிருந்து நாற்று உற்பத்தியாவது போல ஞானம் அதன் போக்கில் தோன்றும் என்றும், ஞானம் என்பது சொல்லி வராது என்றும் கூறினார். இளைஞனும் குருநாதருடன் தங்கி அவர் செல்லும் ஊர்களுக்கெல்லாம் தானும் உடன் சென்றான். அவ்விதம் செல்கையில் ஓர் ஊரில் தங்கியிருந்த சத்திரத்துக்குப் பக்கத்து வீட்டில் ஒரு கள்வன் குடியிருந்தான். கள்வ னின் மகன் "அப்பா, எனக்கு உன் தொழி லைக் கற்றுக்கொடு" என்று கேட்டான். திருடன் "மகனே, அது சொல்லித்தெரிந்து கொள்ள முடியாது. அனுபவத்தில்தான் தெரிந்துகொள்ளவேண்டும். எதற்கும் இன்று இரவு என்னோடு நீயும் வா" என்றான். இது காதில் விழுந்ததும் அன்று என்ன நிகழும் என்று தெரிந்துகொள்வதற்காக இளை ஞன் அவர்கள் அறியாமல் அவர்களைப் பின் தொடரத் தீர்மானித்தான்.

அன்று இரவு திருடனும் அவன் பிள்ளையும் ஒரு வீட்டிற்குத் திருடச்சென்றார்கள். திரு டன் ஒரு வீட்டினுள் நுழைந்து பெரிய நகைப் பெட்டியைத் திறந்தான். தன் மகனைப் பெட் டிக்குள் போகச் சொன்னான். அவன் பெட்டி யில் நுழைந்தவுடன் தந்தை வேண்டுமென்றே அவனை உள்ளே வைத்துப் பழையபடி பெட் டியைப் பூட்டிவிட்டான். பிறகு தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையையும் கிள்ளி விட்டு ஓடிப்போனான். சப்தம் கேட்டு எழுந்த பெரியவர்கள் குழந்தையைச் சமாதானப் படுத்தினார்கள். பாதுகாப்புக்காக ஒரு பெரி யவர் பெட்டியின்மீது படுத்துக்கொண்டார். பெட்டிக்குள் இருந்த சிறுவன் அதன் பக்கங்களைப் பிறாண்டினான். பெரியவர் பெருச் சாளி உள்ளிருப்பதாகக்கூறி கம்பு கொண்டு வரச்சொன்னார். கம்புடன் வந்தவர்கள் பெட் டியைத் திறந்தார்கள். உள்ளிருந்த சிறுவன் ஓ வென்று கூச்சலிட்டுக்கொண்டு குபீரென்று பாய்ந்து வெளியே ஓடினான். ஏதோ பேய் பிசாசு என்று பயந்து பின்வாங்கியவர்கள் பிறகு திருடன் என்பதை உணர்ந்து அவனைத் துரத்திக்கொண்டு ஓடினார்கள். சிறுவன் ஓடு கின்ற வழியில் ஒரு கிணற்றில் பெரிய பாறாங் கல்லைப்போட்டான். தொபீரென்ற சப்தம் எழுந்தது. துரத்தி வந்தவர்கள் அவன் கிணற் றில் விழுந்துவிட்டான் என்று எண்ணிக் கிணற்றை வளைத்துக்கொண்டு நின்றார்கள். சிறுவன் தப்பி வீடுபோய்ச் சேர்ந்து தன் தகப் பனிடம் எல்லாவற்றையும் எடுத்துச்சொல்லித் தான் கொண்டுவந்த நகை மூட்டையையும் காட்டினான். திருடன் "இதையெல்லாம் நானா உனக்குச் சொல்லிக்கொடுத்தேன்?" என்று கேட்டான். பிறவிகள்தோறும் சிறுவன் பெற்றுவந்த வாசனைகள் அவன் உள்ளத்தில் பதிந்துகிடந்தன. அவ்வாசனை வெளிப்படுவ தற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்ததும் அது வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. இதையெல்லாம் பின்னாலிருந்து கேட் டும், பார்த்தும் கொண்டிருந்த சீடன் உண் மையை உணர்ந்த திருப்தியுடன் ஞானியிடம் சென்று யாவற்றையும் கூறிக் காலில் விழுந்து வணங்கினான்.

எனவே ஞானம் பெறுவதற்கு ஏற்ற சூழ் நிலையை நீங்கள் வீட்டிலும் பள்ளியிலும் அமைத்துக்கொள்ளவேண்டும். "உணவு இல் லாமல் பல நாட்கள் என்னால் இருக்கமுடியும்.

ஆனல் பிரார்த்தனை இல்லாமல் ஒருநாளும் இருக்கமுடியாது'' என்று காந்திஜி கூறுவார். தனக்குக்கிடைத்த மாமிசத்துண்டு ஒன்றை எடுத்துக்கொண்டு ஒரு கழுகு பறந்தது. பல பறவைகளும் அதைச்சூழ்ந்துகொண்டு ஓயாமல் இம்சை செய்தன. தற்செயலாக மாமிசத் துண்டு அலகிலிருந்து நழுவிக்கீழே விழுந்ததும் மற்ற பறவைகள் கழுகைவிட்டு ஓடிவிட்டன. எனவே கெட்ட சூழ்நிலையை உதறிவிட்டால் நம்மைச்சுற்றியுள்ள தீமைகளும், துன்பங்களும் நம்மைவிட்டு விலகிப்போகும். விழுப்பத்தைத்தரும் ஒழுக்கம் நிறைந்த தூய்மையான சூழ்நிலையை நம் அகத்திலும், புறத்திலும் உருவாக்க நாம் பயிற்சி பெறுவோமாக. அத்தகைய சூழ்நிலையிலேயே யாண்டும் இருந்தும், வளர்ந்தும் வாழ்க்கையில் நாம் உயர்நிலையை அடைவோமாக. திருவருள் நமக்குத் துணை புரிவது ஆகுக.

கலிக்கூடக் குழந்தைகளுக்கு அறவுரை

குழந்தைகளே, நம்மைச் சுற்றிலும் காகம், கோழி, நாய், பூனை, பசு என்று பலவகைப் பிராணிகளைப் பார்க்கின்றோம். ஒவ்வொன்றுக்கும் உடம்பு ஒவ்வொரு வகையாக இருக்கிறது. குரலும் வேறு வேறு மாதிரி அமைந்துள்ளது. எல்லாப் பிராணிகளுக்கும் எப்படியோ ஆகாரம் கிடைத்துவிடுகிறது. எல்லாப் பிராணிகளும் மனிதனிடம் நட்பாகப் பழகுகின்றன. எல்லாவற்றிலும் மிகப் பெரிய பிராணி எது? யானை. யானைக்குப் பலம் அதிகம். அது கோபித்துக்கொண்டு மனிதனை வீசி எறிந்தால் அல்லது காலில் போட்டு மிதித்தால் அவன் நசுங்கிப் போவான். ஆனல் அவ்வளவு பெரிய யானை மனிதனிடம் அடங்கிப் போய்விடுகிறது. யானைப்பாகன் சொல்லுகிறபடி யெல்லாம் செய்கிறது. அங்குசம் என்ற ஆயுதம் பாகனிடம் இருக்கும்போது தனக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பதையும் அது மறந்து போய்விடுகிறது. மரம் இழுப்பது, பாரம் தூக்குவது போன்ற தனக்குச் சிறிதும் உபயோகமில்லாத வேலைகளையும் அது மிகவும் பொறுமையாகச் செய்கிறது. ஆகவே யானையிடம் பலமும் அதிகம், பொறுப்பும் அதிகம் என்று தெரிந்துகொள்கிறோம்.

நாமும் யானையைப் போலவே பலத்தையும், பொறுப்பையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். யானையை அங்குசம் அடக்குவது போல நம் மனதையும் ஒரு சக்தி அடக்குகிறது. நாம் கெட்டுப் போகாமல் நல்லவழியில் நாலு பேருக்கு உபயோகமாக இருக்கும்படி அது பார்த்துக்கொள்கிறது. அந்தச் சக்தி எப்பொழுதும் நம்மிடம் பேசிக்கொண்டே இருக்கிறது. அந்தச் சக்தியைப்பற்றி எப்படித் தெரிந்துகொள்வது என்று யோசிப்போம்.

வானத்தில் பார்த்தால் நிறைய நட்சத்திரங்கள் தெரியும். ஒவ்வொன்றும் நாம் வசிக்கும் பூமியைவிடப் பல மடங்கு பெரியவை. ஆனல் வெகுதூரத்தில் இருப்பதால் பார்ப்பதற்குச் சிறியவை போலத் தோன்றுகின்றன. அந்த நட்சத்திரம் போல ஜொலிப்பவர்கள் ஞானிகள். விவேகானந்தரும் ஒரு நட்சத்திரம்தான். அவர் வீரமே உருவானவர். நடக்கும் போதும், நிற்கும் போதும், உட்காரும்போதும் அவர் உடம்பு நேராக நிமிர்ந்தே இருக்கும். முதுகு எப்பொழுதும் குனிந்து கூன்விழுந்து கிடந்தால் வீரம் இல்லை என்று அர்த்தம். நீங்கள்யாவரும் நிமிர்ந்து உட்காரப் பழகவேண்டும்.

இப்படி வீரமாக வாழ்ந்த விவேகானந்தர் கடவுள்மீது பக்தி வைத்திருந்தார். முதலில் "கடவுளைக் கண்ணால் பார்க்காமல் நான் நம்ப மாட்டேன்'' என்று அவர் சொல்லிக்கொண்டிருந்தார். அவர் பெரிய படிப்பாளி. நிறையப் படிக்கப்படிக்க அவருக்குப் பக்தியும் அதிகமாகி வந்தது. நம் மனதுக்குள்ளேயே கடவுள் இருக்கிறார் என்பதை அவர் தெரிந்துகொண்டார். நம் கண் எதிரேயும் கடவுள் மனித வடிவத்தில் காட்சி தருகிறார் என்றும் நமக்கு அவர் விளக்கினர்.

தினந்தோறும் நீங்கள் எல்லாரும் கடவுளைப் பார்க்கிறீர்கள். நீங்கள் நன்கு புரிந்துகொண்டு, பயம் இல்லாமல் பழகவேண்டும் என்பதற்காக அவர் எப்பொழுதும் உங்கள் கூடவே இருந்து வருகிறார். அன்னை, தந்தை, அதிதி, குரு என்ற வடிவங்களில் கடவுள் இருக்கிறார். விவேகானந்தர் இன்னும் ஒரு படி மேலே போய் தரித்திரன், மூர்க்கன் ஆகியவர்களும்கூட கடவுளின் வடிவங்கள்தாம் என்று சொன்னர். ஆக, கடவுள் எங்கும் இருக்கிறார், எல்லாரிடத்திலும் இருக்கிறார்

என்பதை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

நீங்கள் எதற்காகப் பள்ளிக்கூடம் வருகிறீர்கள்? படிப்பதற்கு. ஏன் படிக்கவேண்டும்? படித்தால் பெரிய வேலை கிடைக்கும். என்னென்ன வேலைகள் உங்களுக்குப் பிடிக்கும்? டாக்டர், வக்கீல், எஞ்சினியர். சரி, உங்கள் எல்லாருக்குமே அந்தமாதிரி வேலைகள்தான் பிடித்திருக்கிறது. ஆனால் உங்களில் ஒருவர் கூடப் படித்துவிட்டுத் தேசத்திற்குச் சேவை செய்யப் போகிறேம்' என்று சொல்லவில்லை. விவேகானந்தர் பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். ஆனல் கல்லூரியில் படிக்கும்போது தகப்பனர் இறந்ததும் அவர் குடும்பம் ஏழ்மைக்குள்ளாகியது. அப்பொழுது குடும்பத்தை நடத்தும் பொறுப்பு அவருடையதாக வந்து அமைந்தது. அவருடைய குருநாதர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உலகுக்கு உதவும் படிக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளுமாறு அவரை அழைத்தார். குடும்பத்துக்கு உதவுவதா, உலகுக்கு உதவுவதா என்ற கேள்வி விவேகானந்தர் உள்ளத்தில் எழுந்தது. தம் தாயிடமே சென்று இதைப்பற்றிக் கேட்டார். அவருடைய தாயார் "மைந்தா, நீ குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தேசத்திற்காக உழைத்துவா. குடும்பத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்ருர்.

சிறு வயதில் விவேகானந்தருக்கு நரேந்திரன் என்று பெயர். ஒருசமயம் அம்மா சொல்லிக் கொடுத்தபடி அவர் அப்பாவிடம் போய் "அப்பா, எனக்காக என்ன செல்வம் சேர்த்து வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். தகப்பனர் ''நரேன், உனக்காக நான் சேர்த்து வைத்துள்ள செல்வத்தை அதோ அந்தக் கண்ணுடியில் போய்ப் பார்" என்று சொன்னர். கண்ணுடியில் பார்த்தபோது நரேனுக்கு அவருடைய உருவமே தெரிந்தது. தன் கையே தனக்கு உதவி என்பதை நரேன் அப்போது தெரிந்துகொண்டார்.

ஒருமுறை அவர் ரயில்பயணம் செய்தபோது இரண்டு ஆங்கிலேயர்கள் அவரை ஆங்கிலத்தில் பேசிப் பரிகாசம் செய்தார்கள். அவர் அவர்களிடம் ஒன்றும் பேசவில்லை. ஆனல் ரயில் ஓரிடத்தில் நின்றபோது அதிகாரியிடம் ''ஐயா, இங்கே பருகுவதற்கு சுத்தமான தண்ணீர் கிடைக்குமா?" என்று ஆங்கிலத்தில் கேட்டார். உடனே அந்த இரண்டு ஆங்கிலேயர்களும் ''உங்களுக்கு ஆங்கிலம் நன்ருகத் தெரிகிறதே! அப்படியானல் நாங்கள் பகடி பண்ணியும் ஏன் பேசாமல் இருந்தீர்கள்?" என்று கேட்டனர். ''நான் முட்டாள்களைச் சந்திப்பது இதுமுதல் முறை அன்று. ஆகவே தான் பேசாது இருந்தேன்'' என்ருர். அவர்கள் கோபத்துடன் அவரைத் தாக்க வந்தார்கள். விவேகானந்தர் ''நான் அதற்கும் தயார்'' என்று கூறி சட்டைக் கைகளை மடித்துவிட்டுக் கொண்டார். அவர் மிக்க பலசாலி என்பதைக் கண்டதும் அவர்கள் ஒன்றும் பேசாமல் பின் வாங்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள். ஆகவே வாழ்க்கையில் நாம் கோழைகளாக இருக்கக்கூடாது. பேய் பிசாசுகள் இருப்பதாக எண்ணிப் பயப்படக் கூடாது. நாம் தைரியமாக இருந்தால் வாழ்க்கையில் வேகமாக முன்னேறலாம். யானைக்குப் பலமும் உண்டு, அடக்கமும் உண்டு என்று பார்த்தோம். நாம் முரடர்களிடம் பலத்தையும், ஆண்டவனிடம் அடக்கத்தையும் காட்டவேண்டும்.

கோவிலுக்குப் போனல் கீழே விழுந்து நமஸ்காரம் செய்கிறேம். ஆண்டவனிடம் அடக்கமாக இருப்பதை அப்படித் தெரியப்படுத்துகிறேம். அதுபோலவே கண் எதிரே இருக்கும் அம்மாவையும், அப்பாவையும் தெய்வங்களாக எண்ணித் தினந்தோறும் நமஸ்காரம் செய்யவேண்டும். நம் உடம்பைச் சுத்தமாக வைத்துக்கொண்டால் அவர்கள் பார்த்துச் சந்தோஷப்படுவார்கள். நாம் தினந்தோறும் காலையில் மலம் கழிக்கவேண்டும். பிறகு ஆலங்குச்சி, வேலங்குச்சியினல் பல் துலக்க வேண்டும். பற்பசை போட்டால் நாளாக நாளாகப் பல்லெல்லாம் ஆடிப்போய் விழுந்துவிடும். ஆகாரம் சரியான வேளைகளில் சாப்பிட வேண்டும். அடிக்கடி நச்சுத்தீனி தின்றுகொண்டிருந்தால் உடம்பு கெட்டுப்போய் பலவித நோய்கள் வரும். ஐஸ்கிரீம், சாக்லெட் முதலியவற்றை அறவே உண்ணக்கூடாது. நீங்கள் நாள்தோறும் உங்கள் இடத்தைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்யவேண்டும். நன்ருக உடற் பயிற்சி செய்துவிட்டுப் பிறகு குளிக்க

வேண்டும். புத்தகங்களைக் கிழிக்காமல் வைத்தல், தலைமுடி, நகம் ஆகியவற்றை அவ்வப்போது வெட்டுதல், தூய்மையான எளிய உடைகளை உடுத்தல், அன்றாடப் பாடங்களை உடனுக்குடன் முடித்தல், சமையல் அறை போலக் கழிப்பறையையும் சுத்தமாக வைத்தல், கண்காணிப்பாளர் இல்லாமலே நம் கடமைகளைச் செய்தல்—இவை எல்லாம் தக்க பயிற்சிகள் ஆகும்.

நல்ல நூல்களை நிறையப் படிக்கவேண்டும். உங்களுடைய அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆண்டவனை நாள்தோறும் நினைத்தால் நமக்கு அறிவு, ஆற்றல், அன்பு ஆகியன பெருகும். நாள்தோறும் இஷ்ட தெய்வத்தின் படத்துக்கு முன்னால் அமர்ந்து அந்தத் தெய்வத்தின் நாமம் சொல்ல வேண்டும். உலகத்தில் எல்லாரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும். சிறிது நேரம் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்து பழக வேண்டும். படத்துக்கு முன்னால் கற்கண்டு, திராட்சை என்று ஏதாவது நைவேத்தியம் வைத்துப் பூஜை செய்ய வேண்டும். பிறகு எல்லாருடனும் அதைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இப்படியெல்லாம் தினம் தவறாமல் செய்து வந்தால் உங்கள் முகம் எப்பொழுதும் பிரகாசமாக இருக்கும். நீங்கள் நல்ல புத்திசாலிகளாகவும், சுறு சுறுப்பாகவும் இருப்பீர்கள். உங்கள் பேச்சு தெளிவாகவும், செயல் சாதுரியமாகவும் அமைந்திருக்கும். இவையெல்லாம் இருந்தால் நீங்கள் குறைவில்லாத ஆனந்தத்துடனும், தெம்புடனும் திகழ்வீர்கள். பின்பு எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாக வருவீர்கள் நீங்கள் பிறந்த இந்த நாடு உங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசும். இப்படி எல்லா நலன்களும் நிறையப் பெற்று நீங்கள் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் சந்தோஷமாக வாழவேண்டும்.

பள்ளி ஆசிரியருக்கு அறவுரை

கல்லுதல் என்ற வேர்ச் சொல்லிலிருந்து தான் கல்வி என்ற வார்த்தை தோன்றியது. கல்வி கற்பிப்பவரை ஆசிரியர் என்கிறோம். அவர் புதிதாகப் புத்தியை உற்பத்திபண்ணுவதில்லை. செம்பின்மீது படிந்த களிம்பை நீக்கித் துலக்கினால் மீண்டும் பளபளப்புத் தோன்றிவிடும். அதுபோன்றே மாணவனின் அறியாமையை நீக்கினால் அவன் தெளிந்த நல்லறிவைப் பெறுகிறான். மாணவனுக்கு இடையருது தோன்றும் சந்தேகங்களுக்குச் சரியான முறையில் விளக்கம் கொடுப்பது ஆசிரியர் பணி. புத்தகங்கள் ஒரு சில குறிப்பிட்ட விஷயங்களைத் தொகுத்துக்கூறும். ஆனால் ஆசிரியர் தனது சொல், செயல், சிந்தனை ஆகியவற்றினால் ஒரு மாணவனின் எதிர்காலத்தையே உருவாக்குகிறார். அத்தகைய சிறந்த பொறுப்பை வகிக்கும் ஒருவர் தமது குறைநிறைகளை நாளும் சீர்தூக்கிப்பார்த்துத் தம்மைத்திருத்திக்கொள்ளவும் தம்மை உயர்த்திக்கொள்ளவும் கடமைப்பட்டவர் ஆகிறார். மாணவர்களிடத்தில் அன்பு, அறிவு, ஆற்றல் ஆகியன பூரணத்துவம் பெற வேண்டுமானால் முதலில் அவை பெற்றோர்களிடத்திலும் ஆசிரியரிடத்தும் நிறைந்து காணப்படவேண்டும். இக்காலத்திய மாணவன் மிகுந்த புத்திசாலி, வெறும் வார்த்தை ஜாலங்களால் அவனை மகிழ்விக்க முடியாது. நாம் சொல்லுவதும், செய்வதும் வேறு வேறாக இருந்தால் மாணவன் நம் கருத்துக்களை உடனே புறக்கணித்து விடுகிறான். அவனைக் குறை கூறுவதும் அர்த்தமற்ற செயல் ஆகும். கடுமையான போட்டிகளுககிடையே தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளப் போராடிக்கொண்டிருக்கும் அவனுக்குத் தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் ஊட்டும்படி நடந்து கொள்பவர்களையே அவன் மதிப்பான். எனவே அறிவுப்பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் முதலில் தங்கள் அறிவினைக் கூர்மையாகவும், ஆழமுள்ளதாகவும் வைத்துக் கொள்ளவேண்டும்.

அறிவில் தாங்கள் மிக்கார் எனக் கூறிக் கொள்ளும் சிலர் பகுத்தறிவே தங்களது லட்சியம் என்று சாற்றுகின்றனர். பகுததறிவின் பெயரால் மூடக்கொள்கைகளைச் சாடுவதாகக் கூறி அவர்கள் புதிது புதிசாக வேறு மூடத்தனங்களை வளர்த்து வருகிறார்கள். கடவுளை வணங்கவேண்டாம் என்று ஒரு சார்பில் கூறப்படுகிறது மேலை நாட்டு நாகரிகமே மேன்மை வாய்ந்தது என்று மற்றொரு சாரார் கூறுகின்றனர். நடை, உடை, பாவனைகளில் வீண் பகட்டும், பிறருக்குச் செய்யவேண்டிய கடமைகளில்

அசட்டையும் இக்காலத்தில் பெரும்பாலோரிடம் காணலாம். மேலை நாட்டில் நாம் தெரிந்து கொள்ளவேண்டியவை ஏராளமாக இருக்க நாம் வீண் ஆடம்பரங்களையும், கேளிக்கைகளையும் மட்டும் பழகிக்கொண்டுவிட்டோம். மேல் நாட்டவர்கள் சுற்றுச் சூழலின் தூய்மை, காலந் தவறாமை, கடமையில் பிறழாமை, சொன்ன சொல் தவறாமை போன்ற நல்ல இயல்புகளைக் கொண்டிருப்பதால் நாளும் முன்னேறி வருகிறார்கள். இப்பண்புகளைப் படிக்கும் பருவத்திலேயே நம் மாணவர்களிடம் பதியச் செய்யத் தவறிவிட்டோம். ஆகவே நமது பகுத்தறிவு உண்மையில் பகுத்து அறியாத வெற்று அறிவாக இருக்கின்றது.

மார்கரெட்நோபிள் என்ற ஆங்கிலேய மாது விவேகானந்தரின் கருத்துக்களைப் புரிந்து கொண்டு இந்திய நாட்டினருக்காகச் சமூக சேவைசெய்ய முன்வந்தார். அவர் அப்பொழுது தமது நடை, உடை, பாவனை, பெயர் ஆகிய அனைத்தையும் இந்திய கலாசாரத்துக்கு ஏற்ப மாற்றிக்கொண்டார். இந்தியப் பண்பாட்டை நன்கு புரிந்துகொண்டதோடு பல புத்தகங்கள் எழுதிப் பிறருக்கும் அதைப் புரியவைத்தார். மேல்நாட்டில் பிறந்து வளர்ந்த சகோதரி நிவேதிதை ஓர் உண்மையான பள்ளி ஆசிரியையாகத் திகழ்ந்தார்.

அவர் ஒருமுறை விவேகானந்தரும் சுவாமி துரியானந்தரும் மேல்நாடு சென்றபோது தாமும் உடன் சென்றார். அப்பொழுதுதான் முதன் முறையாகத் துரியானந்தர் அயல்நாடு சென்றுகொண்டிருந்தார். அவர் தமக்கு அயல் நாட்டு நாகரிகம் புதிது; ஆகையால் தமக்கு அதைப்பற்றி நன்றாக விளக்கிச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சகோதரி நிவேதிதை "சுவாமி! அது மிக எளிது! பழம் நறுக்கும் கத்தியை உங்களிடம் நான் கொடுப்பதாக இருந்தால் கத்தியின் கூர்மையான பகுதியை நான் பிடித்துக்கொண்டு அதன் கைப்பிடிப் பகுதியை உங்களிடம் நீட்டவேண்டும். இதில் எங்கள் நாட்டு நாகரிகம் அடங்கியிருக்கிறது" என்று கூறி அவ்வாறே செய்து காட்டினார். துரியானந்தரும் "எனக்கு எல்லாம் தெற்றென விளங்கிவிட்டது. இனி விளக்கம் தேவையில்லை. பிறருக்கு இடைஞ்சல் ஏற்படாமல் பழகுவதே மேலைநாட்டுப் பண்பாடுஎன்பதை நான் அறிந்துகொண்டேன்" என்றார்.

குழந்தைகள் பச்சைக் களிமண்ணைப் போன்றவர்கள். அதில் எந்த வடிவத்தையும் உருவாக்கலாம். தகுதியுள்ள பிரஜைகளை உருவாக்குவது ஒரு தெய்வீகப் பணி ஆகும். மற்ற உத்தியோகஸ்தர்கள் எவ்வளவுதான் வருவாய் ஈட்டினாலும் அவர்கள் அசேதனப் பொருள்களோடு மட்டுமே தொடர்பு உடையவர்கள். ஆசிரியரோ சேதனமே வடிவெடுத்த ஆன்மாக்களோடு கலந்து உரையாடுகின்றார். ஆகவே ஆசிரியரைப் பொருத்தமட்டில் பகுத்தறிவு என்பது அடைய வேண்டிய குறிக்கோளாக இல்லாமல் அன்றாடம் அனுசரிக்கவேண்டிய நெறிமுறையாக அமைந்திருக்கவேண்டும்.

நம் நாட்டுப் பண்பு முழுவதும் இராமாயணம், மகாபாரதத்தில் அடங்கியிருக்கிறது. ஆசிரியர் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் அவ் இரு இலக்கியங்களையும் நன்குகற்று வாழ்க்கையில் அவற்றில் கூறியுள்ள பண்புகளை நன்கு கடைப்பிடிப்பார்களானால் அவர்கள் சிறந்த ஆசிரியர்களாக விளங்குவார்கள். அத்தகைய ஆசிரியர்கள் வாழ்வும் போதனையும் மாணவர்களுக்குச் சிறந்த படிப்பினையாக அமையும். நம் நாட்டுப் பண்பைப் புகட்டும் சிறந்த ஆசிரியர் ஆசிரியைகளாக விளங்குவீர்களாக.

செய்திகள்

நிகழ்பவை

ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் அக்டோபர் மாதம் 18ஆம் தேதி வியாழக்கிழமையன்று மாலை 3 மணிக்கு மேல் தீபாவளி விடுமுறைக்காக அவரவர் ஊருக்குப் புறப்படுவார்கள்.

அக்டோபர் மாதம் 24ஆம் தேதி முதல் 29ஆம் தேதி முடிய ஆறு நாட்கள் திருச்செந்தூரில் நிகழும் கந்தர் சஷ்டி விழாவில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் நாமபஜனையும், சொற்பொழிவும் செய்வார்கள்.

1—11—84 வியாழக்கிழமையன்று தீபாவளி விடுமுறைக்குப்பின் ஸ்ரீவிவேகானந்த வித்யாவனக் குருகுலப்பள்ளி திறக்கப்படும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம் பிரசார விலை ரூ.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு ,, ...	21-00
மஹாபாரதம் ,, ...	8-00
இராமாயணம் ,, ...	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ,, ...	6-50
தினசரி தியானம் ,, ...	4-50
ராஜயோக விளக்கம் ...	12-00
கர்மயோக விளக்கம் ...	10-00
பக்தியோக விளக்கம் ...	9-00
ஞானயோக விளக்கம் ...	8-00
விவேகானந்த உபநிஷதம் ...	7-00
பரமஹம்சரின் பெருமை ...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ...	6-00
கடவுளின் வடிவங்கள் ...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1 ...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2 ...	5-50
சகோதரி நிவேதிதை ...	3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ...	3-50
சுவாமி விவேகானந்தர் ...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம் ...	3-00
அனுஷ்டான வேதாந்தம் ...	3-00
எதிர்கால இந்தியா ...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ...	3-00
பஜனைப்பாடல்கள் ...	3-00
தேவரகசியம் ...	3-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம் ஷ்டி ...	3-00
சின்மயானந்த குரு ஷ்டி ...	3-00
ஆனந்தமானபரம் ஷ்டி ...	3-00
சுகவாரி ஷ்டி ...	3-00
மௌனகுரு வணக்கம் ஷ்டி ...	3-00
எங்கும் நிறைகின்றபொருள் ஷ்டி ...	2-50
மலைவளர் காதலி ஷ்டி ...	1-50
பரசிவ வணக்கம் ஷ்டி ...	1-00
கண்ணன் என்னும் கடவுள் ...	2-50
அறம் வளர்த்த நம்பி ...	2-50
சந்நியாசி ...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) ...	2-50
ஹரிச்சந்திரன் ஷ்டி ...	2-00
தவப்புதல்வர்கள் ஷ்டி ...	2-00
பாதுகாபட்டாபிஷேகம் ஷ்டி ...	1-75
விபீஷணன் சரணாகதி ஷ்டி ...	1-50
பரமஹம்சர் பாமாலை ...	1-50
காயத்ரீ ...	1-50
நன்மக்களைப் பெறுதல் ...	1-50
மாணிக்கன் ...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ...	1-25
சைவன் யார்? ...	1-25
*ஆலய வழிபாடு ...	1-25
*ஆத்ம சக்தி ...	1-25
*மனிதனது நிஜசொரூபம் ...	1-25
*சிவதத்துவம் ...	1-25
இறைவணக்கம் ...	1-00
குழந்தைகளின் களிக்கூடம் ...	1-00
இராவண தத்துவம் ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்) ...	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்) ...	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்) ...	1-00
பிரஹ்லாதன் (நாடகம்) ...	1-00
தபோபலன் (நாடகம்) ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும் ...	1-00
நோய்க்கு இடம் கொடேல் ...	1-00
*சக்தி தத்துவம் ...	0-90
*சூரியநாராயணன் ...	0-75
தெய்வீக மகிமைகள் ...	0-75
*முருகக்கடவுள் ...	0-75
வர்ணாச்ரம தர்மம் ...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ...	0-60
*கணபதி ...	0-60
விஷ்ணு தத்துவம் ...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?	0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்) ...	10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ...	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை ...	0-30
கந்தர் அநுபூதி ...	0-25
The Bhagavad Gita (12th Imp.) ...	30-00
Sri Lalithambiha Sahasranama Stotram	15-00
The Indian National Education ...	10-00
Tirukkural (with plastic cover) ...	9-00
Ramakrishna lives Vedanda ...	8-00
Mahaveer Sri Hanuman ...	7-75
The Bhagavad Gita (Small Size) ...	6-00
Man Making Message ...	7-00
Ramayana (with plastic cover) ...	7-00
Mahabharata ,, ...	6-00
Daily Divine Digest (DELUXE) ...	6-00
Daily Divine Digest (Ordinary) ...	4-00
Sri Krishna-The Manifest Divinity ,, ...	6-00
Facets of Brahman or The Hindu Gods ..	5-00
Hinduism Hosts Christianity ...	4-25
Sri Vishnu Sahasranama Stotram ...	4-00
Siva Sahasranama Stotram ...	3-50
Thus Speaks Tayumana Swamigal ...	3-50
*Introducing The Gita ...	2-00
Holy Bible—In the Light of Vedanda ...	1-50
Reminiscences of Master Mahashaya ...	1-50
The Garland of Paraaparam ...	1-50
*Key to Higher Life ...	1-25
*The Student ...	1-25
The Teacher ...	1-00
The School ...	1-00

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

பொருளாதாரத் துறையில் எந்நிலையில் உள்ளவர்களுக்கும் தர்ம சக்கரம் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சகாய சந்தா, சாதாரண சந்தா, டிபாசிட் சந்தா, சர்க்கார் நூல் நிலையங்களுக்கு இலவசமாக அனுப்புதல் ஆகிய முறைகளை நடைமுறையில் வைத்துள்ளோம்.

இன்றைக்குச் சமுதாயத்தில் மக்களுக்கு மனதைத் திருத்தி அமைக்கும் கருத்துக்கள் வழங்கப்படுவது அவசியமாகிறது. மக்கள் மனதிலுள்ள நல்லுணர்வுகளைத் தூண்டி விடவும், மக்களைப் பக்தி வழியில் நடாத்திச் செல்வதற்கும் தர்ம சக்கரம் மக்களில் பல பேருக்குக் கிடைக்க வேண்டும் என்று கருதுகிறோம். தர்ம சக்கர சந்தாதாரர்களின் எண்ணிக்கை அதிகமாகின்றவளவும், தர்ம சக்கரத்தைப் படிக்கின்றவர்களுடைய தொகை அதிகரிக்கின்றவளவும் மக்கள் மனதில் நல்ல திருப்பம் உண்டாகும்.

தர்மசக்கரம் சந்தாதாரர்கள் புதிய சந்தாதாரர்களைச் சேர்ப்பதற்கும், ஆண்டுச் சந்தா முடிவுறும் சந்தாதாரர்களை மீண்டும் புதுப்பிப்பதற்கும் முயல்வார்களானால் அது ஒரு சிறந்த ஞான யக்ஞ கைங்கர்யமாகும். புதிய சந்தாதாரர்களை அறிமுகப் படுத்தி அவர்களையும் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டால் தொடர்ந்து இதழ்களைப் பெற வசதியாக இருக்கும்.

தர்ம சக்கரம் சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் குறைந்த பக்ஷம் மூன்று புதிய சந்தாதாரர்களையாவது தர்ம சக்கரத்துக்குச் சேர்த்துத் தருவது என்று உறுதி செய்து கொண்டு செயல்படுவார்களானால் தர்ம சக்கர சந்தாதாரர்களின் எண்ணிக்கை மிக சுலபமாக உயர்ந்து விடும். எவ்வளவுக்கெவ்வளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்க்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு ஆன்மீகத் துறையில் நீங்கள் நற்பணி செய்தவர்களாகிறீர்கள். சந்தாதாரர்களின் விலாசங்களை எழுதி சந்தா தொகையையும் அனுப்பிவைத்தால் அவர்களைச் சந்தாதாரர்களாகப் பதிவு செய்துகொண்டு மாதா மாதம் முறையாக அவர்களுக்குத் தர்ம சக்கரம் அனுப்பி வைக்கப்படும். தர்ம சக்கரம் சந்தா சேர்க்கும் பணியில் அதிக ஊக்கம் காட்டுமாறு சந்தாதாரர்கள் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சிகளாக இருக்கின்றன. எப்பொழுது வேண்டுமென்றாலும் திரும்பவும் வாசிக்கக்கூடிய ஒரு நூலாக இது அமைந்துள்ளது. ஆகவே சந்தாதாரர்கள் ஓர் ஆண்டின் பன்னிரண்டு தர்ம சக்கரம் இதழ்களையும் பொருளடக்கத்துடன் பைண்டு செய்து வைத்துக்கொண்டால் அது நல்லதொரு புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும், மற்றவர்களுக்குப் படிக்கத் தருவதற்கும் பைண்டு செய்த நூல் நன்கு பயன்படும். விரைவில் உங்கள் புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தக் கோருகின்றோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115

திருச்சி ஜில்லா

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt,